OLIARAZI
மாத சஞ்சிகை

# ஒளி அரசி

இல்லத்தரசிகளின் தோழி
ஒலிஅரசி
நல்லதொரு குடும்பம்
ரூபா 75
ஒளி - 02 இதழ் - 06
மே 2015
பக்கங்கள் : 68 + viii

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வாழ்த்து + பொழுதுபோக்கு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு



ஒரு குழந்தை தாயாகின்றது

தொழிற்சாலை பெண்களே! ஆபத்து அவதானம்...

யார் செய்த குற்றம்?



நட்சத்திர இல்லத்தரசி



இம்மாத மங்கை

நாவுக்குச் சுவையான கேக் இலவச இணைப்பிதழ்

சுயமருத்துவம் பேராபத்தானது



இளையோர் பூங்கா



சாதனை பெண்மணி



வரலாற்றில் பெண்மணி

பெண்களுக்கு எதிரான வன்முறை (கருத்துக்கணிப்பு)

அன்னையர் தின சிறப்பிதழ்

GIRI ELECTRONICS SUPER MARKET

அனுசரணை

KANNA Baby Needs



சுவை அருவி
SUVAI
ARUVI
A FAMILY RESTAURANT
024 - 2227300
No.154, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
ராஜ் கிரனைட்
RAJ GRANITE
White Halayeb
Charme
Ghazal Dark
Ghazal Light
Ghiandone
Hoody Dark
Hoody Light
Karnak Grey
Aswan Black
Aswan Red
Red Nefertary
Rosa Kali
Rosa Shayeb
Rosa Sinai
Royal Red
Sahara Brown
0767505396
No.154, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.

# நுழைவாயில்


04 தாய்மையைப் போற்றும் அன்னையர் தினம்

05 எமது பார்வையில் அன்னையர் தினம்

06 இம்மாத சிறப்புக் கவிஞர்

07 ஜோக்ஸ்

08 எல்லா குழந்தைகளும் அறிவாளிகளே!

09 சித்திரம் பேசுதடி கண்ணம்மா [போட்டி]

10 உறவுகள் சுகமானது [நெடுந்தொடர்]

13 அன்னையர்தின சிறப்பு கவிதைகள்

14 தாதிச் சேவை கடவுளின் கொடை

17 அறிவியல்

19 பத்துவிரல்களும் எமது மூலதனமே [தன்னம்பிக்கை]

21 சிவகாமியின் சபதம் [சரித்திர நாவல் தொடர்]

24 ஆன்மிகம்

25 அறியாமலே... [குறும்படம்]

26 நூறிலும் சாதனை

27 சந்தேகம் [நிமிடக் கதை]

28 பாரம்பரியமாக தொடரும் மூடநம்பிக்கை

30 இருட்டில் வைத்த குறி [கிரைம் தொடர்]

34 திட்டமிடலும் விடாமுயற்சியுமே வெற்றியின் இரகசியம்

36 வறுமை சாதனைக்குத் தடையல்ல [சாதனை மாணவி]

37 அறிவியல் சிரிப்பு

38 விவாத அரங்கு

41 நலம்தானா? கேள்வி பதில்

43 வண்ணக் கோலங்கள்

44 உலகம் உருவானது எப்படி?

49 குறுக்கெழுத்துப் போட்டி

50 சோதிடம்

52 குக்கிராமம் நகரமாகிறது [கிராம அலசல்]

54 அம்முவின் கேள்வி பதில்

55 நகப்பூச்சுகளும் சுத்திகரிப்பும் [அழகுக் குறிப்பு]

56 நந்தவனப் பூக்கள் – இனிக்கும் இல்லறம்

59 சுவைக்க சமைப்பது எப்படி?

60 தையல் கலை

61 தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள்

65 இளையோர் பூங்கா


66 பிறந்தநாள் வாழ்த்துக்கள்




பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அகத்திலிருந்தா? புறத்திலிருந்தா?

ஒளிஅரசியின் கருத்துக்கணிப்பு 58 ஆம் பக்கத்தில்...







# தாய்மையைப் போற்றும் அன்னையர் தினம்

வருடாந்தம் மே மாதத்தில் வரும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை உலகளாவிய ரீதியில் 'அன்னையர் தினம்' அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கி.மு. 250 ஆண்டுகளுக்கு முன்னர் உரோமப் பேரரசின் காலத்தில் மார்ச் மாதம் 15ஆம் திகதிமுதல் 18ஆம் திகதிவரை அன்னையர் தினம் கொண்டாடப் படுவதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. 16ஆம் நூற்றாண்டில் 'கீரிஸ்' நாட்டில் 'அன்னையர் ஞாயிறு' என்று முதன் முதலாக அனுஷ்டிக்கப்பட்டது. இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் இன்றும் மார்ச் மாதத்திலேயே அன்னையர் தினம் கொண்டாடப்படுகின்றது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற பெண்ணும், சமூக சேவகியுமான 'அன்னா மரியா ரிவீஸ்ஜார்வில்' என்பவரால் உலகெங்கும் வாழும் அன்னையர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இக்கருத்தை வரவேற்று அமெரிக்காவில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது.

1914ஆம் ஆண்டு முதல் அகில உலகிலும் அன்னையர் தினம் அதிகாரபூர்வமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த அன்னையர் தின அனுஷ்டானம் மேலைநாட்டுக் கலாசாரம் என்ற விமர்சனங்கள் எம் மத்தியில் எழுந்தாலும்கூட எமக்காகவே வாழ்ந்து - தம் வாழ்நாட்களை தன்னலம் கருதாது எமக்காகவே அர்ப்பணித்த அன்னையர்களுக்காக விசேடமாக ஒருநாளை ஒதுக்கிச் சிறப்பிப்பதில் தவறேதுமில்லை எனலாம்.

அன்னையர் தினத்தைக் கொண்டாடி மகிழ்வது வரவேற்கத்தக்கதுதான். பாலூட்டி, சீராட்டி, கல்வி, கலாசாரங்களையெல்லாம் ஊட்டி வளர்த்த அன்னையர்களை வாழ்த்துவது மேன்மையான விடயம். அவர்களை வாழ்த்தி இதயபூர்வமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வது எவருக்குமே இலகுவில் கிடைப்பதில்லை.

பெற்றோரைப் பிரிந்து தொலைவில் வாழும் பிள்ளைகள், திருமணமாகி தங்கள் குடும்பத்தோடு வெளிநாடுகளில் வாழும் பிள்ளைகள், சூழ்நிலைகள் காரணமாக முதியோர் இல்லங்களில் பெற்றோரை ஒதுக்கிவிட்ட பிள்ளைகள் தொலைபேசியினூடாக வாழ்த்து மடல்கள் அனுப்புவது மூலமும் அன்னையர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மேலைத்தேய நாடுகளைப்போன்று இன்றைய இளைய தலைமுறையினர் மலர்க்கொத்துகள், வெகுமதிகள் என்பனவற்றை அன்னையர் தினத்தன்று மட்டுமே வழங்கி வாழ்த்துத் தெரிவிப்பது வழக்கமாகும். சிலருக்கு அன்றைய தினம் மட்டுமே அன்னையர் ஞாபகத்துக்கு வருகின்றமை கவலைக்குரியதாகும்.

பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் மட்டுமன்றி, தனிக்குடித்தனம் செய்யும் பிள்ளைகள்கூட சூழ்நிலைகள் காரணமாக அன்னையரைக் கைவிடக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எத்தனையோ வயோதிப பெற்றோர் தனியாகவோ, முதியோர் இல்லங்களிலோ வாழவேண்டிய நிலையிலுள்ளனர்.

நோய்நொடிகளினால் பாதிக்கப்பட்டாலோ வேறு எந்தப் பிரச்சினைகள் என்றாலும் அவர்களே கவனம் செலுத்தவேண்டியவர்களாக உள்ளனர். செய்வதறியாது தடுமாறும் தாய்மார்களும் ஏராளம். பிள்ளைகள் நோயாளிகளான - வயோதிபர்களான அன்னையரை பராமரித்து கரிசனை செலுத்துவதுமில்லை.

தாய்மையைப் போற்றும் முதுமொழிகள், பாடல்கள், கவிதைகள் எம்மைக் கவர்ந்த போதிலும் நடைமுறையில் சாத்தியமாயில்லை.

தாய்மையைப் போற்றி அவர்களது உணர்வுகளை மதித்து அன்புடன் பாசமாக வாழ்ந்து அன்னையரை வாழ்த்துவோம்.

## பல மாற்றங்களுடன் ஒளி அரசி

கடந்த மாதம் வாசகர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பிற்கு இணங்க ஆக்கங்களில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒருசில ஆக்கங்கள் நீக்கப்பட்டு - குறைக்கப்பட்டு மேலும் பல பயன் மிக்க ஆக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்படி மாணவர்களுக்கு ஏற்ற வண்ணக்கோலங்கள், பாலர்களுக்கு ஏற்ற இளையோர் பூங்கா, அனைத்து வகுப்புக்குமான 'சித்திரம் பேசுதடி கண்ணம்மா' எனும் ஓவியப்போட்டியும் (சான்றிதழுக்கானது) இதைவிட பெண்ணியம் தொடர்பான ஒளி அரசியின் கருத்துக்கணிப்பும் (மாதம் ஒன்று), சிறப்புக் கவிஞர் பக்கம், கிராமங்களின் பெருமையைப் பேசும் கிராம அலசல், 'சிவகாமியின் சபதம்' எனும் தொடர்கதையும், சிறப்புப் பேட்டிகளும் புதிதாக இவ்விதழில் இடம்பிடித்துள்ளதுடன், இந்திய சஞ்சிகைகளுக்கு ஈடாக 08 பக்க வர்ணப் பதிப்புடன் வீட்டுக்குத் தேவையான (இல்லத்தரசி உட்பட்ட அனைவருக்கும்) சிறப்பு இலவச இணைப்பிதழ் ஒன்றும் ஒவ்வொரு மாதமும் வெளிவருகின்றது.

அந்த வகையில் இம்மாத சிறப்பு இணைப்பிதழாக பிரபல சமையல் கலை எழுத்தாளர் பதார்த்தகுணா 'ஒளி அரசி' வாசகர்களுக்காக தொகுத்து வழங்கிய 06 வகையான கேக் தயாரிப்பு முறைகள் தொடர்பாக வெளிவந்துள்ளது. எனவே, இந்த மாற்றங்களை உங்கள் நண்பர்களுக்கும் கூறி ஒளி அரசியின் பயனை அவர்களும் பெற உதவிடுங்கள்.

# நல்ல பிள்ளைக்கு என்றும் அன்னையர் தினமே!

## இதற்கான பொறுப்பும் அதே அன்னையிடமே!

அன்பான இல்லத்தரசிகளே!

உங்கள் அனைவருக்கும் (மே 10ஆம் திகதி) அன்னையர் தின வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் ஒளி அரசி அகமகிழ்கின்றாள். கடந்த மே மாத (2014) இதழில் அன்னை என்பவள் யார்? ஏன் அவ்வாறான ஒரு தினம் தேவை? அதன் முக்கியத்துவம் என்ன? எவ்வளவு தூரம் அன்னையானவள் மதிக்கப்படுகிறாள் என்றெல்லாம் விலாவாரியாக விபரித்திருந்தோம். அதற்கு ஒரு படி மேல் சென்று இம்மாதம் சீரிய கருத்தொன்றை அன்னையர்கள் விளங்கிக்கொள்ளவேண்டும் என ஒளி அரசி எதிர்பார்க்கிறாள்.

மேலே தலைப்பில் சொல்லியபடி நாம் வெறுமனே ஒரே ஒரு நாள் அன்னைக்கு விழா எடுத்துவிட்டு ஏனைய நாட்களில் அவர்களைக் குறைத்து மதிப்பிட முடியாது. அதாவது, ஓர் அன்னை பிள்ளையை 365 நாட்களும் எந்தக் குறைவுமின்றிய அன்பையும், அறிவையும், உணவையும் ஊட்டி வளர்க்கும் போது பிள்ளைகள் மட்டும் ஏன் ஒரு நாள் அவர்களுக்கு விழா எடுக்கவேண்டும். குடும்ப அன்பியல் கோட்பாட்டுக்கு இது தவறாகலாம் அல்லவா? எனவேதான் அன்னையானவள் தமது பிள்ளைகளால், சமூகத்தால் வருடம் முழுவதும் சிறப்பாக போற்றப்படவேண்டிய ஒரு புனிதவதியாவாள். அன்பான நற்பண்புமிக்க பிள்ளைகளுக்கு என்றுமே அன்னையர் தினமே ஆகும் என ஒளி அரசி தெளிவுபடுத்துகிறாள்.

365 நாட்களும் பிள்ளைகள் அன்னையர் மீது அன்பும், பாசமும், மதிப்பும் காட்டக்கூடியவாறு அவர்களை வளர்த்தெடுப்பதும் அன்னையர் கைகளிலேயே உள்ளது. எனவே, அன்னையர் தினத்தின் வெற்றி, மகத்துவம் அன்னையர் கைகளிலேயே தங்கியுள்ளது.

உங்கள் பிள்ளைகள் நற்பிரஜைகளாக தேவையான எல்லா வழிகளையும் முடிந்தவரை ஏற்படுத்திக்கொடுத்து கவனத்துடன் வளருங்கள். பிள்ளைகளும் உங்களை எந்தக் குறைவுமின்றி பாதுகாப்பார்கள். இதுவே உலக நியதி.

- ஆசிரியர் குழு -


**"ஒளி அரசி"**

இல்லத்தரசிகளின் தோழி

**மாதம் ஒரு முறை**

**மே 1 - 31, 2015**

நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிறைவேட் லிமிடட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**வடிவமைப்பு:**

எஸ். கஜரூபன், எஸ். ஏ. றெனிபேட்

**ஆசிரிய பீடம் :**

தொலைபேசி: 011 5738855, 071 8628369

தொலைநகல்: 011 5517945

E-mail: oliarazi33@gmail.com, editoroliarazi@gmail.com

**விளம்பரப் பிரிவு :**

கொழும்பு : 078 8864730, 071 4114997 வட மாகாணம் : 021 5671111

**விநியோகப் பிரிவு :**

கொழும்பு : 011 5737592, 071 8628379

வட மாகாணம்: 021567222, 0776569617, 071 6182182

**சந்தா விபரம்:** உள்நாட்டு 1200/= வெளிநாடு யூ.எஸ்.ஏ. 30 டொலர், யூ.கே. 20 ஸ்ரேலிங் பவுண்

**கடித தொடர்புகளுக்கு :** ஆசிரியர், 'ஒளிஅரசி'


85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.

# சுதந்திரம்




ஒளி அரசியானது நல்ல கருத்துக்களை சமுத்திற்கு சமர்ப்பிக்கும் கவிஞர்களை ஊக்கப்படுத்தி அவர்களை அறிமுகப்படுத்துவதற்காக இந்த சிறப்புப்பக்கத்ததை ஆரம்பித்துள்ளது அந்த வகையில் மே மாதத்திற்காக சாய்ந்தமருதுவை சேர்ந்த பிரகாசக்கவி அன்வர் இப்பக்கத்தில் பாராட்டப்படுகின்றார்.

ஒரு சொல்
ஏட்டில் எழுதப்பட்டிருந்தது
அந்த சொல்
நானும் நீங்களும்
காதால் கேட்டும்
வாயால் மொழிந்தும்
கண்களாலும் கால்களாலும்
வலைவீசி
தேடிய ஒரு சொல்
காந்திக்கு முன்னும் பின்னுமென
பலரும் சுவாசித்த
ஒருசொல்தான் அந்தச்சொல்
என்றாலும்
இன்றும் நாளையும்
பலருக்கும் எட்டாக்கனியான
ஏற்றமிகு சொல்லும் இதுதான்
இந்த சொல்லின்
மகத்துவம் பற்றியும்
அதன்
தேவை பற்றியும் தெரிந்துகொள்ள
பேராசிரியர்களோ
அல்லது
பெருந்தலைவர்களோ
எனக்கு தேவை இல்லாததால்
ஈழத்தில் இருந்தும்
பலஸ்த்தீனத்தில் இருந்தும்
இரு பிஞ்சுகளை அழைத்து
அந்த சொல்லை
அவர்கள் கரங்களில் திணித்தேன்
அதற்கு பகரமாய் அவர்கள்
யாரால்?
யாருக்கு?
எச்சந்தர்ப்பத்தில்? என்று எழுதிய
வினாக்களை என்கையில்
தந்துவிட்டுப் போகிறார்கள்...



**பிரகாசக்கவி எம்.பி.அன்வர்**
மாலிகைக்காடு சாய்ந்தமருது.
கவிதை புத்தகம் : தடம் தொலைத்த தடையங்கள்.
**தொ : 0775896700**

**கவிஞர்களுக்கு ஒரு நற்செய்தி**

நீங்களும் இப்பகுதியில் சிறப்புக் கவிஞராக விரும்பினால் உங்களால் வெளியிடப்பட்ட ஒரு கவிதைப் புத்தகத்துடன் சமூகம் சார்ந்த இரண்டு கவிதைகள் எழுதி ஒளிஅரசிக்கு அனுப்புங்கள்.

அர்த்தமே வேறுதான்...



பூ வாங்கி பொண்ணு தலையில பையன் வச்சு விட்டா திருமணமான ஜோடின்னு அர்த்தம்.

பூ வாங்கி பையன் காதுல பொண்ணு வச்சு விட்டா காதலிக்கிற ஜோடின்னு அர்த்தம்...



கோவிலுக்குள் ஏன் தெரியுமா செல்போன் கொண்டுபோகக் கூடாதுன்னு சொல்றாங்க?

இல்லைனா சாமி கும்பிடுரவங்கள விட சாமி முன்னாடி நின்னு செல்பி எடுக்குறவங்க தான் அதிகமா இருப்பாங்க...

மொழிப் பிரச்சினை...




என் மகன் ஜெயில்ல இருக்கான்...

ஏன்?

ஒரு மொழிப் பிரச்சினைல மாட்டிக்கிட்டான். அதான்.

என்ன மொழிப்பிரச்சினை?

தேன் மொழிய கெடுத்துட்டான்.





கிளினிக் உள்ளே என்ன சத்தம்?

டாக்டர் பல்லைப் புடுங்கிறார்...!

திரும்ப, ஐயோ அம்மான்னு சத்தம் கேட்குதே?

இப்ப பர்ஸைப் புடுங்கிற்றார்...!



இந்த ஆஸ்பத்திரியிலதான் என் கணவரைப் பறிகெடுத்தேன்...

ஐயோ பாவம்... ஆபரேசன்ல இறந்துவிட்டாரா?

இல்ல... நர்ஸைக் கூட்டிட்டு ஓடிப்போயிட்டார்...!

# எல்லா குழந்தைகளும் அறிவாளிகளே!

[சென்றமாத தொடர்ச்சி]

**நுண்ணறிவுத்திறனைக் கண்டறிவதில் பெற்றோரும் ஆசிரியரும்**

பெரும்பாலான பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைக்கு என்ன திறமை இருக்கிறது என்பதே தெரியாது. வேறு எவராவதுதான் அந்தத் திறமையைக் கண்டுபிடித்துச் சொல்லவேண்டிய நிலை உள்ளது. மேலும், குழந்தையின் திறமையைவிட அவர்களுக்கு மதிப்பெண்தான் பெரிதாக இருக்கிறது. ''என்னிடம் சிகிச்சைக்காக வரும் பெற்றோர்கள், குழந்தை படிக்கவில்லை என்பதை ஒரு பிரச்சினையாகக் கொண்டுவருவார்கள். அந்தக் குழந்தைக்கு வயது 4 - 5 இருக்கும். சரியாக A, B, C, D சொல்லவரவில்லை என்பதை எல்லாம் ஒரு பிரச்சினையாகப் பார்க்கிறார்கள். பெரும்பாலும் தேர்வு, மதிப்பெண் இதை மட்டுமே யோசிப்பதால், குழந்தைகளின் திறமைகள் கவனிக்கப் படாமலேயே போய்விடுகின்றன'' என்கிறார் குழந்தை மனநல ஆலோசகரான தேவகி.

பெற்றோரால் குழந்தைகளின் நுண்ணறிவுத் திறனும், திறமைகளும் கண்டறியப்படுவது சாத்தியமற்ற ஒன்றாக இருக்கிறது. இன்றைய குழந்தைகள் பெரும்பாலும் பெற்றோர்களின் விருப்பங்களுக்காகவே வளர்த்தெடுக்கப்படுகின்றனர். தன் குழந்தை ரியாலிட்டிஷோவில் பாடி புகழ்பெறவேண்டுமென விரும்பும் பெற்றோர் வலுக்கட்டாயமாக இசைத்திறனை அந்தக் குழந்தை மேல் திணிக்கின்றனர். திணிக்கப்படும் எந்தவொரு திறமையும் ஒருவருக்கு வதையே. இதனால் எதிர்காலத்தில் எதிர்மறையானவர்களாக மாறவும் வாய்ப்புள்ளது. அதனால் குழந்தைகளை நெருக்கமாகக் கண்காணித்து அவர்களின் செயற்பாடுகள் வழியாக நுண்ணறிவுத்திறனை கண்டறிய வேண்டியது பெற்றோரின் கடமையாகிறது.

இன்றைய கல்வி முறையில் குழந்தைகளின் நுண்ணறிவு சிதைக்கப்பட்டு அவர்கள் பாடங்களை மனனம் செய்யும் இயந்திரங்களாக மாற்றப்பட்டுள்ளனர். எல்லா குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான கற்றல் முறையையே பாடசாலைகள் பின்பற்றுகின்றன. காட்சி வழியாக விடயங்களைப் புரிந்துகொள்ளும் குழந்தைக்கு எவ்வளவுதான் கத்திக் கத்திச் சொல்லிக் கொடுத்தாலும் புரிந்துகொள்வதில் தடையிருக்கும். ஆனால், படங்கள் ஓவியங்களைக் காட்டினால் அந்தக் குழந்தை உடனே புரிந்துகொள்ளும். குழந்தைகளின் ஐக்யூ அளவு அதிகமாக இருப்பதாகக் கூறப்படும் இந்தக் காலத்தில் ஏன் நிறைய சாதனையாளர்கள் உருவாவதில்லை என்ற கேள்விக்கு நமது கல்வி முறையையே குறையாகச் சுட்டிக்காட்டுகின்றனர் கல்வியாளர்கள்.

குழந்தைகளின் திறமையைக் கண்டறிவதில் பெற்றோருக்கு இணையாக ஆசிரியருக்கும் பங்குள்ளது என்கிறார் ஓர் அரசு பாடசாலை ஆசிரியர்.

''பாடசாலையில் குழந்தைகளின் படைப்புத் திறனை வெளிப்படுத்த ஒரு சிறிய இடம் கொடுக்கப்பட்டால்போதும். அவர்கள் நம்மை தம் திறமைகளால் திணறடித்து விடுவார்கள். என் வகுப்புக் குழந்தைகளிடம் தினமும் நூறு திறமைகளை நான் பார்க்கிறேன்'' என்று கூறும் ஆசிரியர், ''என்னைப் பொறுத்தவரை கதை சொல்லத் தெரியாத குழந்தைகளே கிடையாது. இதை நிறைய பேர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். காரணம், இவர்கள் கதை என ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு அந்த வடிவத்தை குழந்தைகளிடம் எதிர்பார்ப்பதால்தான் இந்தச் சிக்கல்.


இது தவிர, கவிதை சொல்லும் திறமை. பாடசாலையைச் சுற்றியிருக்கும் மரக்கிளைகளை - பூக்களை வைத்து பூங்கொத்து செய்யும் திறமை, புதுப்புது விளையாட்டுகளை உருவாக்கும் திறமை, இடத்தை அழகுபடுத்தும் திறமை, வகுப்பில் குச்சி, தட்டு கிடைத்தால் அதை வைத்து தாளம் போடுதல். பாட்டு பாடும் திறமை, புதுமையாக நடனமாடும் திறமை, குறி பார்த்து எறியும் திறமை இப்படி ஏராளமான திறமைகளை நான் தினமும் வகுப்பறைகளில் பார்க்கிறேன். குழந்தைகளின் நுண்ணறிவைப் பார்க்க ஆசிரியரின் கண்கள் தயாராகவேண்டும்'' என்கிறார் அவர்.

''கல்வியின் நோக்கமானது நுண்ணறிவுத் திறன்களை வளர்ப்பதுடன், குழந்தைகளிடம் மேலோங்கியிருக்கும் நுண்ணறிவுத்திறன்களுக்கு ஏற்ப இலக்குகளை அவர்கள் அடையவும் உதவுவதாக இருக்கவேண்டும். இவ்வாறு வளர்த்தெடுப்பவர்கள் சமூகத்துடன் மிகவும் இணைந்தவர்களாகவும், ஆரோக்கியமாகப் போட்டியிடும் திறன் கொண்டவர்களாகவும், இதன்மூலமாக சமூகத்துக்கு ஆக்கபூர்வமான வழிகளில் பங்களிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்'' என்கிறார் கார்ட்னர்.

இத்தகைய கற்றல் முறையை குழந்தைகளுக்கு அளிப்பதற்கு நாம் செல்லவேண்டிய தொலைவு மிக அதிகம். ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொரு ஆசிரியரும் குழந்தைகளின் நுண்ணறிவைக் கண்டறிவதில் ஆர்வமுடன் ஈடுபட்டால்தான் உலகம் போற்றும் திறமைசாலிகளாக அவர்கள் மிளிர்வார்கள். நம்புங்கள் எல்லாக் குழந்தைகளும் அறிவாளிகளே; உங்கள் குழந்தையும் அறிவாளியே. ■

# துணிச்சலான கேள்விக்கு என்ன பதில்?

## பிரிட்டிஷ் பிரதமரையே தடுமாறவைத்த 10 வயதுச் சிறுமி



பிரிட்டனில் மே மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரிட்டிஷ் பிரதமரான டேவிட் கேமரூன் கன்சவெட்டிவ் கட்சி சார்பாக மீண்டும் போட்டியிடுகின்றார். அண்மையில் மான்செஸ்டர் நகரில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டபோது பத்து வயதான பள்ளிச் சிறுமி ஒருத்தி மிகவும் தைரியமாக ஒரு கேள்வியை பிரதமரிடம் கேட்டு சற்றுத் தடுமாறவைத்தார்.

இந்திய வம்சாவளியான ரீமா என்னும் சிறுமி, ''உங்களைத் தவிர்த்து வேறு ஒருவர் பிரதமராக வரவேண்டுமென்றால் நீங்கள் யாரைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன் அவரைத் தெரிவுசெய்வீர்கள்?'' என்ற கேள்வியைக் கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு பிரதமர் சில நிமிடங்களின் பின்னர், ''இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது கஷ்டம் எனவும், எனவே, பதிலளிக்கப் போவதில்லை எனவும் கூறி, நாட்டில் சிலர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். வேறொருவர் பிரதமராக வர வேண்டும் என்று நான் நினைத்திருந்தால் இந்தத் தேர்தலில் நான் போட்டியிட்டிருக்க மாட்டேன்'' - என்றார்.

மேலும் பிரசாரம் முடிந்து கிளம்பும்போது தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுள் இதுவே தலைசிறந்த கேள்வியாகும் என சிறுமியின் சாமர்த்தியத்தைப் பாராட்டினார்.

# ஐந்து வயதிலும் தளராத முயற்சி


## அண்ணாவின் சிகிச்சைக்கு பணம் சேகரிக்கும் தங்கை




அமெரிக்காவில் ரொண்டோ நகரைச் சேர்ந்த நடாவ் என்னும் 7 வயதுச் சிறுவனுக்கு இரண்டு வயதாக இருந்தபோது நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் (ஏஞ்சல் மேன் சிண்டரோம்) கொடிய நோய் தாக்கியது. இதனால் சிறுவனின் மூளை பாதிக்கப்பட்டு, பேச்சுத்திறன் செயற்திறன் தடைபட்டது. சிறுவனுக்கு மேலதிக சிகிச்சையளிக்கப் போதிய பொருளாதார வசதி இல்லாததால் அவனது பெற்றோர் சோகத்தில் ஆழந்தனர்.

ஆனால், இவர்களது கவலையைக் கண்ணுற்ற 5 வயது மகள் மிகவும் தைரியமாக பெற்றோருக்கு உதவ முன்வந்தாள். தெருவோரத்தில் பெற்றோர் வைத்திருந்த குளிர் பானக் கடையில் கோடைகாலத்தில் எலுமிச்சம் பழச்சாறும், குளிர்காலத்தில் சூடான சொக்லட் பானமும் விற்று வியாபாரம் செய்துவந்தாள்.

நாமா உஸான் என்னும் இந்தச் சிறுமி தனது தமயனுக்கு சிகிச்சையளிக்க சுமார் 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களைச் சேகரித்துள்ளார். மேலும் இந்தச் சிறுமியின் முயற்சியை அவதானித்த கடைக்கு வரும் வாடிக்கையாளர்களில் ஒருவரும் 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




# உறவுகள் சுகமானது

அவனது பேச்சும், செயலும் ஸ்வேதாவிற்குள் ஒரு நெகிழ்ச்சியை உண்டுபண்ணின.

''மேடம் மதுவிழி கன்ஸ்றக்சனோட வேலை எப்பிடி மேல கொண்டுவரேன் பாருங்க. இன்ர நசனல் லெவல்ல உங்க பேர் வரப்போகுது'' என்றவனிடம்,

''இல்ல அதெல்லாம் என்னோட ஆசை இல்லை. இதோட வருமானத்தில அரைவாசி அநாதை ஆசிரமம், திக்கற்றவர் இல்லம், கிராம சிறார் மேம்பாட்டு நிலையம் எல்லாத்துக்கும் போகுது, வருமானம் கூடினா நான் சொன்ன மூன்டுக்கும் கொஞ்சம் கூடுதலான தொகை போகும். அது போதும் எனக்கு என்றாள்''

ஸ்வேதாவை ஆழமாகப் பார்த்தான் அஸ்வந். ஆனால், எதுவுமே பேசவில்லை.

''அஸ்வந் காப்பி றிங்ஸ் ஏதாவது...''

''நோ... நோ... எதுவும் வேண்டாம். பிறகு மீற் பண்ணலாம். ஓகே.'' என்றபடி விரைந்தான்.

அவசரமாய் புறப்பட்டு வந்த அஸ்வந் ஒன்று இரண்டல்ல. ஒன்பது - பத்து கடைகள் ஏறி இறங்கி மதுவிழியின் நிறத்துக்கும், உடல் அமைப்பிற்கும் ஏற்ற நிறத்தில் அழகான புடவை ஜுவல்லரியில் சின்னப் பரிசுப்பொருள் ஒன்றையும் வாங்கிக்கொண்டு அறைக்கு விரைந்தான்.

மாலை வெயில் அந்த இடத்தையே அழகு படுத்திக்கொண்டிருந்தது. ஆடம்பரமான அந்த ஹோட்டல் வாசலில் மதுவிழிக்காகக் காத்து நின்ற அஸ்வந், சம்யுக்தாவோடு வந்துகொண்டிருந்த மதுவிழியைக் கண்டதும் சட்டென பிரகாசமானான். இதயத்திலோ பனிக்கட்டியின் குளிர்மை. சற்று இடைவெளி விட்டு அவர்களின் முன்னால் நடந்தவன் மூலையில் ஓரளவு மறைவான இடத்தில் அமர்ந்துகொண்டான்.

சம்யுக்தா வேறொரு மேசையில் அமர்ந்துவிட அஸ்வந்தின் எதிரே அமர்ந்தாள் மதுவிழி.

''துவி... நீ வருவியோ, மாட்டியோன்னு ஒரே ரென்சன். அப்பாடா வந்திட்டே. தாங்ஸ்டா'' என்றான்.

''எதுக்கு தாங்ஸ் எல்லாம்? முறைக்கு நான்தான் தாங்ஸ் சொல்லணும்''

''ஏன்...?''

''அண்டைக்கு பூங்காவிலகூட உங்களோட மனசு வேதனைப்படுற மாதிரிதான் ஏதேதோ பேசிட்டன். உங்களைப் பாக்கவேணும். பேசணும்

எண்டு எவ்வளவு தவிப்பு. இப்பிடி ஒரு சான்சை நீங்களே தந்ததுக்கு...''

''அப்பிடியா.... சரி என்ன சாப்பிடலாம்?'' ஐஸ்கிறீம் பிடிக்கும். அது தெரியும். அதவிட சாப்பிட என்ன சொல்லு?''

''உங்களுக்கு என்ன பிடிக்கிதோ அதையே எனக்கும் சொல்லுங்க....''

அவளையே பார்த்தபடி புன்னகைத்தான்.

''அஸ்வந்... சம்யுவுக்கும்....'' அவள் சொல்லி முடிக்கும் முன்னர் கண்களால் அவன் ஜாடை காட்டியபோது மெல்லத் திரும்பிப் பார்த்தாள். சம்யுக்தா அமர்ந்திருந்த அதே மேசையில் அருகருகே தீபக்கும் வேறொரு ஆணும் அமர்ந்து சம்யுக்தாவோடு 'கலகல' என பேசிச் சிரித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

''பாத்தியா, யாருன்னு தெரியாதவங்ககூட சம்யுக்தா எப்பிடி கலகலன்னு பேசிட்டிருக்கா. நீ என்னடான்னா இவ்வளவு தெரிஞ்ச பிறகுகூட என்னோட பேச எவ்வளவு தயக்கம்?''

அவளது
மௌனப்புன்னகை
மெல்லிய வெட்கச்
சிரிப்பு நாணத்தின்
பொருள் விளங்க
அவள் போட்ட
கோலம்.....

''அவ சுபாவம் அப்பிடி. நான் என்ன பண்ணட்டும்? ஆனா ஒரேயடியா தெரியாதவங்களோட அவ பேச மாட்டா. அண்ணா இருக்கிறதால தான்''

''ஓ.கே. ஓ.கே. உன்னோட நண்பியை நான் தப்பா சொல்ல வரல்ல. யதார்த்தமா அவ பழகிறதை சொல்றன்.''

''நானும் உங்களை தப்பா சொல்லலை. அவ கரெக்டர்ல எந்தத் தப்பும் இல்லாதவள்னுதான்... சொறி''

''ஏய் துவி. இது ஒரு சின்ன விசயம். இதுக்குப் போய் சொறி சொல்லிட்டு அந்தளவுக்கு அந்நியனா தெரியிறனா நான்?''

''அதுக்கில்ல அஸ்வந். எவரைப் பத்தியும் நீங்க தப்பா நினைக்கக் கூடாதேன்னுதான்'' என இழுத்தாள்.

''துவி, உன்னைப் போய் எவராவது பிழை சொல்லுவாங்களா. இல்ல சம்யுவை பிழை சொல்லமுடியுமா? அவ உன்னோட நண்பியாச்சே. சரி, சரி இப்பிடி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தா டைம் போயிடும். போகட்டான்னு இழுத்திட்டு போயிடுவே. மீற் பண்ணினோம்கிற சந்தோஷம்கூட இல்லாம போயிடும். ஏதோ நிறைய பேசணும்னு சொன்னே. சொல்லு என்ன விசயம்?''

''அது... அது... அது''

''அது எதுன்னாலும் பிறகு வரட்டும். நீ விசயத்தை சொல்லுடா?''

சின்னதாய் ஒரு புன்னகை இதழ்களை அலங்கரிக்க விரல்களால் கோலம் போட்டாள்.

அவளது மௌனப் புன்னகை, மெல்லிய வெட்கச் சிரிப்பு, நாணத்தின் பொருள் விளங்க அவள் போட்ட கோலம் என எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய் இரசித்தபடி பார்த்துக்கொண்டிருந்தான் அஸ்வந்.

''அஸ்வந், நான் மனம் திறந்து மட்டுமல்ல, யதார்த்தமா இப்பிடி பேசுற முதல் ஆண்மகனே நீங்கதான். முதல் முதலா நான் பாத்து பழகினதாலதான் உங்களை ஏற்றுக்கொண்டேன்னு இல்ல. என் மனசு சொல்லுது என் வாழ்க்கையில கடைசி வரைக்கும் துணையா வருவதற்கு படைக்கப்பட்டது நீங்கதான்னு. கட்டுக்கோப்பான அத்தையோட வளர்ப்பு முறையையும் மீறி நான் வந்திருக்கேன்னா உங்களை எந்த ளவுக்கு நேசிக்கிறேன்னு என்னாலயே ஆழம் காணமுடியல. ஆனா ஒண்ணு மட்டும் புரியுது. எதுக்காகவேனும் உங்களை இழக்கவேண்டி ஏற்பட்டுட்டா நான் நடைபிணமாகவே ஆயிடுவன்''

''துவி'' என்றவன் வார்த்தைகள் வராது தலையை மட்டும் ஆட்டினான்.

''இந்த அஸ்வந்தோட மனச்சிம்மாசனத்தில அரசியா இருக்கிற தகுதி உனக்கு மட்டும்தான். நான் படிக்கிறபோதும் சரி, தொழிலை நடத்த தொடங்கின பிறகும் சரி எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறன். என் மனசைத் தொலைச்சு இந்தளவுக்கு அவஸ்தைப்பட்டு என்னையே மறந்த நாட்களே இல்லை. நண்பர்கள் எல்லாம் காதல் சுகமானது; காதல் உன்னதமானது எண்டு சொல்லும்போது ஏதோ பிதற்றல் எண்டு நினைப்பன். அது எவ்வளவு சுகமான வலின்னு இப்ப புரிஞ்சுகொண்டன். என்ர மனசில உன்னைப் பதிச்சுக்கொண்ட மாதிரி நீயும் ஏற்றுக்கொண்டாய்தானே. எப்பவும்

எந்த சந்தர்ப்பத்திலையும் நான் உன்னோட கூடவே இருப்பன். போதுமா.''

மதுவிழியின் விழிகள் நீர்கோர்த்துக்கொண்டன. அஸ்வந், ''துவி அழாதைடா. உன் கண்ணில கண்ணீர் வந்தா நான் நொறுங்கிப் போயிடுவன்'' என்றான்.

தனது கைக்குட்டையைத் தேடியவளிடம் தன் கையிலிருந்த கைக்குட்டையை நீட்டினான். அஸ்வந்தை நன்றாகப் பார்த்துவிட்டு அதனை வாங்கியவள் கண்களைத் துடைத்துவிட்டு தனது கைப்பையிலேயே வைத்துக்கொண்டாள்.

கைக்குட்டையை முகத்திலே அழுத்தமாக துடைத்தவிதம் சில நிமிடங்கள் அதனை முகத்திலே அணைத்திருந்த அழகு எல்லாவற்றையும் மௌனமாய் இரசித்துக்கொண்டிருந்தான் அஸ்வந்.

சில நிமிடங்கள் மௌனத்தில் கரைய, ''டைம் ஆகிறது நான் போகட்டுமா?'' என்றாள் மதுவிழி.

''அதுக்குள்ளயா? பேசாம வராமலே இருந்திருக்கலாம்'' என்றான்.

''என்னோட நிலைமை புரியாம டைம் ஆனா அத்தை தேடுவா.''

''ம். ஐஸ்கிறீம் சாப்பிடு'' என்றவன் ஐஸ்கிறீமின் குளிர்ச்சியையும், சுவையையும் அவள் ருசித்து உண்ணும்போதே அவள் கைகளைப் பற்றி அழகான தங்கமோதிரம் ஒன்றை அணிவித்தான்.

சட்டென விரல்களைப் பார்த்த மதுவிழி தன் விரலில் மையைப் பகுதி தங்கத்தால் வார்க்கப்பட்டு மூடப்பட்ட அழகான மோதிரத்தைக் கண்டதும் சட்டென்று அதன் மூடியைப் பிரித்துவிட்டு வியந்துபோனாள். ஆம். அந்தச் சிறிய இதயத்திற்குள் மதுவிழியின் புன்னகை முகம் பிரகாசித்தது. ஆவலோடு நிமிர்ந்தவளிடம்,

''என்னோட இதயத்தில எப்பவும் நீ மட்டும் தான். இதைப் பார்க்கிறபோதெல்லாம் உனக்கு அது நினைவு வரணும்'' என்றான்.

அவள் மௌனமாய் பார்த்துக்கொண்டிருக்க,

''என் இதயத்தை ஆக்கிரமிக்கிற தகுதி உனக்கு மட்டும்தான் இருக்கு. எந்த சந்தர்ப்பத்திலையும் எந்தப் பெண்ணுக்குமே அந்த உரிமையைத் தரமாட்டான். இத மட்டும் நீ மனசில வைச்சிருந்தா அதுபோதும் எனக்கு'' என்றவன், சிறிய பார்சல் ஒன்றை அவளது கையில் கொடுத்து, ''இது முழுக்க முழுக்க ஐயாவோட செலக்சன். வீட்ல போய் பாத்ததும் எப்பிடி இருக்குன்னு சொல்லு'' என்றான்.

''உங்களுக்காக நான் எதுவுமே வாங்கிட்டு வரலை. அந்த அளவுக்கு அதிகமான காசும் இல்ல. அதிகமான பணப் புழக்கம், நம்ம மேல மத்தவங்களுக்குத் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும்னு அத்தை சொல்லுவாங்க. அதனால பஸ்ஸுக்குத் தவிர, வேற எதுக்கும் பணம் கேட்டதில்லை. என் தேவை எல்லாம் அவங்களே பாத்துப்பாங்க. அதனால என்னோட நினைவா உங்களுக்கு தரமுடிஞ்சது இது ஒண்ணுதான்'' எனக்கூறி அவள் தந்ததை வியந்து பார்த்தவன் புன்னகையோடு வாங்கிக்கொண்டான்.

அழகான இதயம் ஒன்றை சவர்க்காரத்தில் செதுக்கி அதன் இரண்டு பக்கமும் அஸ்வந், மதுவிழி எனும் பெயர்களையும் செதுக்கி இருந்தாள்.

''துவி, ரெண்டு பேரோட செலக்சனிலகூட எவ்வளவு ஒற்றுமை இருக்குன்னு பாத்தியா? அதுமட்டுமல்ல, நான் ஆயிரக்கணக்கில் காசு குடுத்து வாங்கித் தந்ததுக்கும், நீயே உன் கையால செதுக்கினதுக்கும் டிபறன்ற் அதிகம். இதுக்குத்தான் வால்யு இல்லை'' என்றான்.

சோகமாய் பார்த்தவளிடம், ''விலைமதிப்பில்லாத பொருளுக்கு வால்யு ஏது?'' என்றதும் அழகான புன்னகை அவளது உதடுகளில் தவழ்ந்தது.

''நான் போயிற்று வாரேன்'' எனக்கூறி எழுந்துகொண்டவள் அஸ்வந்தையே பார்த்தாள்.

''என்னடா...?''

''ம்கூம்... ஒண்ணுமில்ல. நான் வரேன்'' என்றபடி நடக்க கூடவே நடந்தான்.

மதுவிழி எழுந்ததைக் கண்டதும் அருகில் வந்த சம்யுக்தா, "பேசியாச்சா? போகலாமா?" என்றாள்.

தலையை மட்டும் ஆட்டிவிட்டு மதுவிழி முன்னால் நடக்க, ''அஸ்வந் அண்ணா நீங்க ரொம்ப லக்கிதான். ஏன்னா மதுவிழி உங்களைக் காதலிக்கிறா இல்லையா. அதனாலதான்'' எனக் கூறியபடி ஓடிச்சென்று மதுவிழியுடன் இணைந்துகொண்டாள் சம்யுக்தா.

மதுவிழி செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தான் அஸ்வந்.

அப்போது அருகில் வந்த தீபக்கும், வினையும் ''என்னடா அஸ்வந், உன்னோட காதல் தேவதை என்ன சொல்லிட்டுப் போறா'' என்றார்கள்.

எதையோ இழந்துவிட்டதைப்போல விரக்தியாய் சிரித்தான் அஸ்வந்.

வினைய் அஸ்வந்தின் அத்தை மகன். அவனது அப்பா குருபாதத்தின் ஒன்றுவிட்ட தங்கை கருணாவதி. அவரது மகன்தான் வினைய். அஸ்வந்தின் திட்டங்கள் வினைக்கும் தெரியும் என்றாலும் திடீரென அவன் இங்கே வர என்ன காரணமாக இருக்கும் என யோசித்தான். ஒருவேளை தீபக் வரச்சொல்லி இருப்பானோ. 'சே... சே... தீபக் அப்படி எதுவும் செய்யமாட்டான்' என எண்ணியவாறு தன்னையே கடிந்துகொண்டான் அஸ்வந்.

(தொடரும்...)



# என் தெய்வம்

ஈரைந்து மாதங்கள்
கருவோடு எனைத் தாங்கி
உதிரத்தைப் பாலாக்கி
உணர்வுகளை வேறாக்கி
உலகிற்கு அளித்திட்ட
உத்தமியே அம்மா!

துக்கத்தில் துவண்டிடும் போதும்
துயரமதில் தொலைகின்றபோதும்
துணிவுடன் நிமிர்ந்து
வாழ்வதை ஜெயித்திடும்
வல்லமை நீ தந்தாய்

நாகரீகப் போர்வையிலே
நான் தொலைந்து போயிடாது
நல்லதொரு சித்திரமாய்
எனை வரைந்தாய் பத்திரமாய்

கோடி முறை நான் தொழும்
கோயிலம்மா நீ எனக்கு
மறுபிறவி என்றிருந்தாய்
வரம் தருவாய்
உன் மகளாய்.

- கோபிகை -

# அன்னை

அகிலத்தை அறிய
அத்திவாரமாய் அமைந்த உறவு
அன்னை...

ஐம்பெருங் குரவர்களுள்
அதியுயர்வாய் இருப்பவள்
அன்னை...

பத்து மாதம் சுமந்து
பாங்குடனே எமை வளர்த்து
பார் போற்றும் உத்தமராக்கி
பார்த்து ரசிப்பவள்
அன்னை...

எழுத்துக்களிற்கெல்லாம் முதலும் மூலமுமாய்
அமைந்தது அகரம் - அது போல்
உறவுகளிற்கெல்லாம் முதலும் மூலமுமாய்
அமைந்த உறவு
அன்னை...

அகிலத்தைக் காட்டி அன்பை ஊட்டி
ஆளாக்கிய அன்னையை
ஆராதிப்போம் தினந்தினம்...

- இ. கம்சியா, கைதடி. -

நேர்காணல் : கோபிகை

# தாதிச் சேவை கடவுளின் கொடை




செல்வந்தச் சீமாட்டியான புளோறன்ஸ் நைற்றிங்கேல் என்பவரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட தாதிச்சேவையான உன்னதமான சேவையில் மேல் நிலைத் தாதியாக இருக்கும் திருமதி செல்வநாயகி கோணேஸ்வரலிங்கம் அவர்களை எமது ஒளிஅரசியின் நட்சத்திர இல்லத்தரசியாக தெரிவுசெய்து அணுகினோம். அவர் எம்மோடு பகிர்ந்துகொண்ட மனப்பதிவுகள் உங்களுக்காக.

இலங்கைத் திருநாட்டில் எடுத்துக்காட்டாக இருக்கும் பெண்களின் பெருமைகளை சமூகத்துடன் பகிரவே இப்பகுதி. அந்தவகையில் இம் மாத நட்சத்திர இல்லத்தரசியாக வவுனியா பொது வைத்தியசாலை மேல் நிலைத் தாதியான **திருமதி செல்வநாயகி கோணேஸ்வரலிங்கம்** அவர்களுடனான அனுபவப்பகிர்வுகள்.

## மே 12 சர்வதேச தாதியர் தினத்தையொட்டிய சிறப்புப் பேட்டி



**ஒளி அரசி வாசகர்களுக்காக உங்களைப் பற்றி கூறுங்கள்?**

நான் திருமதி. செல்வநாயகி கோணேஸ்வர லிங்கம். எனது அப்பா சின்னத் தம்பி தனுக்கோடி விவசாயி, அம்மா தனுக்கோடி நாகம்மா இல்லத்தரசி. எனது கணவர் கோணஸ்வரலிங்கம் கிராம சேவையாளர். எனக்கு நான்கு பிள்ளைகள். இரண்டு ஆண். இரண்டு பெண்.

**நீங்கள் இத்துறையை தெரிவு செய்ததன் காரணம் யாது?**

இத்துறை சேவையுடன் கூடிய தொழில் என்பதுடன் எனது சிறுவயது முதல் மக்களுக்கு மருத்துவ சேவை செய்யவேண்டும் என்பதும் எனது அவாவாக இருந்தது. இத்தொழில் மூலம் தேடி வருவோருக்கு சேவை செய்யமுடியும் என்பதும் ஒரு காரணம்.

**இத்தொழிலில் நீங்கள் பெருமையடைந்த நிகழ்வு?**

வேறு பல வேலைகள் கிடைத்தபோதும் அதனை ஏற்காது 'தாதிச் சேவைதான் செய்ய வேண்டும்' எனும் எனது குடும்பத்தின் விருப்பிற் காக, காத்திருந்து இச்சேவையில் இணைந்து கொண்டேன்.

ஒவ்வொரு நோயாளரும் குணமடைந்து ஆரோக்கியமாய் வீடு திரும்பும் ஒவ்வொரு வேளையும் நான் பெருமையடைந்திருக்கிறேன். குணமடைந்து செல்லும் வேளைகளில் ஒவ் வொரு நோயாளரும் கைகூப்பி வணங்கும்போது கிடைக்கின்ற ஆசி, எமக்குள் உண்டாகும் நட்பு ணர்வு இவற்றிற்கு எந்த வரையறையும் இல்லை. எனது தொழிலில் உறவினர், நண்பர், ஏழை, பணக்காரர் என எந்தப் பாகுபாடும் கிடையாது.

**உங்கள் சேவைக்காலத்தில் ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவம்?**

கடுமையான நோயினால் வரும்போது எம்மால் ஆன சிகிச்சையை மேற்கொள்ளும் போதும் அவ்வேளையில் அவர்கள் இறந்து விட்டால் அது எப்போதுமே மறக்க முடியாத ஒரு சம்பவமாகவே இருக்கும். சில வருடங்களின் முன் ஆறு வயதுக் குழந்தை ஒன்று கடுமையான நிலையில் அனுமதிக்கப்பட்டு. வைத்திய சிகிச்சையின் பின் எனது மேற்பார்வையின் கீழ் நன்றாகி இருந்தது. நான் வீட்டிற்குச் சென்று விட்டு மீண்டும் இரவுக் கடமைக்கத் திரும்பிய போது அச்சிறுமி இறந்துவிட்டார். இச்சம்பவம் நடந்து இருபது ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் அதனை என்னால் மறக்கமுடியவில்லை. மரண அறிக்கை எழுதும் நாட்கள் துன்பகரமான நாட்களே.

**இன்றைய காலகட்டத்தில் சுகாதாரம் சம்பந்தமாக பெண்கள் அதாவது, இல்லத் தரசிகள் அறிந்துகொள்ளவேண்டிய விடயங் கள் தொடர்பாக கூறமுடியுமா?**

சுகாதாரம் சம்பந்தமான அறிவு கட்டாயம் இல்லத்தரசிகளிடம் இருக்கவேண்டும். அப் போதுதான் அந்தக் குடும்பம் ஆரோக்கியமான குடும்பமாக இருக்கும். வீட்டு விபத்துகள் அதற்கான தீர்வுகள், திடீரென ஏற்படும் நோய்கள், உணவுச் சக்தி என்பவற்றையும் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். ஆரோக்கியம் சம்பந் தமாக பத்திரிகைகளில் வரும் விடையங்களை வாசித்து அறிந்து கொள்ளல் வேண்டும். பன டோல் போன்ற மாத்திரை வகைகளை தொடர்ந்து பாவிப்பது தவறு. ஒரு தடவை வைத்தியசாலை யில் எடுத்த சிட்டையைக் காட்டி மீண்டும் மீண்டும் (திகதி கடந்த பின்பு) மருந்தகங்களில் மருந்து வாங்குவது என்பவற்றை தவிர்த்தல் வேண்டும். உடற்பயிற்சி, தியானம் என்பவற்றின் மூலம் உடல் ஆரோக்கியத்தைப் பேணுதல் பற்றி அறிந்துகொள்ளல் அவசியமானதாகும்.

**உணவுப் பழக்கங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?**

வீட்டுத் தோட்டம் செய்வதன் மூலம் இரசாய னம் அற்ற காய்கறிகளைப் பெறுவதற்கு முயற் சிக்க வேண்டும். உடனடி உணவுகளை பிள்ளை களுக்கு கொடுப்பதை தவிர்க்கவேண்டும். வீதியில் விற்கும் பொருட்களை வாங்கி அப் படியே கொடுப்பதும் வெளிநாட்டு மோகத்தினால் உணவுப் பழக்கத்தினை மாற்றுவதும் தவறு, முருங்கை இலை, வாழைப் பொத்தி என்ப வற்றை உணவில் அதிகம் சேர்த்தல்வேண்டும். தானிய வகைகளை அதிகமாக பிள்ளைகளுக்கு கொடுப்பதுடன் தானிய - உணவின் சக்தி பற்றி

விபரங்களையும் பிள்ளைகளுக்கு விளக்க வேண்டும். நூடுல்ஸ் போன்ற உணவு வகைகளை தவிர்ப்பது மிகமிக நன்று.

**சுகாதார சீர்கேட்டினால் ஏற்படும் நோய்கள் பற்றி கூறமுடியுமா?**

டெங்கு, வாந்திபேதி, தைபோயிட், மலேரியா, குழந்தைகள் வாந்தி எடுப்பது என்பவை இவ்வகை நோய்கள். குடும்ப நல உத்தியோகத்தர்கள் மூலம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வைத்தியசாலை வருமுன் தடுப்பதே சிறப்பானது. ஆட்செலவு, மருந்துச்செலவு என்பன தவிர்க்கப்படும்.

**சமுதாயச் சிக்கல் சம்பந்தமாக பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளால் நோயாளராக வரும்போது ஒரு மேல்நிலைத் தாதியாக உங்களுக்கு ஏற்படும் மன உணர்வுகளைப் பற்றி குறிப்பிட முடியுமா?**

தற்போது இவ்வகையான நோயாளர்களே அதிகம். அதிலும் பெண்கள், சிறுவர்களே இத்தகைய பாதிப்பிற்கு அதிகம் உட்படுகின்றனர். இச்செயலானது பெண்களிடம் விழிப்புணர்வு அற்ற தன்மையையே காட்டுகின்றது. எம்மால் ஆன சிகிச்சையின் பின்னர் உள ஆறுதல் அளித்து அதன்பின் உளவளத் துணையாளரிடம் ஒப்படைப்போம். அவர்கள் இவ்விடயத்தில் அதீத அக்கறை காட்டி பிரதேச செயலகம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்வதால் இப்பிரச்சினை ஓரளவு மட்டுப்பட்டுள்ளது.



**மகத்தான சேவையாக தாதிச் சேவை போற்றப்படும் வேளையில் சமுதாய ரீதியாக சில பிரச்சினைகளைப் பெண் தாதியர் எதிர்நோக்குவதாக கருதுகின்றீர்களா? அதனை எவ்வாறு எண்ணுகின்றீர்கள்?**

ஆம். ஏனைய வேலைகளை விட தாதித் தொழிலில் இரவுக்கடமை உண்டு. இதனை சமுதாயம் பழைய கால நடைமுறையில் தப்பான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றது. இரவு, பகல் என கடமை பார்த்து குடும்பத்தையும் கவனிப்பதென்பது பாராட்டிற்குரிய விடயம். இச்சேவை கடவுளின் கொடை என்றே எண்ணுகின்றேன். புண்ணியம் தேடி எங்கும் அலையாது எம்மிடம் வருபவர்க்கு சலியாது தொண்டு செய்வதன் மூலம் புண்ணியம் பெறலாம். இத்தொழிலை நேசிப்பவர்களுக்கு இது ஒரு கொடை, ஏனையோருக்கு சுமை. எனது வளர்ச்சிக்கும். ஈடுபாட்டிற்கும் எனது கணவரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

**'ஒளி அரசி' என்னும் சஞ்சிகை பற்றிய உங்கள் கருத்து யாது?**


ஒளி அரசி தரமான சஞ்சிகை. பெண்களின், மனதிற்கு ஆறுதல், ஆளுமைக்கு ஒரு தளம், ஆற்றலுக்கு வழிகாட்டி. சமையல் கலையைக் கூட வாசித்து அறிந்துகொள்ள முடிகின்றது. பல பிரதேசத்தினதும் பெண் ஆளுமைகளை அறிந்து கொள்ள முடிகிறது. பெண் சரித்திர தொடர் ஒன்று வந்தால் சிறப்பாக இருக்கும். புலமைப் பரிசில் வழிகாட்டி வினாத்தாள் மிகமிக பிரயோசனமானது. ஒளி அரசி ஒரு வரப்பிரசாதம் என்றே கூறுவேன். ■

**தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகவியல் பாட விரிவுரையாளர் திருமதி மின்னதுல சுஹிறா சபீக் அவர்கள் அடுத்த இதழின் இல்லத்தரசியாக அலங்கரிக்கவுள்ளார்.**


# 01 – 04 மாத ஆண்குழந்தைகளுக்கான வண்டிச்சில்லு சட்டையின் மாதிரி உருவம்

குழந்தைச் சட்டை

| | |
|---|---|
| சட்டையின் முழு நீளம் | 11" |
| சட்டையின் அகலம் | 5 1/2" |
| முன் கழுத்து ஆழம் | 1 1/2பின் |
| சோல்டர் | 3 1/4" |
| கை சுற்று | 3" |
| கீழ் சரிவு உயரம் | 2" |
| சைற்பட்டியின் அளவு | 2.5 |
| சோல்டர் உயரம் | 1/2 |
| முன் சோல்டர் பட்டி உயரம் | 2.1/2" |





முன்பக்கம்




பின்பக்கம்



வழிகாட்டுபவர்
தையற்கலை ஆசிரியர்
ரோஸ்மேரி சிவபாதசுந்தரம்





சைற்பட்டி

பிரவுன் பேப்பரில் 11 அங்குல நீளமும் 5 1/2 அங்குல அகலமுமான நீள்சதுர வடிவத்தைக் கீறிக்கொள்ள வேண்டும். A,B,C,D எழுத்துகளை குறித்துக்கொள்ள வேண்டும். A யிலிருந்து B யை நோக்கிய கோட்டில் 1 1/2 அங்குலமும் A யிலிருந்து D யை நோக்கி 1 1/2 அங்குலமுமாக குறித்து வட்டவடிவாக கழுத்து கீறிக்கொள்ள வேண்டும்.


B,C யில் படத்தில் காட்டியபடி 3 அங்குலம் குறித்து கீறிக்கொள்ளவேண்டும். 1/2 அங்குலம் உட்பக்கமாக தோற்பட்டையை குறித்தும், C யிலிருந்து மேல் நோக்கி 2 அங்குலம் குறித்து சட்டையின் பக்க வளைவு, கைவளைவு என்பவற்றைக் கீறிக்கொள்ளவேண்டும்.

இப்படியாக பின்பக்கத்தையும் தோற்பட்டியில் 2 அங்குல உயரமாகவும் 1/2அங்குலம் அரைவட்ட வடிவில் கீறிக்கொள்ளவேண்டும். அவ்வாறே இடுப்பிற்குரிய பட்டியையும் கீறி, தையல் அளவிற்கு 1/2 அங்குலம் விட்டு வடிவமைப்பை அமைத்துக்கொண்டு, விரும்பிய நிறத்துணியில் வெட்டிக்கொள்ளலாம்.

முன்பக்கத்தில் விரும்பிய சித்திரவேலைப்பாட்டையும் பட்டன் வகைகளையும் பொருத்திக்கொள்ளலாம்.




சட்டையின் முழுவடிவம்




# யார் செய்த குற்றம்.?

ஓய்வுநேரங்களில் கடற்கரைக்குச் செல்வது வழமை. வேகமான உலகிலே அமைதியளிக்கும் ஒரு அருட்கொடைதான் அது. வழமை போல் கடற்கரையில் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் ஓர் பத்து வயது மதிக்கத்தக்க சிறுவன் ஏதோ ஒரு பையுடன் கடற்கரையில் இருந்த ஒவ்வொரு குழுக்களிடமும் சென்று வந்தான். அவனை அவதானித்துக் கொண்டிருந்து ஒரு சில நிமிடங்களிலேயே அந்தச் சிறுவன் எங்களை அண்மித்து விட்டான். **ஐயா கச்சான் வேணுமா? பேக் பத்து ரூபா. எல்லாம் விற்று முடிஞ்சு. கடைசியா மூன்று பேக்தான் இருக்கு வாங்குகின்றீங்களா?** கெஞ்சிய படி ஒரு தந்திரமும் சோகமும் கலந்த முகத்துடன் அவனது வியாபாரத்தை ஆரம்பித்தான்.

அவனை ஒரு சிறுவனாக மட்டும் பார்த்த நான் தோளிலே கையை வைத்து உட்காரும் படி கூறி, சிறிது நேரம் அவனுடன் பேசினேன். ஏதோ பயத்துடன் பேசுவதைப் போன்று அவனுடைய உரையாடல் இருந்தது. மீனவர் குடும்பத்தை சேர்ந்த சிறுவன் 13 வயது மாணவன். பாடசாலை விட்டு வந்ததும் பின்னேரம் கடற்றொழிலிலே ஈடுபட்டு விட்டு இரவு வேளைகளிலே கடற்கரையில் கச்சான் விற்பது வழக்கம். பாடசாலைக்குப் போய் கல்வி கற்பது இரவு வேளைகளிலே வீட்டிலே இருந்து பாடம் படிக்க வேண்டிய நீ ஏன் இவ்வாறு கஷ்டப்படுகின்றாய்? என வினவினேன். கண்களில் எட்டிப் பார்த்த கண்ணீர் துளிகளை துடைத்து விட்டு பேசத் தொடங்கினான் சிறுவன்.

அவனது தாய்க்கு 3 குழந்தைகள் மூன்றும் ஆண் பிள்ளைகள். மூத்த பையன்தான் இந்த சிறுவன். தந்தை ஒரு கடற்றொழிலாளி. கடற்றொழில் மூலமாக தனது குடும்பத்தை கொண்டு நடாத்த முடியாத காரணத்தினால் வெளிநாடு செல்லத் தீர்மானித்து வெளிநாடு சென்றிருக்கிறார். சில வருடங்கள் கழிந்தும் இச்சிறுவனின் தாய்க்கு அயலில் இருந்த ஒரு இளைஞனுடன் உறவு ஏற்பட்டு அது காதலாக மாறி தனது மூன்று பிள்ளைகளையும் விட்டு விட்டு அந்தக் காதலனுடன் சென்று விட்டாள் தாய்.


அனாதைகளாய் இருந்த மூன்று குழந்தைகளும் சிறிது காலம் அம்மம்மாவிடம் வாழ்ந்திருக்கின்றனர். சில நாட்கள் கழிந்ததும் தனது காதலனை திருமணம் செய்து கொண்டு வந்த தாய் மூன்று குழந்தைகளையும் தன்னிடம் சேர்த்துக் கொண்டாள். புதிதாய் திருமணம் செய்தவருக்கு இந்தக் குழந்தைகள் மீது பாசம் கிடையாது. தனது உழைப்பில் அவர்கள் வளரக் கூடாது என்ற ஒரு உணர்வு. இருவருமாய் சேர்ந்து இந்த மூன்று பிள்ளைகளையும் இரவு வேளைகளில் இந்த கச்சான் வியாபாரத்திற்கு அனுப்ப ஆரம்பித்தனர்.

சிறுவயதிலேயே தங்களுடைய ஆடைகளை தாமே துவைத்தல், காலையில் எழும்பி குளித்தல், பாடசாலைக்குத் தயாராகி தாமே தேனீரும் வைத்து குடித்தல், பாடசாலை சென்று வந்து தாமே ஏதாவது தேடி சாப்பிட்டு விட்டு பின்னேரம் மீண்டும் கடற்கரைக்குச் செல்லுதல் என ஒரு தனியான குடும்பமாக இந்த மூன்று சிறுவர்களும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். நெஞ்சைப் பிளந்தது போல் ஓர் அதிர்ச்சியில் என்னை அறியாமலே கண்ணீரும் வழிந்தோடியது.

எத்தனையோ தம்பதிகள் குழந்தை பாக்கியத்துக்காக மலையேறி தவமிருக்கும் இந்தக் காலத்திலே ஒரு குடும்பத்தில் கிடைத்த மூன்று குழந்தைகளுக்கு இந்த நிலையா என நினைக்கும் போது மேல் சிலிர்க்கின்றது. தனது சுகத்திற்காக தான் பெற்ற பிள்ளைகளை அனாதையாக்கும் மனசு யாருக்குத்தான் வரும். இதை விட அவர்கள் அம்மம்மாவிடமே இருந்திருக்கலாமோ என்று எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன்.

குழந்தைகளை தொழிலுக்கு அமர்த்துவது முதல் குற்றம். மனச் சாட்சியே இல்லாமல் அவர்களை சித்திரவதை செய்வது எதற்குள் அடங்கும்? தங்களால் குழந்தைகளை வளர்க்க முடியாவிட்டால் அனாதை இல்லங்களில் விட்டாலாவது அக்குழந்தை ஏதோ ஒரு வகையில் தனது வாழ்க்கையை சிறப்பாய் அமைத்துக் கொள்ளும். அன்பான இல்லத்தரசிகளே தாய்மை இறைவனின் அருட்கொடை. அதை குழந்தை பெறுவதோடு மட்டும் நிறுத்தி விடாமல் அவர்களை சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ வைக்கும் வரையில் கடைப்பிடியுங்கள் அப்பொழுதுதான் காணலாம் உங்கள் காலடியில் சுவர்க்கத்தில். ■

# வெறும் கை என்பது மூடத்தனம் பத்து விரல்களும் மூலதனம்



நம்மில் பலர் என்னிடம் ஒன்றும் இல்லை, வறுமை, வருமானமில்லை என எந்த நேரமும் பஞ்சம் கொட்டிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எமது உடல் விலைமதிப் பற்றது என்பதை விளங்கிக்கொள்வதில்லை. இதனை ஒரு சிறு கதை மூலம் விளக்கலாம். இவ்வாறு ஒன்றும் இல்லை என அடிக்கடி கூறி கொள்ளும் ஒருவரை ஒரு அறிஞர் ஒரு மகாராஜா விடம் கூட்டிச்சென்று அவரது ஓர் கண்ணை எடுத்துக்கொண்டு 10 லட்சம் கொடுங்கள் -5 பற்களை கழற்றிக்கொண்டு 2 லட்சம் கொடுங்கள் என்று கூறியபோது குறித்த நபர் ஐயோ பணம் வேண்டாம் எனக் கூறி பயப்பட்டு தனது உடலின் பெறுமதி தொடர்பாக விழிப்புணர்வு அடைகின் றார். இதிலிருந்து என்ன தெரிகின்றது? எமது, உடலுக்கு பெறுமதி இட்டு பார்த்தால் 50 கோடி பெறுமதி இட்டாலும் போதாது. எனவே ஒன்றும் இல்லை என்பது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். கடவுள் எமக்கு எல்லாவற்றையும் அழகாக தந்துள்ளார் என்பதே உண்மை. இதனை அமுதபாரதி என்ற ஒரு கவிஞர் கீழ்வருமாறு அழகாக கூறுகின்றார். வெறும் கை என்பது மூடத்தனம்! பத்து விரல்களும் எமது மூலதனம இதனைப் புரிந்துகொண்டால் நீ ஒரு முதலாளி! எனவே, எமது உடலின் பெறுமதியை விளங்கி அதனை பாதுகாத்து அதை பயன்படுத்தி நியாய மான வழிகளில் வருமானம் ஈட்ட எம்மை நாம் தயார்ப்படுத்த வேண்டும். இதை புரிந்து கொண்டு தொழில் முயற்சியில் இறங்குபவர்களுக்கு எம்மைச் சூழ பல தொழில் வாய்ப்புக்கள் உண்டு. கடவுளின் ஆசியும் உண்டு.

எனவே, எமது உடலை பாதுகாக்க வேண்டி யது கட்டாயக் கடமை. ஏன் என்பதற்கு சிவபாக் கியார் என்னும் சித்தர் பாடிய பாடலில் இருந்து கீழ்வரும் ஒரு கதையைக்கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.

நீ சில வருடங்கள் காதலித்த ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணி உனது கிராமத்துக்கு கூட்டிச் செல்லும்போது ஒரு கொள்ளைக்காரன் கத்தியை காட்டி அவளை உன்னிடம் இருந்து பிரித்து இழுத்துச் சென்றால் பொறுத்துக்கொண்டு இருப்பாயா? இல்லவே இல்லை. அதே போல் நீ வயதுக்கு வரும் வரையில் உனது அம்மாவால் மிகப் பக்குவமாகவும், அதன் பின்பு உன்னால் பக்குவமாகவும் பல வருடங்கள் பேணி பாது காத்து வளர்த்த உடம்பை (உயிரை) எமன் வந்து எடுத்துசெல்ல முயன்றால் நீ விடுவாயா? யமனுக்கு எதிராக போராடு என இந்த சித்தர் கூறுகின்றார். எனவே, நாம் உடலை நன்கு பாது காக்க வேண்டும். இளைஞர், யுவதிகளே உங்கள் மீது நம்பிக்கை வைத்து சரியான முடிவை தயங்காது எடுத்து ஏதாவது தொழில் முயற்சியில் நியாயமாக ஈடுபட்டு வாழ்கையை வெல்வீர்களாக. ■




# சிவகாமியின் சபதம்

இளவேனிற் காலத்தில் ஒரு நாள் மாலை மகேந்திர தடாகத்தின் கரைவழியாகச் சென்ற இராஜபாட்டையில் பிரயாணிகள் இருவர் காஞ்சி மாநகரை நோக்கி நடந்துகொண்டிருந்தனர்.

ஒருவர் காவி வஸ்திரம் தரித்த பௌத்த சந்நியாசி. இன்னொரு பிரயாணி கட்டமைந்த தேகமும் களை பொருந்திய முகமும் உடைய பதினெட்டு வயது இளம் பிள்ளை. பிரயாணிகள் இருவரும் வெகுதூரம் வழிநடந்து களைப்புற்ற வர்களாகக் காணப்பட்டனர்.

'தலைநகரம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?' என்று வாலிபன் கேட்டான்.

'அதோ! என்று சந்நியாசி சுட்டிக்காட்டிய திக்கில் அடர்ந்த மரங்களுக்கு இடையிடையே மாடமாளிகைகளின் கூரைகள் காணப்பட்டன. இளம் பிரயாணி அக்காட்சியை உற்று நோக்கிக்கொண்டி ருந்தான் வாலிபன். சிறிது நேரத்தில் புத்த பிக்குவைப் பார்த்து, ''இங்கிருந்து அதிக தூரமா?'' என்றான்.

ஆமாம் - என்றார் பிக்கு.

''அப்படியானால் நான் சற்று உட்கார்ந்து விட்டுவிட்டு வருகின்றேன், அவசரம் என்றால் நீங்கள் போகலாம்'' என்று சொல்லி விட்டு வாலிபன் கையிலிருந்த தடியையும் மூடையையும் பாதையின் ஓரமாக வைத்துவிட்டு ஏரியைப் பார்த்துக்கொண்டு அமர்ந்தான்.

சந்நியாசியும் அவனருகில் மேற்குத்திசையைப் பார்த்தபடி அமர்ந்தார்.

மேற்கு வானில் அடிப்புறத்தில் தங்கநிறமான ஞாயிறு கதிர்கள் திருமாலின் சக்கராயுதத்தைப் போல் தகதகவென்று சுழன்றுகொண்டிருந்தது. அதன் ஒளிபட்டு மேல் வானமெல்லாம் செம்மை படர்ந்தது. பயங்கரமான போரில் இரத்த வெள்ளம் ஓடிய யுத்தகளத்தைப்போல காட்சி யளித்தது. ஆங்காங்கே காணப்பட்ட சிறுமேகக் கூட்டங்கள் தீப்பிடித்து எரிவதுபோல தோன்றின.

சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்த திசையில் மகேந்திர தடாகத்தின் பளிங்குபோலத் தெளிந்த நீர் உருக்கிய பொன்னைப்போல ஒளிர்ந்துகொண் டிருந்தது.

ஆனால், மேற்குத் திசையிலிருந்து சற்றுத் திரும்பி அந்த விசாலமான ஏரியின் வடகரையை நோக்கினால் முற்றும் மாறான வேறொரு காட்சி தென்பட்டது. அந்தக் கரையில் ஏரிக்கு காவலாக நின்ற சிறு குன்றுகளின் மாலைநேரத்து நெடிய நிழல் ஏரியின் மேல் விஸ்தாரமாக படர்ந்திருந்தபடி யினால் ஏரி நீர் அங்கே கருநீலம் பெற்று விளங்கியது.

நிழல் படர்ந்த ஏரிக்கரை ஓரமாகச் சில இடங்களில் கண்ணைப் பறிக்கும் வெள்ளை நிறம் திட்டுத்திட்டாகத் திகழ்ந்தது. சற்றுக் கூர்ந்து நோக்கினால் அந்த இடங்களில் வெண் நாரைகள் ஒற்றைக்காலில் நின்று தவம் புரிகின்றன என்பதை அறியலாம். சில சமயங்களில் திடீரென்னு ஒரு வெள்ளை நாரைக் கூட்டமானது ஏரியின் நீர்க்கரையில் இருந்து கிளம்பி ஆகாயத்தில் மிதக்கத் தொடங்கும். ஆஹா! அக் காட்சியின் அழகை என்னவென்று சொல்வது. கீழே கருநிறத் தண்ணீர் பரப்பு. மேலே கருநீல வானம். பின்னால் கரும் பசுமை நிறக் குன்றுகள். இவற்றின் மத்தியில் நெருக்கமான அந்த நாரைக் கூட்டம் வானவெளியில் பறந்து செல்லும் காட்சி, எவருக்குமே மனக்கிளர்ச்சியை உண்டாக்கும். இறைவனுடைய லீலா வினோதங்களில் மனம் லயிப்பவர்களோ மெய்மறந்து பரவசமாகிவிடுவர்.

இவை எல்லாவற்றையும் சற்றுநேரம் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்த அந்த வாலிபன் இந்த பிரமாண்ட ஏரியை மகேந்திர தடாகம் என்று சொல்வது பொருத்தமில்லை. மகேந்திர சமுத்திரம் என்று சொல்வதே பொருந்தும் என்றான் தனக்குத்தானே.

அருகில் இருந்த சந்நியாசி ஏரியை நோக்கிய வண்ணம் இந்த மகேந்திர தடாகத்தில் இப்போது தண்ணீர் குறைந்து போயிருக்கிறது. ஐப்பசி, கார்த்திகையில் மழைபெய்து ஏரி நிரம்பியிருக்கும்போது பார்த்தாயானால் பிரமித்துப்போவாய், அப்போது நிஜ சமுத்திரம்போலவே இருக்கும். என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்.

''புறப்பட்டுவிட்டீர்களா சுவாமி?'' என்றான் வாலிபன்.

''ஆமாம், பரஞ்சோதி. என்னோடு வருவது உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது'' என்று கூறியபடியே நடக்கத் தொடங்கினார்.

பரஞ்சோதி என்ற அந்த வாலிபனும் மூட்டையையும் தனது தடியையும் எடுத்துக்கொண்டு அவரைத் தொடர்ந்து நடந்தான்.

சாலையில் போவோர், வருவோர் கூட்டம் அதிகமாயிருந்தது. பிரயாணிகளை ஏற்றிய வண்டிகளும், நெல்லும், வைக்கோலும் ஏற்றிய வண்டிகளும் சாரிசாரியாச் சென்றுகொண்டிருந்தன.

சாலையின் மறுபுறத்தில் முதிர்ந்த கதிர்களையுடைய செந்நெல் வயல்கள் பரந்திருந்தன. கதிர்களின் பாரத்தினால் பயிர்கள் தலைசாய்த்து விழுந்துகிடந்தன. ஆங்காங்கே சில வயல்களில் கூலியாட்கள் அறுவடையான கதிர்க்கற்றைகளைக் கூட்டிக்கொண்டிருந்தனர். வயல்களில் இருந்து புதுநெல், புதுவைக்கோலின் நறுமணம் 'குப்' என வீசியது.

அதனைக் கடந்து சற்றுத் தூரத்தில் ஓர் அழகிய கிராமம் தென்பட்டது. அந்த கிராமத்தை தாண்டியதும் மல்லிகை, முல்லை மலர்களின் நறுமணம் மெல்லப் பரவியது. அந்த மணத்தை மூக்கினால் நுகர்வது மட்டுமன்றி தேகம் முழுவதினாலும் ஸ்பரிசித்து அனுபவிக்கலாம்போல தோன்றியது.

''ஆஹா'' என்றான் அந்த வாலிபன்.

அவனுக்கெதிரே கண்ணுக்கெட்டிய தூரம் வரை நந்தவனங்கள், மல்லிகை, முல்லை புதர்களின்மீது வானத்து நட்சத்திரங்கள் வந்து படிந்ததுபோல குண்டு மல்லிகைகளும் முத்து முல்லைகளும் கலீரென்று பூத்துச் சிரித்துக்கொண்டிருந்தன.

இந்த வெண்மலர்ப் பரப்பிற்கு இடையிடையே தங்கநிறச் செவ்வந்திப் பூக்களின் காடும் காணப்பட்டது.

''இவ்வளவு பூக்களையும் என்னதான் செய்வார்கள்?'' என்றான் வாலிபன்.

"இவற்றில் பாதி கோயில் தெய்வங்களுக்கு அர்ப்பணம் ஆகும். பாதி காஞ்சி நகரத்துப் பெண் தெய்வங்களில் கூந்தலை அலங்கரிக்கும்'' அதோ என்றபடி சட்டென நின்றார் சந்நியாசி.

சரசரவென சாலையின் குறுக்கே ஒரு பாம்பு ஊர்ந்து சென்று நந்தவனத்திற்குள் புகுந்து மறைந்தது. ''இந்த மல்லிகை வாசத்துக்கு பாம்புகள் எங்கே என்று காத்திருக்கும்'' என்றார் சந்நியாசி.

பாம்பு மறைந்ததும் இருவரும் மேலே சென்றார்கள். சற்றுநேரம் மௌனம் குடிகொண்டிருந்தது.

பரஞ்சோதி 'கிளுக்' என்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்றார் சந்நியாசி.

பரஞ்சோதி சற்றுநேரம் அமைதியாக இருந்துவிட்டு ''இல்லை அடிகளே மத்தியானம் அந்த சர்ப்பத்தைக்கொன்று என்னைக் காப்பாற்றினீர்களே? நீங்கள் புத்தபிக்கு ஆயிற்றே. ஜீவவதை செய்யலாமா? என்று எண்ணிச் சிரித்தேன்'' என்றான்.

தன்னைக் கொல்ல வரும்போது பசுவையும் கொல்லலாம் அல்லவா? என்றபடி வாலிபனைப் பார்த்தார்.

''ஆனால், பாம்பு தன்னைக் கொல்ல வரவில்லையே. என்னைத் தானே கொல்ல வந்தது'' என்றான் பரஞ்சோதி ஏளனக் குரலில்.

''என் சிஷ்யனை நான் காப்பாற்ற வேண்டாமா?'' என்றார் பிக்கு.

''சீடனா? யாரைச் சொல்கின்றீர்கள்?''

''ஆமாம். நீ என் உயிரை ஒரு சமயம் காப்பாற்றினாய். அதற்குப் பிரதியாக... தங்கள் உயிரை நான் காப்பாற்றினேனா? எப்போது? முந்நூறு வருடங்களுக்கு முன். என்ன? முன்னொரு ஜன்மத்தில்.

ஓ.ஹோ.. நீங்கள் முக்காலம் அறிந்த முனிவர் என்பதை அறியாமல் கேட்டுவிட்டேன். மன்னிக்கவேண்டும். சந்நியாசி மௌனமாக நடந்தார்.


பரஞ்சோதி: சுவாமி, ''இனிமேல் வரப்போவது அனைத்தும் தங்கள் ஞான திருஷ்டியில் தெரியுமல்லவா?'' என்று கேட்டான்.

"வரப்போவது ஒன்றைச் சொல்லட்டுமா?"

''சொல்லுங்கள்''

''இந்த நாட்டில் பெரிய யுத்தம் வரப்போகிறது.

**(தொடரும்...)**




# பெண்மையின் எல்லைகளும் ஊடக வழிகாட்டலும்

இன்று பெண் உரிமை என்ற கோட்பாடு பல பரிணாமங்களாக வளர்ச்சியடைந்து வருகிறது. அவை பல பெண்களது பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்தவகையில் பெண் உரிமைகள் செயற்பாடுகள் புதிய பார்வையை நோக்கி வளர்ந்து நிற்கின்றது. புதுயுகம் படைக்கும் பெண்களின் எழுச்சி மிக உச்ச அளவில் எழுவதற்கான சாத்தியம் உருவாகியுள்ளது. எனினும், வீடுகளில் பெண்களை இன்னல்களுக்கு உள்ளாக்குதல், தொழில் புரியும் இடங்களில் பெண்களைக் கேவலமாக நினைத்தல், பெண்களுக்கெதிரான பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. பெண்களுக்காக கருத்துச்சுதந்திரத்தைத் தடை செய்தல், பாலியல் துஷ்பிரயோகம் என பலவாறாக பெண்கள் அவமானப் படுத்தப்படுகிறார்கள். பெண்களுக்கான சுதந்திரத்தை தடைசெய்தல் பாலியல் துஷ்பிரயோகம் என பெண்கள் அனுபவிக்கும் கொடுமை ஏராளம். பெண்ணைப் பொறுத்தவரை அவள் ஒரு குடும்பப்பெண்ணாக, அன்னையாக சகோதரியாக சிறந்த சமூகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வதில் சிறந்து விளங்குகிறாள். அவளின் சமூக சிந்தனைப் போக்குகள் தடுக்கப்படுவதுடன் உரிமைகள் பறித்தெடுக்கப்படுவதனால் பல்வேறுபட்ட சமூகச் சிக்கல்களுக்கு அவள் முகம் கொடுக்கவேண்டிய நிலையில் சமூகத்தில் போராடுகிறாள். இதற்காக பெண்ணியல்வாதிகள் குரல் கொடுத்தபோதும் பெண்களின் பெண்ணியல்வாத கருத்துக்கள் தடுத்துநிறுத்தப்பட்டு இந்த உலகில் அவர்களின் கருத்துரிமைகளை பறித்து எடுக்கப்படும் நிலை உருவாகிறது. பெண்ணியம் தொடர்பான பெண்ணிலைவாதிகளின் கருத்துக்கள் பல சமூக நடைமுறைக்கு கொண்டு வரவேண்டிய மிகவும் சிறந்த சிந்தனைப் போக்குகள் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன. ஆனால், இந்தக் கருத்துக்களுக்கு மாறாக பெண்ணிலைவாதிகள் ஆண்களுக்கு எதிரானவர்கள் என்று தெரிவிக்கப்படுவனவெல்லாம் போலியானவையே. ஆகவே, சமூகவியல் ரீதியில் பெண்ணியல் சிந்தனைகள் என்பவை மிகவும் சிறந்தனவாகவே காணப்படுகின்றன. ஆரம்ப காலங்களில் பெண் என்பவள் ஒரு சமூகப் பிராணியாகவே வீட்டு வேலைகள் செய்யும் அடிமையாகவே பார்க்கப்பட்டாள்.

பெண்கள் மீது சமூகம் ஏற்கமுடியாத கோரிக்கைகளை சுமத்தியது. ஆனால், இன்று அந்த நிலை மாறி பெண்கள் எதிர்பாராத அளவுக்கு சுதந்திரம் அடைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். பெண் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள பெண்கள்தான் போராடவேண்டும் என்று எண்ணுவது தவறான விடயமாகும். இதற்கு ஆண்களின் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டும். ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் வெறுக்கவேண்டியவர்கள் இல்லை. இயற்கையின் படைப்பின்படி அவர்கள் உடல் ரீதியாக வேறுபட்டவர்களேயொழிய அவர்கள் இருபாலாரும் ஒத்துணர்வுடன் கூடி வாழவேண்டியவர்கள். இதனை உணர்ந்து செயற்படும்போது சமூகத்தில் பாலியல் சமத்துவம் இயல்பாகவே ஏற்பட்டு பாலியல் வன்முறைகள் குறைந்து வருகிறது. இன்றைய நவீன உலகில் பெண்ணுரிமை குறித்த பெண்ணியச் சிந்தனைகள் உலகெங்கும் பரந்து நிற்கிறது. சமுதாயத்தில் பெண்கள் பல்வேறு துறைகளிலும் ஆணுக்கு சரிநிகராக தம்மைப் பற்றிய புதிய அறிவுடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய பெண்கள் பாரதி கண்ட புது யுகம் நோக்கி புதுமைப் பெண்களாக பல சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனினும், பெண்களைப் பற்றிய சமூகப் பார்வை தவறானதாவே காணப்படுகின்றது. அதனைவிட பல்வேறுபட்ட ஊடகங்களும் பெண்களை கவர்ச்சிப்பொருளாக பயன்படுத்துவதால் பெண்கள் பாலியல் சந்தைப்பொருளாக சித்திரிக்கப்படுகிறார்கள் பொதுவாக பலரும் பெண்களை அவர்களது உணர்வின் தளத்தில் நின்றுநோக்கத் தவறிவிடுகின்றனர். ஊடகங்கள் பொதுவாக பெண்களை மென்மையானவர்களாகவும் உணர்ச்சிமிக்கவர்களாகவும் சித்தரிக்கின்றன

பெண்கள் குடும்பத்தை கவனிப்பவர்களாகவும், தாய்மை உணர்வுள்ளவர்களாகவும் சித்திரிக்கும் ஊடகங்கள் அவளது அறிவார்ந்த பக்கங்களை சித்திரிக்க தவறிவிடுகின்றன. சமூகத்தில் ஊடகங்கள் பெண்களுடன் ஆக்கபுர்வமான கருத்துப்பகிர்வை மேற்கொள்வதற்கு பதிலாக ஊடகங்களில் பெண்கள் அழகுக்கலை, சமயற் கலை போன்றவை சம்பந்தமான நிகழ்ச்சிகளையே பெரும்பாலும் வெளிப்படுத்துகின்றன. விளம் பரங்களிலும் சினிமாக்களிலும் பெண்களின் கவர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகி றது. மேலும் இன்று பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் அதற்கான தீர்வுகளையும் வெளியிடுவதற்கு பெரும்பாலான ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

ஊடகங்களின் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றில் பெண்களின் அழகு, சமையல், காதல், குடும்பம் போன்ற கருத்துக் களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இன்று பெரும்பாலான பெண்கள் வேலைக்கு செல்பவர்களாக இருக்கின்றார்கள். ஆயினும் பெண்களுக்கு சமூகத்தில் இருக்கும் வேலையின் பங்கு என்ன என்பதை ஊடகங்கள் காட்டத் தவறி விடுகின்றன. சமத்துவமிக்க ஊடகத்துறையில் பால்நிலை சமத்துவத்துக்கு முக்கியம் கொடுப் பது அவசியமானதாகும். ஊடகங்களில் இடம் பெறும் நேர்காணல்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் அதிகமாக ஆண்களே கையாளப்படு கிறார்கள். பெண்களிடம் தேடல் இல்லை என்றே பொதுவாக பலரும் கருதுகிறார்கள். இது மிகவும் தவறான கண்ணோட்டமாகும். பெண் கள் சிந்தனையாலோ, அறிவாற்றலாலோ ஆண் களை விட எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை. எனவே, ஊடகங்கள் ஆண், பெண் சமத்துவத்துடனும் சரியான பெண் நோக்குகை யுடனும் தமது நிகழ்ச்சிகள் மற்றும் ஆக்கங்களை வெளிக்கொண்டுவரல் அவசியமாகும். எனினும் சில ஊடகங்கள் பெண்களை முன்னிலைப் படுத்தி பெண்களுக்கான சஞ்சிகைகளை வெளியிட்டு மக்கள் மத்தியில் ஒரு விழிப்பு ணர்வை ஏற்படுத்துகின்றன. அவ்வாறான சஞ்சிகைகள் பெண்கள் விடுதலை பெற, அவர்கள் சமூகத்தில் முன்னிலை வகிக்க வழிகாட்டி நிற் கின்றன. பெண்களே உங்கள் ஆளுமையையும் ஆற்றலையும் சமூகத்தில் அனைத்து துறை களிலும் வெளிப்படுத்தி எமது நாட்டில் சிறந்த வழிகாட்டிகளாக மிளிர உங்களை வழிப்படுத்தும் சிறந்த ஊடகங்களுடன் தொடர்ந்திருங்கள்.



# மிளிரும் மாதர் சங்கம்


கோதண்டர் நொச்சிக்குளம் மாதர் சங்க உறுப்பினர்...

கோதண்டர் நொச்சிக்குளம் என்னும் கிரா மத்தின் மாதர் சங்கம் இம்மாத ஒளி அரசியின் பாராட்டுப்பெறும் மாதர் சங்கமாக தெரிவாகி யுள்ளது. இச் சங்கமானது பல கிராம முன்னேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தமது குழுச் சேமிப்பின் மூலம் வீட்டுத்தோட் டம், கால்நடை வளர்ப்பு, கிணறு, மலசலகூடம் அமைத்தல் போன்ற பயன்மிக்க செயற்பாடு களைச் செய்து கிராம முன்னேற்றத்தின் வழிகாட்டி யாகத் திகழ்கின்றது. கடன் வழங்குவதுடன் கடமை முடிந்ததென நின்றுவிடாது ஓய்வு நேரங்களில் குழு அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து அத்திட்டச் செயற்பாட்டாளரின் வீட்டுக்குச் சென்று உதவியும் ஒத்தாசையும் வழங்கி ஊக்குவிக் கின்றனர். இதனால் செயற்படுத்துபவர் பொறுப் புடனும், விருப்புடனும் தனது பணியைச் செவ்வனே செய்துமுடிக்கின்றனர். இத்திட்டத்தால் அவர்களின் வீடு மட்டுமன்றி சமூகமும், வளமடைவதை காணக்கூடியதாகவே உள்ளது.

மாதர் சங்கங்கள் கிராமத்தை நாட்டை முன் னேற்றும் பாரிய சக்தியும், வல்லமையும் கொண் டது. ஒவ்வொரு மாதர்சங்கங்களும் தமது பொறுப்பை திறம்படச் செய்து கிராம முன்னேற்றத்திற்கு பங் களிக்க வேண்டும். இம்மாதர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் ஒளி அரசி பாராட்டி மகிழ்கின்றாள்.

**ஆசிரியர் குறிப்பு** - ஒளி அரசியின் பாராட்டைப் பெறவிரும்பும் மாதர் சங்கங்கள் ஒளி அரசியுடன் தொடர்பு கொண்டு தமது ஆக்கபூர்வமான செயற்பாடுகளை தெரியப் படுத்தி ஒளி அரசியின் பாராட்டுப் பெறும் மாதர் சங்க மாக இணைந்துகொள்ளலாம். மாதர் சங்கங்களின் விசேட நிகழ்வுகளும் ஒளி அரசியில் பிரசுரிக்கப்படும்.



# உலகில் இறைவனால் மட்டுமே அமைதியை அருளமுடியும்

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு சீடர்களைச் சந்தித்தபோது அவர்களுக்கு 'அமைதி உரித்தாகுக' என்று வாழ்த்தினார். இவ்வாழ்த்து அவர்களுக்கு மூன்று தடவை கிடைத்தது.

இவ்வுலகில் எவ்வளவு பணம் இருந்தாலும், இனபந்துக்கள், சொந்த பந்தம் இருந்தாலும்கூட எவராலும் சாந்தி என்னும் அமைதியைக் கொடுக்கமுடியாது. இறைவன் ஒருவரால் மட்டுமே அமைதியை அருளமுடியும்.

எனவே, ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள். அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். (ஏஸா.55:6:9) கொடியவர் தம் வழிமுறைகளையும் தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக. அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும். அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார். அவர்கள் தம் கடவுளிடம் வரட்டும். ஏனெனில், மன்னிப்பதில் அவர் தாராள மனதினர்.

''என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல; உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல'' என்றார் ஆண்டவர். மண்ணிலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல் உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும் உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்து இருக்கின்றன.

மழையும், பனியும் வானத்திலிருந்து இறங்கிவருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச் செய்து விதை விதைப்பவருக்கு விதையையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்கு திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயற்படுத்தி எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பிவருவதில்லை. மகிழ்ச்சியுடன் நீங்கள் புறப்பட்டுச் செல்வீர்கள். அமைதியுடன் நடத்திச் செல்லப்படுவீர்கள்.

இயேசு உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாள் மாலை வேளை யூதர்களுக்கு அஞ்சி தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தார்கள் சீடர்கள்.

அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக' என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின்பு தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, ''உங்களுக்கு அமைதி உரித்தாகுக. தந்தை என்னை அனுப்பியதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன்'' என்றார். இதைச் சொன்னபின்பு அவர், அவர்கள் மேல் ஊதி தூய ஆசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா'' என்றார்.

மேலும், பன்னிருவர் ஒருவரான திதிம் என்னும் தோமா, இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்ற சீடர்கள், அவரிடம் ''ஆண்டவரைக் கண்டோம்'' என்றார்கள். தோமா அவர்களிடம், அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, ''என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்'' என்றார். எட்டு நாட்களின் பின்பு அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடுகூட இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக' என்று வாழ்த்தினார். பின்னர் தோமாவிடம், ''இதோ என் கைகள். இங்கே உன் விரலை இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைக் கொள்'' என்றார். தோமா அவரைப் பார்த்து, ''நீரே என் கடவுள். நீரே என் ஆண்டவர்'' என்றார். இயேசு அவரிடம், ''நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமல் நம்புவோர் பேறு பெற்றோர்'' என்றார்.

''இறுதிவரை உலகம் முடியும்வரை உங்களுடன் இருக்கின்றேன்'' என்று கூறினார். ■




அறிந்தும் அறியாதுள்ள பல விடயங்களைச் சொல்கிறது பூநகரி பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கன்னி முயற்சியான ''அறியாமலே.''

இன்றைய காலகட்டத்தில் இளைஞர், யுவதிகள் எவ்வாறு முகப்புத்தக பாவனையினால் அல்லலுறுகின்றனர் என்பதை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது இக்குறுந் திரைப்படம்.

'ஹாய்'

'ஹலோ'

எப்படி இருக்கிறீங்க?

உங்கட பேரேன்ன?

இன்றைய இளம் சமுதாயத்தினரின் மிகப் பரிச்சையமான வார்த்தைப் பிரயோகங்கள் இவை.

திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் ஓர் ஆண், கல்லூரி மாணவி ஒருவரின் வாழ்வில் முகப்புத்தக அறிமுகத்தின் மூலம் எத்தகைய ஒரு கொடூர செயலைச் செய்துவிடுகின்றார் என்பதையும் அச்செயல் அப்பெண்ணின் வாழ்வை மட்டுமன்றி அந்த இளைஞனின் மனநிம்மதியையும் சீர்குலைத்து விடுகின்றது, என்பதையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் இயக்குனர்.

இலத்திரனியல் சாதனங்களைத் தவறாகப் பயன்படுத்துவதனால், சமூகம் எத்தகையதொரு பாரிய சீர்கேட்டினை எதிர்கொள்கின்றது என்பதை இன்றைய சமுதாயத் தேவையைத் துல்லியமாக அழகாகச் சொல்லித் தனது படைப்பின் அவசியத்தையும் உணர்த்தியிருக்கிறார்.

தொலைபேசிக் காதல்கள் பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தும் விபரீத விளைவுகளையும் கோர மரணங்களையும் கூறுகின்றது 'அறியாமலே.'

பூநகரி என்னும் இடத்தின் எழில் கொஞ்சும் காட்சிகள், அழகாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. நாயகனும் நாயகியும் நடிப்பாற்றலை திறம்பட வெளிப்படுத்தியிருந்தபோதும் சட்டென ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணாய் மனதில் பதிந்துவிடுகின்றாள் நாயகி.

நாயகன் தனது நடிப்பில் பலவாறான உணர்ச்சிகளைக் காட்டியிருந்தாலும் நடிப்பை இன்னும் கொஞ்சம் மெருகூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கம்.

துணைப்பாத்திரங்களுக்கு தேவையே இல்லை என்பதுபோல காட்சிப்படுத்தியிருப்பது ஒரு குறையாக உள்ளது.

அழகான காட்சிகளின் மூலமும் தெளிவான வசனங்களின் மூலமும், வார்த்தையில் சொல்லாத சில காட்சி அமைப்பின் மூலமும் இன்றைய சமூகத் தேவையை உணர்ந்தும் தேவையான கதையைத் தெரிவு செய்தும் ''அறியாமலே'' சிறப்பான ஒரு குறும்படமாக உருவாகியுள்ளது. கதையின் ஆசிரியர், இயக்குனர் இருவரும் தமது வேலையை மிகச் சிறப்பாகச் செய்துள்ளதனால் இருவருக்குமே 'சபாஷ்' போடலாம்.

இவர்களின் இம்முயற்சி பல வெற்றிகளைக் காணவும் எமது நாட்டில் தற்போது பெருகியுள்ள குறும்பட வெளியீட்டுப் பட்டியலில் இடம்பிடித்த இம்முயற்சி நாளைய உலகில் சமுதாயத்திற்குப் பல செய்திகளைச் சொல்லும் திரைப்படத் தயாரிப்பு வரிசையில் இணையவும் வாழ்த்துகிறாள் ஒளி அரசி. ■

# நூறிலும் சாதனை

உலகிலேயே வயதுமுதிர்ந்த பெண்களிடையே கீனஸ் புத்தகத்தில் முதலாவதாக இடம்பெறும் மைக்ஹோ நாகா ஓஹா உலக சாதனை படைக்கும் வீராங்கனையாவார்.

உலக சாதனை படைக்கும் வீராங்கனைகளுள் நூறு வயது மூதாட்டியொருவர் நீச்சல் போட்டியில் உலக சாதனை படைத்துள்ளமை உலகளாவியரீதியில் வியப்பிற்குரியதாகும். முதுமையில் மரணத்தை தழுவும் காலகட்டத்தில் இந்த அரிய சாதனை அனைவரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நூறு வயதான மைக்ஹோ நாகா ஓஹா என்ற மூதாட்டி 1500 மீற்றர் தூரத்தை ஒரு மணித்தியாலம் 16 நிமிடத்தில் நீந்திக் கடந்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி மேற்கு ஜப்பானில் ஏகீம் நகரிலுள்ள மாட்ஸ்சயாமா நீச்சல் தடாகத்தில் இந்த சாதனை நிகழ்ந்தது.

நூறு வயது முதல் நூற்றிநான்கு வயதிற்கிடைப்பட்ட மூதாட்டிகளுக்கிடையில் நடைபெற்ற ஃபீரிஸ்டைல் நீச்சல் போட்டியில் நூற்றாண்டு வயது வரிசையில் முதன் முதலாக சாதனையீட்டி கீனஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளமை மூதாட்டிகளுக்கென தனித்துவமான பெருமையைத் தேடித் தந்துள்ளது எனலாம்.

நூறு வயதிலும் ஆரோக்கியமாக வாழ்ந்து வரும் வயோதிபப்பெண்கள் மத்தியில் இவர் முதலாவது நீச்சல் வீராங்கனையாகத் திகழ்கின்றார். இவர் தனது 80 ஆவது வயதில் தனது நீச்சல் பயிற்சியை மேற்கொண்டு நாளாந்த உடற்பயிற்சியாக வழக்கப்படுத்திக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் நீண்ட ஆயுளுடன் தான் உயிர் வாழ்ந்தால், 105 வயது வரை நீச்சல் போட்டியில் கலந்து கொள்ள ஆர்வம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றார்.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஜப்பானில் 59,000 பேர்வரையில், நூறு வயதைக் கடந்தவர்கவைவும், ஆரோக்கியமாக வாழ்ந்துவருவதாகவும் ஆய்வுக் கணிப்பீடு ஒன்றினை ஜப்பானிய அரசு வெளியிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது, ஒரு லட்சம் மக்கள் மத்தியில் 46 பேர் வரையில் நூறு வயத்திற்கு மேற்பட்டவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல இவர்கள் உடல், உளரீதியாக எந்தவிதமான நோய் நொடிகளுமின்றி ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ■


நூறுவயது நீச்சல் நாயகி மைக்ஹோ நாகா ஓஹா



**ஆசிரியர்களுக்கு ஒரு நற்செய்தி**

அடுத்த இதழில் இருந்து அதிபர் - ஆசிரியர் - மாணவர்களுக்
கிடையிலான அணுகுமுறைகள், நிர்வாக விடயங்கள்,
உளவியல்சார் விடயங்கள் என்பவற்றை உள்ளடக்கி தொழில்சார்
முன்னோடிப் பரீட்சைகளுக்கு ஏற்ற கட்டுரைகள் வெளிவரவுள்ளது
என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர் -

# சந்தேகம்

ஒரு நாள் இரண்டு தேவதைகளுக்கு சந்தேகம் வந்தது. இறைவனிடம் பலர் வந்து வேண்டிக் கொள்கின்றனர். அப்படி வேண்டிக்கொள்ளும் போது, 'இறைவா... நான் தினமும் உன்னை வணங்குகிறேன்' என்று சொல்கின்றனர்... இதில் உண்மையான பக்தி உடையவன் யார் என்பது தான் அந்த சந்தேகம் நேராக இறைவனிடம் சென்று தங்கள் சந்தேகத்தை கேட்டனர்.

அப்போது இறைவன், தேவதைகளே! இந்த ஊரில் பலரையும் போய் சந்தித்து யார் எனது உண்மையான பக்தன் என்பதை விசாரித்து வாருங்கள் என்றார். உடனே தேவதைகள் புறப்பட்டு பலரிடமும் சென்று விசாரித்தனர்.

ஒருவன், ''நான் கோவிலுக்குப் போகாத நாளே இல்லை... தினமும் மூன்று வேளை கடவுளை வணங்குகிறேன்,'' என்றான்.

அடுத்தவன், நான் வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் கோவில் போவேன்.

'இப்படியாக பலரும் ஏதோ ஒரு சமயத்தில் கடவுளை நினைப்பவராகவே இருக்க, இதில் யார் உண்மையான பக்தன்' எனக் கண்டுபிடிப்பது எப்படி என்ற குழப்பம் தேவதைகளுக்கு ஏற்பட்டது.

அப்போது அந்தவழியே அவசரமாகச் சென்று கொண்டிருந்த ஒருவனை நிறுத்தி, 'அப்பனே! உனக்குக் கடவுள் பக்தி உண்டா? நீ எப்போது கடவுளை வழிபடுவாய்?' என்று ஒரு தேவதை கேட்டது. அதற்கு அவன், எனக்குக் கடவுளை நினைக் கவே நேரமில்லை... அவசரமாக சிலருக்கு உதவி செய்ய வேண்டியிருக்கிறது. நான்போகிறேன்...

என்று பதில் கூறிவிட்டு ஏழைகளுக்கு உதவிட அவன் விரைந்தான். தேவதைகள் கடவுளிடம் திரும்ப வந்து நடந்ததை அப்படியே விவரித்தன. எல்லா வற்றையும் கேட்ட கடவுள் மௌனம் சாதித்தார்.

''தேவனே... உண்மையான பக்தன் யார் என்று கண்டுபிடித்து விட்டீர்களா?'' என்று கேட்டனர்.

'கண்டுபிடித்துவிட்டேன்!' என்றார் கடவுள்.

'யார் பிரபு? தினமும் மூன்று வேளை கோவிலுக்கு வருபவர்தானே?' என்று கேட்டனர் தேவதைகள்.

கடவுள் புன்னகைத்தபடியே, 'இல்லை... இல்லை... கடைசியாக என்னை நினைக்கக்கூட நேரமில்லாது ஏழைகளுக்கு சேவை செய்ய ஓடினானே... உண்மையில் அவன் தான் எனது உண்மைப் பக்தன்,' என்றார். அப்போது தான் உண்மை புரிந்தது தேவதைகளுக்கு.

# மூடநம்பிக்கையும் ஒரு மருத்துவமாகும்

## மூடநம்பிக்கையில் ஏன் பெண்களுக்கு அதிக ஆர்வம்?

பொதுவாக நமது குடும்பங்களில் ஆண்கள் தங்கள் குடும்பங்களின் பொருளாதார தேவைக் காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உழைத்துச் சம்பாதிப்பவர்களாக இருந்துவருவதுடன், பெண்கள் வீட்டின் ஏனைய பொறுப்புகளையும் ஏற்று குடும்ப நிர்வாகத்தை நடத்துபவளாகவும் குடும்பப் பொறுப்புகள் பிரிக்கப்பட்டு இத்தனை காலமும் வாழ்ந்துவந்துள்ளனர்.

இதனடிப்படையில்தான் பெண்கள் நம் முன்னோர்கள் நமக்குச் சொல்லிக்கொடுத்த நல்ல பழக்கவழக்கங்களை சடங்குகளாகவும், சம்பிதாயங் களாகவும் பின்பற்றி வந்துள்ளனர். அதன் பலனை தன் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் பெற்றுத் தருவதில் அக்கறையும் கொண்டிருந்தனர் எனலாம்.

திருமணம், குழந்தை பிறப்பு, வளர்ப்பு, வீட்டுச் சுத்தம், வீட்டு நிர்வாகம் என்பன பாட்டி, தாயார், மாமியார் ஆகியோரில் ஆரம்பித்து வீட்டுச்சிறார் கள் வரை அவர்களின் எதிர்பார்ப்புகளுடன் நிறைவேற்று வது வாழ்க்கையில் தொடரும் நிகழ்வுகளாகும்.

மேலும் பாரம்பரிய உணவுவகைகளையும் தயாரித்து வழங்குதல், சடங்கு, சம்பிரதாயங் களுக்கு ஏற்றவாறு வாழ்ந்துவருவதும் கவனத் திற்குரியது.

உதாரணமா, வாராந்தம் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் என்ற முறையைக் கையாள்வதால் உடம்பில் வெப்பம் காரணமாக ஏற்படும் நோய் களிலிருந்து தப்பித்துக்கொள்ள முடிகின்றது.

கைக்குழந்தையை முதல் ஒருவருடம் அல்லது ஆறுமாத காலத்துக்கு எங்கும் வெளியே திருவிழாக்கள், சினிமா, நாடகங்கள், சாவு வீடு என்று கொண்டுசெல்வதில்லை. இதனால் சனநெருக்கடி, காற்றின் மூலம் பரவும் தேவை யற்ற வைரஸ் மற்றும் பக்றீரியாக்களால் ஏற்படும் நோய்களைத் தடுத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் நிலவிவருகின்றது.

மேலும் இன்ன இன்ன நாட்களில் இன்ன இன்ன காய்கறிகள் சாப்பிடவேண்டும், இன்ன இன்ன கடலை, பயறு, தானியங்கள் சாப்பிட வேண்டும் எனவும் சம்பிரதாய முறைகளால் குடும்பம் சரிவிகிதமான சத்துக்களைக் கொண்ட உணவை உட்கொண்டு ஆரோக்கியமாக வாழவும் முடியும்.


வயதில் சிறியவர்கள் வீட்டுப் பெரியவர் களின் காலில் விழுந்து வணங்கும் சம்பிரதாயத்தை குடும்பத்தினர் கடைபிடிப்பதால் நம்மைவிட எல்லாவிதத்திலும் பெரியவர்கள் என்ற மரியா தையும் சிறியவர்கள் மனதில் ஓர் அடக்கத்தையும் பொறுப்புணர்ச்சியையும் உருவாக்கி குடும்பத்தில் ஒருமைப்பாடான ஸ்திரத்தனத்மையை அதிகரிக் கின்றது.

இப்படியாகக் குடும்பப்பெண்கள் வாழ்க்கை யில் ஒவ்வொரு கட்டத்திலும் நம் சடங்கு, சம்பிரதாயங்கள் மூலம் மிகப் பெரிய பலன்களைத் தானும் தன் குடும்பமும் அடைவதால் 'சம்பிரதாயம்' என்ற பெயரில் பெரியோர்கள் எவர் என்ன சொன்னாலும் அதை கடைபிடிப்பதில் அக்கறை செலுத்துவதுடன் பலநேரங்களில் பல மூட பழக்கவழக்கங்களையும் கடைபிடிக்கின் றனர். அதிலும் பெண்களின் ஆன்மீக உணர்வை வைத்து ஏமாற்றுபவர்களும் இன்று அதிகமாகி விட்டதால் மூட பழக்கவழக்கங்கள் இன்றும் அதிகமாகிவிட்டன.

பெண்களுக்கு உலக அறிவு, படிப்பறிவு ஆயிரக் கணக்கான ஆண்களுக்கு முன் இல்லாமையால் அவர்கள் அதை கண்ணை மூடிக்கொண்டு கடைபிடித்தார்கள் தவிர, சமயம், அஷ்டானம் குறித்து ஏமாற்றுபவர்களும் அப்போது அதிகமாக இருக்கவில்லை. ஆனால், இன்று பெண்கள் உலக அறிவு, விஞ்ஞானம், மருத்துவம் என்றெல் லாம் அறிவு தாராளமாக பெற்றிருப்பதுடன், சாத னைகளும் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, ஒவ்வொரு விடயத்தையும் ஆராய்ந்து 'இதற்காகத்தான்' நம் முன்னோர்கள் சொல்லி யிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டு கடை பிடித்தால் மூட பழக்கவழக்கங்கள் குறையும். அத்தோடு நம் முன்னோர்களின் மதிநுட்பமும் பெருமையும் புரியும். அத்துடன், அடுத்தடுத்து வரும் சந்ததியினர் நலமுடனும், வளமுடனும் வாழ நம் மூதாதையர் பாதைகளை உருவாக்கிக் கொடுத்துள்ளனர். இதனால் மனிதாபிமானமும், சமூக உணர்வும் பேணப்படுகின்றது.

நாமும் நம்மை சுற்றியிருக்கும் சமூகத்துக்கும் தலைமுறையினருக்கும் நன்மை பயக்கும் வகையில் நன்மை செய்யவேண்டும் என்ற உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். புரிந்துகொண்டும், தெரிந்துகொண்டும் விடயங் களைக் கடைபிடித்தால் எத்தனையோ பெரிய மாற்றங்கள் உருவாகும் என்பதில் ஐயமில்லை.



# நமது குழந்தைகள் நல்லமுறையில் கற்கவேண்டும். அதற்கு என்னதான்வழி!

கற்றல் என்பது மாற்றம் என்பதாக கூறுவர். மாற்றத்தை நோக்கிய நகர்வில் தன் குழந்தையும் உள்வாங்க வேண்டும் என்பதில் எந்தப் பெற்றோருக்குத்தான் விருப்பம் இல்லை. முன் பள்ளிப் பருவத்திற்கு முன்னமே தன் குழந்தை இப்படி வரவேண்டும் அப்படிவரவேண்டும் என்கிற கனவுலகில் சஞ்சரிப்பர் பெற்றோர். அவ்வாறு பாடசாலைக்குச் செல்லும் வயதில் ஆயிரம் கனவுகளுடன் பாடசாலைக்குள்ளே செல்லும் பிஞ்சுக்குழந்தையை ஆர்வம் ஊட்டி கற்றலின் பால் செலுத்த வேண்டிய கடப்பாடு ஆசிரியருக்கு உண்டு. அவர்கள் நல்லமுறையில் கற்கின்றார்களா என்பதை பெற்றோர்கள் கவனிக்கவேண்டும். இரண்டு கைளும் இணைந்தால்தான் சப்தம் வருவது போல ஆசிரியரும் பெற்றோரும் இணைகின்ற போது பிள்ளையின் கற்றலில் மாற்றம் ஏற்படும். அது கற்பதற்குரிய வழிகளை சரியாகவே பயன்படுத்தும்.

எந்தவொரு விடயத்தையும் பிள்ளை கற்கின்றபோது அதனை அனுபவித்தே கற்க வேண்டும். அனுபவம் புதுமை என்று நம் எல்லோருக்கும் தெரிந்த விடயமே. அந்த அனுபவத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை ஆசிரியர் பாடசாலையிலும் பெற்றோர் வீட்டிலும் தன் அயலிலும் ஏற்படுத்திக் கொடுப்பது கட்டாயமாகும். அதன் ஊடாக மாற்றம் ஏற்படும். அது கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தி பிள்ளை அனுபவ வாயிலாக கற்றுக் கொள்கின்றான். ஆனால் நாம் என்ன செய்கிறோம் என்றால் பிள்ளை அதிக மார்க் வாங்க வேண்டும் என்பதற்காக குழந்தைகளை விளையாடவே விடுவதில்லை. ஆராய்கின்ற ஊக்கத்தைக் கொண்டுள்ள பிள்ளையிடம் அதனை கொடுக்காது அவனைப் படிபடி என்றே கூறுகின்றோம். இது அந்தக் குழந்தையின் கற்றல் தொடர்பான ஆதங்கத்தை ஆர்வத்தை குறைத்து மங்கிடச் செய்யும். சுதந்திரமான மனத்துடன் கவலையின்றி படிப்பதற்கு உதவியாக நாம் இருக்க வேண்டும். பொதுவாக நாம் தினந்தோறும் புதியபுதிய விடயங்களை கற்கிறோம். கற்றல் செயல்பாடானது தொடர்ந்து செல்லும் செயல்பாடாக நம் வாழ்வில் இடம்பெறவேண்டும். அதனைப் புரிந்து நடப்பவனே புத்திசாலியாவான். கற்றல் என்பது நம்மிடம் காணப்படுகின்ற புத்தகத்தில் உள்ள விடயம் மாத்திரமே என்று நினைத்தால் அது தவறாகும். அது பரந்த அளவில் காணப்படுகின்றது. புத்தகத்திற்குள் மாத்திரம் அடங்கிய தன்று. எனவேதான் கற்றல் என்பது குழந்தை கருவறையில் இருக்கின்றபோதே ஆரம்பித்து மரணம் வரையிலும் அது நீடிக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தோமஸ் அல்வா எடிசனின் கதையை நாம் வாசித்திருக்கின்றோம். கோபப்படும் அளவுக்கு பாடசாலையில் நடந்து கொண்ட எடிசன் தன்னுடைய தாயாரே அதிக நேரத்தை ஆசிரியராக இருந்து கற்றுக் கொடுத்திருக்கின்றார். பல கண்டுபிடிப்புக்களுக்குச் சொந்தக்காரனாக உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாற்றியது எது. அவரது அனுபவமிக்க கல்விதான் காரணமாகும்.

நாம் ஒவ்வொரு நாளும் பல புத்தம்புதிய விடயங்களைப் பிரசுக்கிறோம். கேள்விப்படுகிறோம். பயணிக்கிறோம் பணிவிடை செய்கிறோம். இவற்றின் ஊடாக புதிய அனுபவத் தைப் பெறுகின்றோம். இவை அனைத்துமே கற்றல் செயல்பாடுகளே. நாம் இதற்கு முன்பு அறிந்திராத ஒன்றை தற்போது புதிதாக அறிந்து கொள்வதே கற்றல் ஆகும். எதுவாகவும் இருக்கலாம். ஆனால் அந்த விடயம் எமது வாழ்வுக்கும் நமது சிந்தனைக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். அதில்தான் வெற்றி தங்கியுள்ளது. இவ்வாறுதான் நமது குழந்தையின் கல்வியும். கற்றலில் குழந்தை சிறப்பான நடத்தையைக் காண்பிக்க வேண்டுமாக இருந்தால் அதற்கான சில வழிமுறைகளை நாம் பின்பற்றுதல் அவசியமாகும்.

1. எவ்விதமான கவலையுமின்றி கற்றல். ஒரு பிள்ளை புத்தகம் ஒன்றை படிக்கப்போகிறான் என்றால் அதை மனப்பாடம் செய்ய வேண்டுமே என்கிற கவலையின்றி படித்தல் வேண்டும். அதாவது இதனைப் படிப்பதன் ஊடாக புதிய விடயம் ஒனறை அறிந்துகொள்கிறோம் என்கிற எண்ணம் மட்டுமே அந்தப் பிள்ளையிடம் காணப்படவேண்டுமே தவிர படிப்பதை மனப்பாடமிட்டு நெட்டுருச் செய்வதாக இருக்கக் கூடாது. மனமிடுகின்ற கஷ்டத்தை அக்குழந்தை நினைத்து கவலைப்படுமாகி இருந்தால் அங்கு உண்மையான கற்றல் இடம்பெறாது.

மிகுதி



## திகில் மன்னன் ராஜேஷ்குமார் எழுதிய

# இருட்டில் வைத்த குறி

9

''சமாளிக்கலாம்... அப்பாவோட மரணம் நமக்கு இப்போ சாதகம். பொலிஸோட கெடுபிடி அதிகமா இருக்காது. விசாரணையை சீக்கிரமாவே முடிச்சிட்டு போயிடுவாங்க.''

இண்டர்கம் கிணுகிணுத்தது.

யோகேஷ் ரிஸிவரை எடுத்தான்.

'எஸ்.''

ரிசப்ஷனிலிருந்து அந்தப் பெண் பேசினாள். ''உங்கள் தந்தை மரணம் அடைந்துவிட்டதாக சொன்னீர்கள். மேற்கோண்டு என்ன செய்யப் போரீன்கள்.

''உடலை மெட்டார்ஸீக்குக் கொண்டு போக விரும்புகிறோம். அதற்கான விமான வசதி கிடைக்குமா?.''

''அதற்கான ஏற்பாட்டை நீங்கள்தான் செய்து கொள்ளவேண்டும். நாங்கள் உங்களை கைய்ட் பண்ணுகிறோம்.''

''நாங்கள் என்ன பண்ணவேண்டும்?''

''சாங்கி ஏர்போர்ட்டில் 'டைம்ஸ் எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிட்டட்' என்று ஒரு நிறுவனம் இயக்குகிறது. அந்த நிறுவனத்தோடு நீங்கள் தொடர்புகொள்ளுங்கள். விஷயத்தைக் கூறுங்கள். பணியின் சிரமத்துக்கு ஏற்றவகையில் கட்டணத்தை பெற்றுக்கொண்டு - உங்களுக்கு உதவி செய்வார்கள்.''

''நள்ளிரவு சேவை உண்டா?''

''உண்டு... நீங்கள் இப்போது சாங்கி ஏர்போர்ட் போர்ட் போக விரும்புகிறீர்களா?''

''ஆமாம்! என் தந்தையாரின் உடலை உடனடியாக அடுத்த விமானத்தில் மெட்ராஸ் கொண்டு போகவே விருப்பப்படுகிறோம்.''

சாங்கி ஏர்போர்ட் போக - ஹொட்டல் டாக்ஸியை ஏற்பாடு பண்ணட்டுமா?''

''ப்ளீஸ்.''

''நீங்கள் ஐந்து நிமிடம் கழித்துக் கீழே வாருங்கள்-டாக்ஸி தயாராக காத்து இருக்கும்.''

''நன்றி.''

யோகேஸ் பேசிவிட்டு - ரிசிவரை வைத்த அதே வினாடி அறையின் கதவு தட்டப்பட்டது.

''டொக் டொக்...''

புவனேஸ் வேகமாய் போய் கதவை திறந்தான். போலீஸ் சார்ஜேண்ட்கள் நின்றிருந்தார்கள்.

சார்ஜெண்டில் ஒருவர் கையிலிருந்த பேப்பரை பார்த்து விட்டு - '' மிஸ்டர் மார்த்தாண்டம். மிஸ்டர் யோகேஸ். மிஸ்டர் புவனேஸ்... இந்த அறையில்தான் தங்கியிருக்கிறார்களா?''

''ஆமாம்''

''நீங்கள் இந்தியரா?''

''ஆமாம்''

''உங்கள் உடைமைகளை சோதிக்க வேண்டும். சில வைரங்கள் திருட்டு போனது குறித்து -

வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் மீது... சிங்கப்பூர் பொலீஸீக்கு சந்தேகம்... எனவே...'' என்று சொல்லிக்கோண்டு போனவரின் பார்வை - கட்டிலில் படுத்திருந்த மார்த்தாண்டவரின் மேல்ப்பட - தன் நெற்றிப்பரப்பை சுருக்கினார் ''என்ன ஆயிற்று?''

யோகேஸ் சொன்னான். '' ஒரு துக்க சம்பவம் என் தந்தை மார்த்தாண்டம் திடீரென்று மாரடைப்பில் இறந்து விட்டார் இந்த சம்பவம் ஐந்து நிமிஷம் களுக்கு முன்புதான் நடந்தது.''

சார்ஜேண்ட் புவனேஷை ஏறிட்டார். '' நீங்கள் இரண்டு பேரும் சகோதரர் களா?''

''ஆமாம்''

''சிங்கப்பூர் வந்து எத்தனை நாட் களாயிற்று?''

''இரண்டு நாள்''

''உங்கள் தந்தை இறந்ததுக்காக நாங்கள் வருத்தப்படுகிறோம். இருந்தா லும் எங்களுக்கு இடப்படுள்ள கட மையை நாங்கள் செய்தாக வேண்டும். உங்களுடைய உடைமையை எடுத்து காட்ட முடியுமா?''

யோகேஷ் ஷெல்ப்பில் இருந்த சூட்கேஸை காட்ட - சார்ஜேண்ட்ஸ் அதை நோக்கி நடந்தார்கள்.

ஒரு பதினைந்து நிமிஷங்களை செலவழித்து - நிதானமாய்க் கிளம்பி னார்கள். பின் சோர்வாய்த் திரும்பி யோகேஷைப் பார்த்தார்கள்.

''தொல்லை கொடுத்ததற்காக மன்னிக்க வேண்டும் உடலை இங்கே அடக்கம் பண்ணுகிறீர்களா? இல்லை இந்தியா கொண்டுபோகிறீர்களா?''

''இந்தியாவுக்கு கொண்டு போகப் போறம்.''

''சாங்கி ஏர்போர்ட் அதிகரிகளோடு தொடர்புகொண்டு அதற்கான ஏற்பாடு களை செய்யுங்கள்.''

சார்ஜெண்ட்ஸ் இயந்திரத்தனமாய்ச் சொல்லிவிட்டு வெளியேறினார்கள். அவர்கள் அந்த வாரந்தாவை கடக்கும் வரை மௌனம் காத்த புவனேஸ் நீளமான பெருமூச்சை வெளியேற்றி விட்டு - யோகேசைப்பார்த்தான்.

''இந்த பதினைந்து நிமிஷம் வேர்த்து விறுவிறுத்து போயிட்டன்.''

''எதுக்கும்... பயப்படாதே புவனேஸ். நீ ரூம்லயே இரு. நான் சாங்கி ஏர்போர்ட் வரைக்கும் போய் - அப்பாவோட பாடியை ஃப்ளைட்ல கொண்டு போக ஏற்பாடு பண்ணிட்டு வந்துடுறேன்...''

''இப்பவோ?''

''ஆமா... ஏதாவது ஒரு ஃளைட்டைப் புடிச்சு... நாளைக் குச் சாயந்தரத்துக்குள்ளே நாம மெட்டார்ஸ் போயிடணும் வைரங்களைக் கொண்டுபோறதுக்காக - அப்பாவோட மரணம் சரியான நேரத்துக்கு உதவியிருக்கு...''

''யோகேஸ்!''

''சொல்லு...''

''அப்பாவைவிட இந்த வைரம்களை நீ பெரிசா நினைக்கிறியா?''

'' உயிரோடு இருக்கும்போது... அப்பா... பெரிசு. அவர் செத்த பின்னே... அப்பிடியே நினைச்சிட்டிருக்க முடியுமா?'' - சொல்லிவிட்டு - அறையினின்றும் வெளி யேறினான் யோகேஷ்.

லிப்டில் பயணித்து - ரிசப்ஷன் கௌன்டருக்கு வந்தான். ரிசப்ஷனிஸ்ட் சொன்னாள். '' டாக்ஸி உங்களுக்காக காத்தி ருக்கின்றது. நான் சொன்னது உங்களுக்கு நினை விருக்கிறதா? சாங்கி ஏர்போர்ட்டில் டைம்ஸ் எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்துடன் தொடர்புகோள் ளுங்கள். அவர்கள் பாடியை கொண்டுபோக ஏற்பாடு செய்வார்கள்.''

''நன்றி''

போர்டிகோவில் காத்திருந்த டாக்சியை நோக்கி போனான் யோகேஷ்.

சாங்கி ஏர்போர்ட்.

அந்த நடுநிசி நேரத்திலும் பரபரப்பாய் இருந்துது. நூறு ஹோட்டல்களை ஒரே இடத்தில் கட்டின மாதிரியான பிரமிப்பு. ஐம்பதுக்கும் மேற்பட்ட விமானங்கள் ராட்சஸ விமானங்கள் ரன்வேயில் இளைப்பாறிக் கொண்டிருக்க - லௌஞ்சில் - ஏராள அந்நிய ஜனங்கள். டெலி கெய்ட் சார்ட்டரில் பயணிகள் தங்களுக்குத் தேவையான சங்கதி களை தேடிக்கொண்டிருக்க, டெலிஃபேக்ஸ் மெஷின்கள் - கண்ணாடிச் சுவர்களுக்குப் பின்னால் மௌனமாய் இயங்கிக் கொண்டிருந்தது.

சாங்கி ஷாப்பிங் காம்ப்ளக்ஸைத் தாண்டிக்கொண்டு - எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட்டுக்குள் நுழைந்தான் யோகேஸ்.

வரிசை வரிசையாய்ச் சின்னச்சின்ன கௌன்டர்கள். அவற்றுக்கு முன்னால் சொற்பமாய் ஜனங்கள். யோகேஸ் ஒரு காலியான கௌன்டர் முன்பாக வந்து நின்று உள்ளே எட்டிப்பார்த்தான்.

அந்த வழுக்கை ஆசாமி பார்த்துக்கொண்டிருந்த ஒரு புத்தகத்தை நகர்த்தி வைத்துவிட்டு - ''எஸ்...'' என்றார்.

யோகேஷ் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு விஷயத்தைச் சொன்னான். வழுக்கத்தலை மோவாயை தேய்த்து.

(தொடரும்...)

# பொது அறிவுப் போட்டித் தொடர் - 04

அறிவுத் தேடலில் ஆர்வமுடைய வாசகர்களது அறிவுப்பசியை தீர்க்கும் ஒரு களமாக ஒளிஅரசி **சைப்பி ரெடிங் கம்பனியினது** அனுசரணையுடன் பொது அறிவுப் போட்டித் தொடரினை அறிமுகப் படுத்தியுள்ளது. இங்கு தரப்படுகின்ற பொது அறிவு சம்பந்தமான கேள்விகளுக்கு சரியாக விடை எழுதி அனுப்பும் வாசகர்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு முறையே ரூபா 750, ரூபா 500 மற்றும் ரூபா 250 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

## வினாக்கள் :

01. உலகில் தபால் அட்டைக்கான மிகப்பெரிய முத்திரை எப்போது? எங்கு வெளியிடப்பட்டது?

02. உலகில் அதிகளவு சீனியை அன்றாட பாவனைக்கு பயன்படுத்தும் நாடு எது?

03. வானில் நீண்ட நேரம் தரித்துநின்ற வானவில் எனக் குறிப்பிடப்பட்டது எங்கே? எப்போது?

04. விண்வெளியில் முதலாவதாக வலம்வந்த பெண்மணி யார்? எப்போது?

05. உலகிலேயே அதிகமாக காப்பி அருந்தும் மக்கள் உள்ள நாடு எது?

06. மிகப் பழைமையான அரும்பொருட்காட்சிச்சாலை எங்கே அமைந்துள்ளது?

07. உலகில் அதிகளவில் விற்பனையாகிய முதலாவது தினசரிப் பத்திரிகை எது? எங்கே?

08. உலகில் முதன்முதலாக வெளிவந்த ரூபாய் நோட்டுகளை கண்டுபிடித்தது எந்த நாடு?

09. உலகில் அதிகமாக பேசப்படும் மொழி எது?

10. முதலாவதாக எங்கே? எப்போது புகைப்படம் எடுக்கப்பட்டது?


அனுசரணை

**SAIFI TRADING COMPANY**

IMPORTERS OF PAPER & BOARD

No. 96, New Moor Street, Colombo - 12.


உங்களது விடைகளை ''ஆசிரியர் ஒளிஅரசி, இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14'' என்ற முகவரிக்கு 20.05.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

### பொது அறிவுத் தொடர் - 04

முழுப்பெயர் : ................................

................................................

முகவரி : ................................

................................................

................................................

தொலைபேசி இல.: ................................

ஒப்பம் : ................................

### பொது அறிவுத் தொடர் - 02இல் வெற்றியீட்டியவர்களும் அவற்றிற்கான விடைகளும்

01 ஆம் பரிசு
கே. சாரதா, கொழும்பு - 06.

02 ஆம் பரிசு
எஸ். பவித்திரா, திருகோணமலை.

03 ஆம் பரிசு
ஆர். சுவோதா, மானிப்பாய்.

01) இங்கிலாந்து
02) பிரட்னாப் முகர்ஜி
03) பராக்கிரமபாகு
04) Eddie Redmayne
05) ஔவையார் (நக்கீரன், கபிலர்)
06) 1930 - 1958 வரை
07) சீனா
08) பிலிப்பைன் நாட்டின் மணிலா நகரில்
09) பெப்ரவரி 21
10) பேடன்பவல்



திருமதி. சரஸ்வதி தியாகராஜன்

# வெற்றிக்கு வழி வகுக்கும் சுதந்திர உணர்வு

இம்மாத மங்கை

இன்றைய காலகட்டத்தில் பல புத்திஜீவிகள் தமது ஓய்வுக்காலத்தைப் பயனுள்ளதாக மாற்றிக்கொள்வதற்காகவும், தமது ஆத்ம திருப்திக்காகவும் சமூகசேவைகளில் விருப்புடன் ஈடுபடுகின்றனர். இவ்வாறானதொரு மேன்மையான சிந்தனையுடன் சமூக சேவைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ளவர் திருமதி. சரஸ்வதி தியாகராஜன். எமது ஒளி அரசியில் 'இம்மாத மங்கை' என்னும் பகுதிக்காக அவரை இணைத்துக்கொண்டபோது அவர் எம்மோடு பகிர்ந்துகொண்டவை உங்களுக்காக.

நான் திருமதி சரஸ்வதி தியாகராஜன். புலோலி மேற்கைச் சேர்ந்த கந்தையா இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வி. எனது பெற்றோர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மிகுந்த ஏழ்மையில் வாழ்ந்த எனது பெற்றோர் கண்டாவளைப் பிரதேசத்தில் வயல் நிலச் செய்கையாளர்களாக இருந்தனர். எனது ஆரம்பக்கல்வி கண்டாவளை மகாவித்தியாலயத்திலேயே இடம்பெற்றது. சிறுவயதில் படிப்பில் மிகுந்த கெட்டித்தனம் உள்ள பெண்ணாக விளங்கிய நான், எனது பத்தாவது வயதின் பின்னர் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பட்டதாரியானேன்.

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பின் பின்னர் கொழும்பு குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியை ஆரம்பித்தேன். அதன்பின்னர் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள எழுதுவினைஞராக மாற்றம்பெற்று யாழ்ப்பாணம் வந்தேன். எனது கணவர் புலோலி மெதடிஸ்த மிஷன் கல்லூரியின் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர். இக்காலப் பகுதிலேயே அதிசிறப்பு எழுதுவினைஞர் சேவையில் சித்தியடைந்தேன். அதன்பின்னர் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளருக்கான பரீட்சையிலும், காணிப்பதிவாளருக்கான பரீட்சையிலும் சித்தியெய்தி காணிப்பதிவகத்தில் கடமையாற்றினேன். ஓய்வுக்காலத்தின் பின்னரும் ஒப்பந்த அடிப்படை ஊழியராகக் கடமை புரிந்தேன்.

எனது ஓய்வுக்காலம் பயனுள்ள விதத்தில் கழியவேண்டும் என எண்ணிய நான், பல சமூகசேவை அமைப்புகளில் என்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளேன். கந்தமுருகேசனார் சனசமூக நிலைய செயலாளராகவும், ஆலயங்களின் நிர்வாக சபைச் செயலாளர், உறுப்பினராகவும், வடமராட்சி நல்லொழுக்க நிறுவன உறுப்பினராகவும், கந்த முருகேசனார் பாலர் பாடசாலை நிர்வாக சபை உறுப்பினராகவும், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினராகவும் உள்ளேன். இந்தச் சமூக சேவைகள் எனக்கு ஆத்ம திருப்தியைத் தருகின்றன.

பெண்களுக்கான பாதுகாப்பு மிக மிகக் குறைவாகவே உள்ளது. சரியான பாதுகாப்பு அங்கீகாரத்தை சமூகம் வழங்கவேண்டும். இன்றைய காலத்தில் பெண்கள் கல்வியில் முன்னிலையிலும், தொழிற்றுறைகளில் மேல்நிலையிலும் உள்ளனர். இந்நிலை பெண்களிடம் சுதந்திர உணர்வைத் தோற்றுவித்துள்ளது. ஆண்களுக்கு நிகராக சகல துறைகளிலும் உள்நுழைந்து வெற்றியுடன் செயற்படுகின்றனர். இதுவே சில வன்முறைச் செயற்பாடுகளுக்கும் காரணமாக உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிக்கலில் இருந்து விடுபட்டு பெண்கள் சுயமாக வாழ்வது தவறான விடயமல்ல. குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வும் உள்ளவர்களாக வாழவேண்டியது அவசியம். ■



# திட்டமிடலும் வ... வெற்றியின்...

## நாளை என்ன வேலைசெய்ய வேண்டும்...

**01. உங்களைப் பற்றியும் உங்களது குடும்பம் கல்வி நிலை பற்றியும் கூறுங்கள்.**

எனது பெயர் முகமட் ஷரீப் விஜிதா. நான் அம்பாறை மாவட்டத்திலுள்ள மருதமுனை என்னும் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றேன். க.பொ.த. உயர்தரம் வரை கற்று விட்டு 25 வருட திருமண வாழ்க்கையில் 6 குழந்தைகளுக்குத் தாயாக இருக்கிறேன்.

**02. கணவனால் கைவிடப்பட்ட நீங்கள் வருமானம், குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய நிலை, இதைவிட சமூகத்தின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய சூழல், இவ்வாறான சந்தர்ப்பங்களை எவ்வாறு முகம் கொடுத்தீர்கள்?**

ஆரம்பத்தில் இருவரும் இணைந்தே தொழிலில் ஈடுபட்டிருந்தோம். அதாவது உற்பத்தி செய்யும் பகுதியை நானும் விற்பனை செய்யும் பகுதியை என் கணவரும் செய்து வந்தோம். அவர் வெளியூரில் உள்ள கடையொன்றை நாடி வியாபாரம் செய்ய முற்பட்ட பொழுது மருதமுனையில் இருந்த கடையை நானே நடாத்த ஆரம்பித்தேன். தற்சமயம் பழைய கடையை உடைத்து விட்டு புதியொரு விசாலமான கட்டிடத்தைக் கட்டி அதில் எனது வியாபாரம் மற்றும் தொழிற்சாலையை நடாத்திக் கொண்டு வருகின்றேன். துனியா சுவீட் சென்ரரில் விடாது முயற்சியுடன் இரவும் பகலும் கஷ்டப்பட்டு உழைத்து எனது குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றேன். பிள்ளைகளின் கல்விக்காக இன்று வரை யாரிடமும் கை நீட்டியதுமில்லை கடன் கேட்டதுமில்லை. எல்லாப் புகழும் இறைவனுக்கே. வருமானம் மட்டும் இருந்தால் போதுமா? குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எனக்கு இருப்பதை உணர்ந்தேன். இவ்வுலக வாழ்வில் எனது சொத்து நான் பெற்ற பிள்ளைகள்தானே.

என்னுயிரைவிட கணவரை மேலாக நேசித்தேன். பலரை எதிர்த்துத் திருமணமும் செய்தேன். திருமணம் நடந்த மறுதினமே சுவீட் செய்கின்ற அடுப்பங்கரையை நாடியவள் நான். காரணம் அவரை நான் திருமணம் செய்யும் போது எந்தத் தொழிலும் இல்லாததால். எனது தந்தையின் தொழிலான இத்தொழிலுக்குள் என்னை முழுமையாக நுழைத்துக் கொண்டேன்.

**03. தொழில் பணிகள், குடும்பப் பணிகள் என இரண்டையும் திறம்படச் செய்வது எப்படிச் சாத்தியமானது?**

இவ்விரு பணிகளில் எனக்கு நேர முகாமைத்துவம் என்கின்ற அம்சம் மிகவுமே கை கொடுத்தது எனலாம். நாளை என்ன வேலைசெய்ய வேண்டும் என்பதை இன்றிரவே குறிப்பெடுத்தல். அதனை ஒவ்வொன்றாக ஒழுங்குபடுத்தல் முடியக் கூடியவற்றை முதலில் செய்தல். செய்வதை பிரயோசனமானதாக வரையறை செய்தல். குறிப்பிட்ட வேலையை இவ்வளவு நேரத்தில் செய்து முடித்தல் என்கின்ற நேர வரையறை. என்னுடன் வேலை செய்கின்றவர்கள் பெண்கள் என்பதால் வேலைக்கு வராவிட்டால் அவ்வேலையை சில வேளை நானே செய்து முடிக்க வேண்டிய நிலையும் ஏற்படும். எனது குறிக்கோளை அடைவதற்காக தூக்கம் போன்ற பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. எனக்கு இது ஒரு போர்களமாகத்தான் இருக்கிறது.

**04. சிறியளவில் ஆரம்பித்த உங்களது தொழிலைத் தற்போது வேறு பெண்களையும் இணைத்துக் கொண்டு அவர்களுக்கும் தொழில் வழங்கி செயற்படுவதாக அறிகின்றோம். அதைப்பற்றிக்**

பெண்கள் தங்களது வாழ்...
பல்வேறுபட்ட பின்னடை...
அவர்களைத்தொலைத்த...
இழப்புக்கள் ஏமாற்றங்கள்...
குறிப்பிடலாம் இவ்வாறு...
குறித்த ஏமாற்றத்தை...
வாழ்க்கையில் முன்னேறி...
கைவிடப்பட்ட பெண்ண...
தொழில் முயற்சியாளர் திரு...
சாதனை பெண் பகுதி...
சந்தித்தபோது பகிர்ந்துகொ...





# டாமுயற்சியுமே இரகசியம்

## பதை இன்றே தீர்மானித்துக்கொள்வேன்

**யில் சில சந்தர்ப்பங்களில் ள எதிர்நோக்கி அதனூடாக லாறுகள் அதிகம். இதில் ன நிறைய விடயங்களைக் ழ்க்கையில் ஏமாற்றப்பட்டு லாகக் கொண்டு தனது காண்டிருக்கும் கணவனால் மருதமுனையைச் சேர்ந்த எம்.எஸ்.விஜிதாவை, மே மாத இதழுக்காக பயன்மிக்க விடயங்கள்...**

**கூறுங்கள்.**

சிறியளவில் செய்யும் தொழிலை பெரியளவில் செய்யவே நான் முயற்சி செய்து கொண்டிருக்கின்றேன். எம்மால் முடியும் என்று நினைக்கின்ற ஒரு தொழிலில் இன்னும் பல பெண்களை உள்வாங்கி அவர்களின் வறுமை நிலைக்கு உதவுகின்றோம் என்பதை நினைக்கும் போது ஒரு மன அமைதி கிட்டுகிறது. பல் வேறுபட்ட பிரச்சினைக்குள்ளாக்கப்பட்ட பெண்களை நான் தினமும் சந்திக்கின்றேன். அவர்களுடன் கலந்துரையாடுகின்றேன். அவர்களை ஊக்கப்படுத்தக்கூடிய ஆலோசனைகளை வழங்குகின்றேன். இதுவும் ஒரு வகையான அனுபவம்தான்.

**05. நீங்கள் தற்போது மேற்கொள்ளும் இந்தத் தொழிலில் முன்னேறுவதற்குத் காரணமாய் நின்றவர்கள் யார் என்று கூறமுடியுமா?**

எதிரிகளைக் கற்பனையிலாவது உருவாக்கிக் கொள். தகுதிகள் தானாய் வளர்ந்துவிடும். எனது கணவர் என்னை நிர்ப்பந்த சூழ்நிலையில் விட்டு ஒதுங்கிச் சென்றதுதான் என் முன்னேற்றத்திற்கான முதலாவது உதவி.

எனது முதலாவது மகன் (பொறியியலாளன்) தொழிலை இலகுபடுத்தும் வகையிலான இனிப்புப்பண்ட உற்பத்திக்கான நவீன இயந்திரங்களை எனக்கு அறிமுகப்படுத்தியதோடு அவற்றைக் கையாளும் வழிவகைகளையும் கற்றுத் தந்தார். இவ்வாறு எனது ஒவ்வொரு பிள்ளைகளும் எனது தொழில் முன்னேற்றத்தில் உதவி புரிகின்றனர். பண உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி ஊக்கமளித்த எனது உடன்பிறந்த சகோதரர் எம். எஸ். அப்துர் ரஷீத் அவர் பாரியார் அமீமா, எனது தாயார், மற்றும் பாடசாலை செல்லும் வயதிலிருந்தே இத்தொழிலை நீதான் மகள் செய்வாய் என்று எனக்கு ஈந்தளித்த காலம் சென்ற எனது தந்தை ஆகியோர் இத்தருணத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டவர்களாவர்.

**06. உங்களுடைய பாதையில் நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள், சவால்கள் என்னென்ன?**

சுமார் 27 வருடங்களாக தொழில் ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும் பல பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்த வண்ணமே இருக்கின்றேன். என்றைக்குமே என்னால் முடியாது என்று நினைத்தில்லை. சிறிய முதலீட்டோடு ஆரம்பித்த இத்தொழிலில் நான் முகம் கொடுத்து வரும் சவால்களில் சமூகத்தினுடைய தர்ம சங்கட நிலைக்குட்படுத்தக்கூடிய பேச்சுக்கள், பொருட்களின் திடீர் விலையேற்ற இறக்கத்திற்கு முகம் கொடுக்க முடியாமை.

**07. உங்களைப் போல் ஆண் துணையின்றிக் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தன்னம்பிகைகையூட்டக் கூடிய ஆலோசனைகள் என்ன?**

ஆணுக்குப்பெண் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். அடுத்தவர்கள் நமக்கு என்ன செய்தார்கள் என்பதை விட அவர்களுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்பதைச் சிந்தியுங்கள். விடா முயற்சியுடையவர்களாக உங்களை மாற்றுங்கள். சுயமாக முடிவெடுக்கக் கற்றுக்கொள்ளுங்கள். எச்சந்தர்ப்பத்திலும் சோர்வடைந்து விடாதீர்கள். முன்னேறிச் செல்லவேண்டிய பாதையை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். எத்தருணத்திலும் இறைவனை மறந்து விடாதீர்கள். வெற்றி நிச்சயம்!!!





# கைவீசம்மா... கைவீசு...

## வறுமை சாதனைக்குத் தடையல்ல

வறுமை, கொடுமை, இயலாமை இவற்றோடு போராடி கல்வியில் சாதிக்கத்துடிக்கும் பெண்களை 'கை வீசம்மா... கைவீசு...' என்னும் பகுதிக்காக இணைத்துக்கொள்கின்றாள் ஒளி அரசி. அந்தவகையில் இம்மாத ஒளி அரசியின் கைவீசம்மா கைவீசு பகுதிக்காக நாம் இணைத்துக்கொள்பவர் தருமபுரம் மத்திய கல்லூரி மாணவியான நாகலிங்கம் தனுஷியா.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தருமபுரம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த இவர் நாகலிங்கம் - தமிழ்ச் செல்வி என்பவர்களின் மகளாவார். சிறுவயது முதல் மிகுந்த வறுமையிலும் பல இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வி கற்றுவந்த இவர் தரம் 01 முதல் தரம் 13 வரை தருமபுரம் மத்திய கல்லூரியில் கல்விகற்று உயர்தரத்தில் 3ஏ சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்ல காத்திருக்கின்றார்.

அகதியாய் வந்த மக்களின் ஆதாரமாய் உருவான இந்தக் கிராமம் இப்போதும் பல பின்னோக்கிய சிந்தனைக்குள் மூழ்கித்தான் கிடக்கிறது. சிலரே இந்தக் கிராமத்தின் தலைவிதியை மாற்றி எழுதும் முயற்சியில் களமிறக்கியுள்ளனர். அந்த வரிசையில் தனுஷியாவும் ஒருவர். வறுமையையும், துயரத்தையும் சவாலாகக் கருதி தனது கல்விப் பயணத்தில் வெற்றிபெற்றுள்ள தனுஷியா, தனது அப்பா, அம்மா, அதிபர், ஆசிரியர்கள், தனது தோழர்கள் அனைவருமே தனது வழிகாட்டிகள் எனக்கூறியுள்ளார்.



நாகலிங்கம் தனுஷியா,
கிளி. / தருமபுரம் மத்திய கல்லூரி, கிளிநொச்சி.

வறுமை என்பது சாதனைக்குத் தடையல்ல என்பதை மனதில் கொண்டு தனது கல்விப்பயணத்தை வீறுடன் மேற்கொண்டு வெற்றி கண்டுள்ள தனுஷியா, பல்கலைக் கழகம் சென்று வணிகப் பிரிவு பட்டதாரியாகி, சிறந்த தொழிலதிபராகப் பெயர் பெற்ற தனது கிராமத்தின் பரிணாமத்தை மாற்றி தொழிற்றுறை வல்லுனர்களைப் பெருக்கவேண்டும் என்பதே தனது இலட்சியம் எனக் கூறியுள்ளார்.

'ஒளி அரசி' அதன் போன்ற இலைமறை காய்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து மக்களின் தோழியாய் மிளிர்கிறாள். அவள் புகழ் என்றும் சிறக்கவேண்டும் என வாழ்த்திய தனுஷியா, தன் வீறுநடையால் புகழ்பெற்று தன் பயணத்தில் கைவீசி நடக்க ஒளி அரசி மனதார வாழ்த்துகின்றாள். ■

**குறிப்பு :** வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இத்தகைய மாணவிகளுக்கு உதவிக்கரம் நீட்ட விரும்புவோர் ஒளிஅரசியுடன் தொடர்புகொள்ளலாம். தொடர்புகளுக்கு : 011 5738855 / 071 8628369.

# மேதைகளின் நகைச்சுவை...

★ கவிஞர் கண்ணதாசன் ஒரு கல்லூரிக் கவியரங்கத்தில் கலந்துகொண்டு கவிதையை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது.

அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடிந்ததும் கரவொலி அடங்க வெகு நேரம் பிடித்தது. கைதட்டல்கள் முடிந்ததும், கண்ணதாசன் சொன்னார், ''இன்று நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதை எழுதிகொண்டு வந்து என்னிடம் காண்பித்தார். அது மிக நன்றாக இருந்தது. எனவே, நான் எழுதிய கவிதையை அவரை வாசிக்க சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன். என் கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு.

ஆக, சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய, சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. என்பதுதான் உண்மை என்று புரிகிறது.''



★ ஒருமுறை ஆபரஹாம் லிங்கன் அவர்களை காண ஒருவர் சொல்லிக் கொள்ளாமல் வந்திருந்தாராம், அந்த நேரம் பார்த்து அவர் வெளியே போயிருக்க, கொஞ்சம் நேரம் காத்திருந்து கடுப்பாகி, வீட்டு வாசலில் கழுதை என்று எழுதி வைத்து சென்றாராம். வந்தவர் யார் என்பதை எழுத்தை வைத்து அறிந்த ஆபிரஹாம் லிங்கன், அடுத்த நாள் அவரை சந்தித்து நேற்று நீங்க எங்க வீட்டுக்கு வந்தீங்க போலிருக்குது, உங்க பெயரை எழுதி வைச்சிட்டு போனீங்க, அதனால யார் வந்தது என்பதை அறிய ரொம்ப வசதியா போச்சு என்றாராம்.






★ ஒருமுறை அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன் தன்னுடைய கண்டுபிடிப்புகள் பற்றிய விளக்கவுரை ஆற்ற காரில் சென்று கொண்டிருந்தார்... ஆனால், உடல்நிலை சரியில்லாததால் சோர்வுற்று இருந்தார். இதைக் கண்ட ஓட்டுநர் மிகுந்த அக்கறையுடன் கேட்டார்.

''அய்யா... இன்றைய நிகழ்ச்சியை ரத்து செய்து விடலாமே...?''

''அது இயலாது டாம்... ஏகப்பட்ட பேர் காத்துக்கொண்டிருப்பார்கள்... அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை...!''

இருந்தாலும் ஓட்டுநருக்கு மனசு தாளவில்லை. ஒரு யோசனை சொன்னார்.

**''அய்யா. ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டீர்களே...? உங்கள் உரைகளை நிறைய கேட்டிருக்கிறேன். இன்று உங்களுக்கு பதிலாக, உங்களுடைய இடத்தில் நான் இருந்து உரையாற்றுகிறேனே...?''**

ஐன்ஸ்டீனுக்கு இந்த யோசனை பிடித்திருந்தது. ஓட்டுநரின் தொப்பியை அணிந்துகொண்டு ஐன்ஸ்டீன் கடைசி இருக்கையில் அமர்ந்துகொள்ள, ஓட்டுநர் மிகுந்த தன்னம்பிக்கையுடன் உரை ஆற்றினார். கூட்டத்துக்கு ஐன்ஸ்டீன் எப்படியிருப்பார் என்று தெரியாததால் ஓட்டுநர்தான் அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன் என்று நம்பினர். இருந்தாலும் திடீரென்று ஒரு எதிர்பாராத சிக்கல் ஒரு பேராசிரியர் வடிவில் கிளம்பயது. அவர் ஒரு விடயத்தைப் பற்றிய சந்தேகத்தை நீண்ட கேள்வியாக கேட்டு விளக்கமளிக்க வேண்டினார். திக்குமுக்காடிய ஓட்டுநர் சட்டென சுதாரித்து சொன்னார்.

''இது மிகவும் சிறிய பிரச்சினை பேராசிரியரே.. இதற்கான விளக்கத்தை கடைசி வரிசை இருக்கையில் அமர்ந்திருக்கும் என் ஓட்டுநரே கூட அளிக்க முடியும்...!''

மனதிற்குள் ஓட்டுநரின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்துகொண்டே ஐன்ஸ்டீன் எழுந்து சென்றார் விளக்கமளிக்க...!



# இஷ்டம் போல் மருந்து, மாத்திரைகள் ‘சுய மருத்துவம்’ பேராபத்தானதே

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்ற முதுமொழிக்கேற்ப வாழ்ந்த காலகட்டங்கள் தொலைந்துவிட்டன. கோடீஸ்வரன்கூட இன்று சர்க்கரை வியாதி முதல் புற்றுநோய் வரையில் பாதிக்கப்பட்டு தான் பெற்ற செல்வத்தை மருந்து மாத்திரைகளில் அதிகமாகச் செலவு செய்து வருவதை நாம் அன்றாட வாழ்க்கையில் கண்கூடாக அவதானிக்கலாம்.

சாதாரணமாக ஒரு மருந்துக் கடைக்குச் (பார்மஸிக்கு) சென்று சில நிமிடங்கள் அங்கு தரித்து நின்று அவதானித்தால், சில உண்மைகள் தெளிவாக விளங்கும். சிலர் தங்கள் இஷ்டம்போல் மருந்து மாத்திரைகளை வாங்கி சாப்பிட்டு தங்களுக்கான சிகிச்சைகளை முடித்துக்கொள்கின்றனர்.

இருமலுக்கு ‘அமாக்ஸிலின்’, சர்க்கரை வியாதிக்கு ‘பென்சிலின்’, வலி நிவாரணிக்கு ‘புரூஃபன்’ என்றும் அன்று டாக்டர் கொடுத்த வயிற்றுவலி மாத்திரை என்றெல்லாம் மாத்திரைகளின் பெயர்களைத் தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொண்டு மருந்துக் கடைக்காரரைக் கேட்க அவரும் உடனே மறு பேச்சின்றி எடுத்துக் கொடுத்துவிடுகின்றார். இந்த நிலைப்பாட்டைக் காணும்போது இந்த எளிய முறையைக் கையாளாது டாக்டரிடம் ‘அப்பொயின்ட்மென்ட்’ வைத்து நேரத்தையும், பணத்தையும் வீண்விரயம் செய்கின்றோமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. ஆனால், டாக்டரைச் சந்தித்து உரிய பரிசோதனைகளைச் செய்துகொண்டு அவரது பரிந்துரை இல்லாமலும், மருந்துச் சீட்டு இல்லாமலும், ஏற்கனவே ஒரு தடவை கொடுத்த மருந்துச் சீட்டை வைத்துக்கொண்டு இஷ்டம்போல் மருந்து மாத்திரைகளை வாங்கி உண்பது மிகவும் ஆபத்தானது என்பதையும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

நோயினால் பாதிக்கப்படும்போது உரிய பரிசோதனைகளின்றி எடுத்துக்கொள்ளும் மருந்து மாத்திரைகளால் பலவிதமான பக்கவிளைவுகளும் ஏற்படும் என்பதையும் மறந்துவிடலாகாது. அதேவேளையில், டாக்டர்களின் பரிந்துரையோடு உட்கொள்ளும் மருந்துகளுக்குக்கூட ‘சைட் எபேக்ட்’ என்னும் பக்கவிளைவுகளும், தலைவலி, வயிற்றுவலி, ஒவ்வாமை (அலர்ஜி) போன்ற பலவித உபாதைகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

எனவே, நோய் நொடிகளுக்குத் தீர்வுகாண உட்கொள்ளும் மருந்து மாத்திரைகளின் பக்க விளைவுகளுக்குக்கூட பிரத்தியேகமான சிகிச்சை பெறவேண்டிய சூழ்நிலையிலும் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

மருந்து மாத்திரைகளை வாங்கும்போது எந்த நோய்க்கு எந்த மாத்திரையை உட்கொள்ளவேண்டும்? இதனால் ஏற்படும் பக்கவிளைவுகள் என்ன? மாத்திரைகளில் காலாவதியாகும் திகதி என்ன?, என்றும் தெரிந்துவைத்தலும் நன்மை பயக்கும். ஒருமுறை டாக்டர் எழுதிக்கொடுத்த அதே மருந்தை அடுத்த தடவையும் காய்ச்சல் வரும்போது நேரடியாக மருந்துக் கடைகளில் வாங்கிப் பாவிக்கும் நிலையும் இன்று அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

‘அன்டிபயாடிக்’ உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி குறையும்போது நோய்க் கிருமிகளின் தாக்கங்களை நிறுத்தி வளரவிடாது தடுத்து கொஞ்சம், கொஞ்சமாகக் கிருமிகளை அழித்து பிரச்சினையைத் தீர்க்கும். ஆனால், எல்லாவிதமான மருந்துகளும் எப்போதும் நோய்களுக்குத் தீர்வுகாணும் வகையில் அமையும் என்று சொல்லிவிடமுடியாது. ஒவ்வொருவரின் உடலிலுள்ள நோய்களின் தன்மைகேற்ப தீவிரமான பரிசோதனைக்குப்

பிறகே மருத்துவர் மருந்துவகைகளை விரிவாக பரிந்துரைத்து மருந்துச்சீட்டை வழங்குவார்.

மருந்துவகைகளை உட்கொள்ளும்போது சிலருக்கு வாய்ப்புண், குடற்புண், எரிச்சல் போன்ற பக்கவிளைவுகள் ஏற்படலாம். மேலும் நமது உடலில் இயற்கையாகவே இருக்கும் நோய் எதிர்ப்புச் சக்தியே பக்றீரியாவை எதிர்த்துப் போராடி நோயிலிருந்து நம்மைப் பாதுகாக்கும். இந்தச் சக்தி குறையும்போதுதான் நோய்த்தடுப்பு நிவாரணிகள் தேவைப் படுகின்றன. மருந்துகளைத் தொடர்ச்சியாக எடுக்கும்போது குறிப்பிட்ட பக்றீரியாக்கள் அந்த மருந்தை எதிர்க்கப் பழகிவிடும். இதனால் தொடர்ந்து எதிர்ப்புச்சக்தியை எதிர்க்க முடியாது போய்விடும். எனவே, அதிகமாகவோ, தொடர்ச்சி யாகவோ மருந்துகளை எடுக்கக்கூடாது.

மேலும், சளி, தடிமல் போன்ற வைரஸ்களுக்கும் தீர்வு கிடைப்பதில்லை. சோர்வு, சமிபாட்டுப்பாதையில் ஏற்படும் நோய்களும் பக்கவிளைவுகளை இந்த மருந்து வகைகள் ஏற்படுத்தும்.

சிறுநீரகப் பிரச்சினைகள் உள்ள வர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள் ஆகியோர் முக்கியமாக டாக்டர்களின் பரிந் துரையின்றி மருந்துக் கடைகளில் மருந்துகளை வாங்கி உட்கொள் வதை கண்டிப்பாக தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இன்று 'வலி நிவாரணி' என் னும் பெயின்கில்லர் அதிக அளவு பாவனையிலிருந்து வருகின்றது. பொதுவாக உடல் ஆரோக்கியத் துக்கு நிறைவான ஓய்வும் ஊட்டச் சத்துமே அருமருந்தாகும். வலி நிவாரணியை அதிகமாக பயன் படுத்துவதால் ஒவ்வாமை, அலர்ஜி, வாந்திபேதி என்று ஆரம்பித்து நரம்புத்தளர்ச்சி, உடலிலுள்ள கழி வுகளை வெளியேற்றும் செயற்பாடு களில் அதிகமாக ஈடுபடுவதன் கார ணமாக சிறுநீரகப் பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கவேண்டியிருக்கும்.

தரமற்ற மருந்து வகைகளும் இக்காலகட்டத்தில் அதிகளவில் உற்பத்திசெய்யப்படுவதுடன், விளம்பரங்களின் கவர்ச்சியால் விற் பனையில் மாற்றங்களை ஏற்படுத்து கின்றன. உரிய வைத்திய நிபுணர் களின் ஆலோசனையின்றி இவற் றைப் பயன்படுத்துவது நல்லதல்ல. குறிப்பிட்ட மருந்துவகைகளை சில மருத்துவ நிறுவனங்கள் சிறந்த முறையில் தயாரித்து வருவதால் வைத்திய நிபுணர்கள் இவற்றை சிபாரிசு செய்வதுண்டு. ஆனால், விற்பனையாளர்கள் வேறு மருத்துவ நிறுவனத்தில் தயாரிக்கும் மருந்துவகைகளை அறிமுகப்படுத்தவும் முன் வருவதுண்டு. ஆனால், வைத்தியரின் அனுசரணையுடன் தர மான மருந்துவகைகள் எவை என்பதை உறுதிப்படுத்திய பின்னரே இவற்றைப் பாவிக்கவேண்டும்.

முக்கியமாக பெண்கள் மாதவிடாய், கர்ப்பம் தவிர்ப்பதைத் தவிர்க்க கர்ப்பக் காலம், பாலூட்டும் காலம் என ஒவ்வொரு காலகட்டத்திலும் எடுத்துக்கொள்ளும் மாத்திரைகள் மட்டிலும் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

சில பெண்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப மாதவிடாய் காலத்தைத் தள்ளிப்போட மாத்திரைகள் எடுத்துக்கொள்வதும் உண்டு. இயற்கைக்கு விரோதமாக இந்தச் செயலை இப்படி தள்ளிப்போடுவது தவிர்க்கப்படவேண்டும். மாதவிடாயைத் தள்ளிப்போடும் மாத்திரையானது உடலில் ஹோர்மோன் செயற்பாட்டை மாற்றியமைத்து நாட்களைத் தள்ளிப்போடும் நிலைமை பொருத்தமான செயற்பாடாகாது. சில பெண்களுக்கு மாதவிடாய் காலநேரங்களில் வலி ஏற்படுவதுண்டு. இது ஒவ்வொருவரின் உடலமைப்புக்கு ஏற்ப இயற்கையாகவே நிகழ்வதுண்டு. இந்த வலியை கூடியவரை பொறுத்துக்கொண்டு மாத்திரைகளைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

தீராத வலி கண்டால் மருத்துவ நிபுணர்களை அணுகி உரிய பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரே மருத்துவ ஆலோச னைப்படி பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும். மருந்துக் கடைகளில் வலி நிவாரணி மாத்திரைகளை வாங்கி உட்கொண் டால் காலப்போக்கில் கருத்தரிப்புப் பிரச்சினை வரை செல்ல வேண்டியிருக்கும். சின்னச் சின்ன காரணங்களுக்காக எடுத்துக் கொள்ளும் மருந்துவகைகள் நாளடைவில் குழந்தை பாக்கியம் இல்லாமை, கருப்பையை நீக்கவேண்டிய நிர்ப்பந்தம், உயிரிழப்பு ஆபத்து என்பன ஏற்படலாம்.

மேலும் குறைபாடோடு குழந்தை பிறக்கவும், கடைசி இரண்டு மாத காலத்தில் குழந்தையின் இதயத்தில் பாதிப்பை

**மனசு பெரிது**
**கட்டணம் சிறிது**

சென்னை மருத்துவ மனை யொன்றில் முப்பது ரூபாய் மட்டுமே அறவிடும் வைத்திய நிபுணர் டாக்டர் நாராயணன் ஓய்வுபெற்ற பின், வழங்கும் சேவை அளப்பரியது. மக்களின் ஆரோக்கியத்துக்கு அவர் வழங் கிய அறிவுரையின் தொகுப்பு இல்லத்தரசிகளின் நலன் கருதி இங்கு பிரசுரமாகின்றது.

ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. அடிக்கடி அதிகமாக காப்பி அருந்தும் பழக்கமுள்ளவர்களுக்கும் கரு கலைய வாய்ப்புகள் உள்ளதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கருத்தடை மாத்திரைகளை எடுப்பதில் தவறு ஏற்படும் பட்சத்திலும் வரும் பாதிப்புகளும் கொஞ்சநஞ்சமல்ல.

**'மருத்துவரின் ஆலோசனை இன்றி' மருந்துகள் பயன்படுத்துவதை முழுமையாக தவிர்க்க வேண்டும்.**

குழந்தைகளின் மருத்துவ விடயத்தில் சுயமருத்துவம், தாமதிக்கப்பட்ட சிகிச்சை எல்லாம் உயிரிழப்பு வரை கொண்டுசெல்லும். வலி நிவாரணி விட்டமின் சத்து நிறை மருந்துவகைகள் மாத்திரைகளையும் பெற்றோர் குழந்தைகளுக்கு இஷ்டம்போல் வாங்கிக் கொடுப்பதால் சளி, காய்ச்சல் போன்ற சிறு பிரச்சினைகளில் ஆரம்பித்து நுரையீரல், மூளைபாதிப்பு வரையில் கொண்டு செல்கின்றது என்பதை எவரும் புரிந்து கொள்வதில்லை.

சுருங்கக்கூறின், நமது ஆரோக்கியத்துக்குத் தேவையான சகலவித விட்டமின் சத்துகளும் அன்றாடம் நாம் உண்ணும் காய்கறிகள், பழங்கள், தானியங்கள், பருப்பு வகைகள் உள்ளிட்ட உணவுவகைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. இதனைவிட ஒருவருக்கு உயிர்ச்சத்துகள் மேலதிகமாகத் தேவைப்பட்டால் மருத்துவர்தான் முடிவுசெய்யவேண்டும். எனவே, மருத்துவரின் ஆலோசனைப்படி குறிப்பிட்டளவில் குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே இதனை உட்கொள்வதால் பாதிப்பு எதுவும் இருக்காது.

அளவுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விட்டமின் சத்துகளை உட்கொள்வதும் ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கும்.

ஒவ்வொருவரும் அன்றாடம் போஷாக்குச் சத்துள்ள உணவுவகைகளை முறையாகத் தொடர்ந்து உட்கொண்டு வந்தாலே அதன்மூலம் கிடைக்கும் விட்டமின்களைக் கொண்டே இறுதி வரை ஆரோக்கியமாக வாழமுடியும். உணவே வாழ்க்கைக்கு அருமருந்தாகும் என்பதில் ஐயமில்லை. வலி நிவாரணி, விட்டமின் மருந்துகளை பெற்றோர் குழந்தைகளுக்கு வாங்கித் தருவார்கள். இது சளி, காய்ச்சல் என்று ஆரம்பித்து நுரையீரல், சிறுநீரகம், மூளை என்று பாதிப்புடன் உயிரிழப்பிற்கும் வழிவகுக்கின்றது.

மருந்து மாத்திரைகள் காலாவதியான மருந்து மாத்திரைகள் தோல் ஒவ்வாமையில் (அலர்ஜி) தொடங்கி அரிப்பு, தடிப்பு, தோல்வீக்கம் உள்ளிட்ட பக்கவிளைவுகள் ஏற்படும். வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, வாய்ப்புண், சமிபாட்டுப் பிரச்சினை, கல்லீரல், சிறுநீரகம், கண் போன்ற உறுப்புகள் பாதிக்கப்படலாம். ■

---

# நீங்கள் நலமா?

**கேள்வி : எனக்கு சிறிது காலமாக எதற்கெடுத்தாலும் பயமாக உள்ளது. வாழ்க்கையே வெறுப்பாக உள்ளது. அடிக்கடி குளிக்கவேண்டும் என்ற உணர்வு மேலோங்குகிறது. தனிமையில் இருக்கவேண்டும் என்று விருப்பமாக உள்ளது. எனது வேலைகள் எதிலும் ஈடுபாடு குறைந்து வருகிறது. தலைசுற்றி மயக்கம் வருகிறது. இதற்கான காரணங்கள் என்ன? இதிலிருந்து மீள்வதற்கு வழிசொல்ல முடியுமா?**

**பதில் :** நீங்கள் தற்போது மனநோயின் ஆரம்ப கட்டத்தில் இருக்கிறீர்கள். பொதுவாக பாதுகாப்பின்மையும் பயமும் சேர்ந்துதான் மனநோயை உருவாக்குகிறது. மனநோயை மாற்றுவது சுலபம். மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை, குற்ற உணர்ச்சிகள், தற்கொலை எண்ணங்கள், வாழ்க்கையில் பிடிப்பின்மை, பதட்டமான மனநிலைகள் காதில் கேட்கும் மாயக்குரல்கள், வேலை, கல்வி போன்றவற்றில் ஈடுபாடின்மை, ஒரே எண்ணம் திரும்ப திரும்ப வந்து போதல், ஒரே காரியத்தை திரும்ப திரும்ப செய்தல் போன்ற மனநிலைகள் உருவாகும். இந்த மனநோயை உளவளத்துணை பெற்றுக்கொள்வதன் மூலம் மாற்றியமைக்க முடியும். மனநோயிலிருப்பவர்கள் தனிமையை தவிர்க்கவேண்டும். நல்ல தூக்கம், நல்ல பொழுதுபோக்கு விடயங்களை மேற்கொள்வது போன்றனவும் ஆன்மிகம், யோகா மூச்சுப்பயிற்சி, போன்ற சிறந்த பயிற்சிகளில் ஈடுபடுவதும் மனநோய்க்கு சிறந்த மருந்தாகும். மனநோய்க்கான காரணிகளை ஆராய்ந்து ஒருவரை அந்த நோயிலிருந்து விடுவிக்க சிறந்த உளவளத் துணை நிபுணரால் முடியும். எனவே, உளவளத்துணையை பெற்றுக்கொள்வதன் மூலம் நீங்கள் அதிலிருந்து மீளமுடியும்.

**கேள்வி : எனக்கு அடிக்கடி வாந்தியுடன் இரத்தம் வருகிறது. உடலின் எடை தொடர்ந்து குறைந்து வருகிறது. எனது உடலில் ஒரு இடத்தில் கட்டி காணப்படுகிறது. பலரும் புற்றுநோயாக இருக்கக்கூடும் என்று பயமுறுத்துகிறார்கள. இது புற்றுநோயா? இதற்கு நான் என்ன செய்யமுடியும் என்று கூறுங்கள்?**

**பதில் :** புற்றுநோய்க்கு பல காரணங்கள் இருக்கின்றன. உடலின் எந்தப்பகுதியிலும் இந்நோய்வரலாம். குணமாகாத புண், இரத்தவாந்தி, இரத்த கசிவு, உடலில் கட்டிகள் தோன்றுதல், கட்டி பெரிதாகுதல், வலியற்ற வீக்கம், திடீரென ஏற்படும் எடை குறைவு, காய்ச்சல், வலியற்ற கட்டிகள், உணவை விழுங்குவதில் சிரமம், திடீரென ஏற்படும் எடை குறைவு, காய்ச்சல், அதிக மலச்சிக்கல், மாதவிடாயின்போது அதிக இரத்தம் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் தோன்றலாம்.

எனினும், உங்களுக்கு ஏற்பட்டுள்ள அறிகுறிகளைக் கொண்டு நீங்களே புற்று நோய் என முடிவெடுத்துவிட முடியாது. தகுந்த மருத்துவரிடம் செல்ல வேண்டும். மருத்துவர் முதலில் புற்றுநோயா என்பதை பரிசோதித்து அறிந்துகொள்வார். உடலில் கட்டி தோன்றியுள்ள இடம், நோய் பரவியுள்ள நிலை, நோயாளியின் வயது, உடலின் நிலை போன்றவற்றை பொறுத்து சிகிச்சையளிப்பார். எனினும் நீங்கள் மனதிலிருக்கும் பயத்தை அகற்றிவிட்டு மருத்துவரிடம் செல்வதே சிறந்தது.

**கேள்வி : எனக்கு தற்போது 18 வயதாகிறது. நான் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கும் மாணவி. படிப்பதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. ஆனால், என்னால் எதனையும் படிக்க முடியவில்லை. எனது நாளாந்த கடமைகளைக்கூட செய்ய முடியவில்லை. இணையத்தளத்துடனேயே இருக்க வேண்டும் என்ற உணர்வே எனக்கு மேலோங்கி காணப்படுகிறது. என்னால் இதிலிருந்து மீள முடியவில்லை. எனது கல்விச்செயற்பாடுகளில் நாட்டம்கொள்ள என்ன செய்யவேண்டும் என்று சொல்ல முடியுமா?**

**பதில் :** நீங்கள் சொல்லும் விடயங்களைப் பார்க்கும்போது நீங்கள் இணையத்தளத்துக்கு அடிமையாகிவிட்டீர்கள் என்பது தெளிவாகிறது. இதிலிருந்து நீங்கள் மீளவேண்டும். அதற்கு நீங்கள் காலை எழுந்தவுடன் நாளாந்த கடமைகளை ஒழுங்காக பட்டியலிட வேண்டும். பட்டியலிட்டபடி அவற்றுக்கான நேரத்தை ஒதுக்கவேண்டும். ஒழுங்கு முறையில் உங்கள் கடமைகளை சரிவரச் செய்யவேண்டும். தற்போதைய தங்களது மனநிலையில் யோகா, மூச்சுப்பயிற்சி போன்றவற்றுக்கும் நேரத்தை ஒதுக்குவது சிறந்தது. அத்துடன் ஆன்மீகத்தின் வழியிலும் தங்கள் மனத்தை செல்லவிடுவது சிறந்தது. நீங்கள் முதலில் இணையத்தள பாவனையினை முற்றாக நிறுத்துதல் வேண்டும். அதற்கு படிப்படியாக உங்களுக்கு நீங்களே பயிற்சி கொடுக்கப்பழக வேண்டும். தற்போதைய உங்களின் நோக்கும் இலக்கும் கல்வி கற்றல் மட்டுமே. உங்களுக்கு எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய தெளிவான சிந்தனை இருக்குமாயின் எந்த ஒரு பொழுதுபோக்கையும் அளவாக மேற்கொள்ளவேண்டும். பொழுதுபோக்கு சாதனங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். நீங்கள் கற்கும் கல்வியே உங்கள் எதிர்காலத்திற்கான அடித்தளம் என்பதை மனதில் கொண்டு கல்வியை கற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி : நான் காதலித்து திருமணம் செய்துகொண்டேன். ஆனால், எனது கணவருக்கும் எனக்கும் எதற்கெடுத்தாலும் பிரச்சினை வருகிறது. எனது கணவர் எதற்கெடுத்தாலும் என்னுடன் முரண்படுகிறார். இதனால் தற்பொழுது மிகவும் மனமுடைந்து தற்கொலை செய்யலாம் போன்ற மன உணர்வில் இருக்கிறேன். நான் எனது கணவரை விவாகரத்து செய்து விடலாமா? இதற்கு ஆலோசனை கூறுங்கள்.**

**பதில் :** உங்களுக்கும் உங்களது கணவருக்கும் சிறந்த புரிதல்கள் இல்லை என்பது தெளிவாகிறது. எனவே முதலில் உங்கள் கணவரையும் அழைத்துக் கொண்டு அமைதியான இடத்திற்கு செல்லுங்கள். அங்கிருந்து இருவரும் மனம் விட்டுப்பேசுங்கள். உங்களது விருப்பு வெறுப்புக்கள் உங்கள் கணவரின் விருப்பு வெறுப்புக்கள் வேறுபட்டு காணப்படலாம். நீங்கள் நினைத்த மாதிரி உங்கள் கணவரின் செயற்பாடுகள் அமையவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது. எனவே, இருவருக்கும் விட்டுக்கொடுப்புக்கள் அவசியமானதாகும். புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் ஏற்பட்டு சிறந்த அன்பு உங்களுக்குள் மலருமாயின் நீங்கள் விவகாரத்து செய்யவேண்டிய அவசியமில்லை. காதலித்து திருமணம் செய்துகொண்ட நீங்கள் பிரிந்து செல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும் நீங்கள் உளவியல் ரீதியாக தாக்கப்பட்டு இருக்கிறீர்கள். உங்கள் கணவரும் உங்களை புரிந்துகொள்ளவில்லை என்பதால் நீங்கள் அவரையும் அழைத்துக்கொண்டு சிறந்த குடும்ப நல ஆலோசகரை அல்லது சிறந்த உளவளத்துணை நிபுணரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது. வாழ்க்கையில் எப்பொழுதும் சிறந்த முடிவுகளை நீங்கள் எடுக்கும்போது சிறந்த எதிர்காலம் உங்களுக்கு உருவாகும். உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. ■

# விவாத மேடை 02 இன் முடிவுகள்

## "பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள், பெருகிவருகின்றனவா? அருகிவருகின்றனவா?"




**பெருகிவருகின்றது என வாதிட்டு பரிசைப் பெறுகின்றார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயூரா மகேஸ்வரன்.**

இன்றைய நவீன உலகில் பெண்களின் முன்னேற்றம் பலதுறைகளிலும் பாரியளவில் வளர்ச்சியடைந்து காணப்பட்டபோதிலும் பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் உலகளாவியரீதியில் அதிகரித்த வண்ணமே உள்ளன என்பதை எவரும் மறுக்கமுடியாது. முக்கியமாக அன்றாடம் தினசரிப் பத்திரிகைகளிலும் ஊடகங்கள் மூலமும் நாளாந்தம் நடைபெறும் வன்முறைச்சம்பவங்கள் உடனுக்குடன் வெளியாவதையும் அவதானிக்க முடிகின்றது. சிறுமிகள் முதல் முதியோர்வரையிலும் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் தாக்கப்பட்டுவருவதை காணும்போது மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கின்றது.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்று நோக்கினால் குடும்ப வன்முறைகள், சமூக வன்முறைகள், பாலியல் வன்முறைகள் எனப் பெண்கள் குடும்பத்திலும், குடும்பத்துக்கு வெளியேயும் மிகவும் கஷ்டப்படுகின்றனர். வன்முறைகளை மேற்கொள்வதற்கான காரணம் கிடைத்து விட்டாலே செயற்பாடுகளும் தொடங்கிவிடும்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் சீதனப் பிரச்சினையால் தடுமாறும் பெண்கள், விதவைகள், அகதி முகாம்களில் வாழும் பெண்கள் என சமூக மட்டப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவர்கள் பகிரங்கமாக வெளிக்காட்டிக்கொள்ளாமல் தமக்குள்ளேயே போட்டு புழுங்கிக்கொள்கின்றனர். வெற்றிபெற்ற பெண்களும்கூட கலாசார பின்னணியில் குடும்பத் தலைவர்கள், அலுவலகத் தலைவர்கள் சமூக மட்டப் பிரச்சினைகள் என்றெல்லாம் தாக்கப்படுகின்றனர். இன்றைய சூழ்நிலைகளுக்கேற்ப சகல துறைகளிலும் சவால்களும், போட்டிகளும் அதிகரித்துள்ளதால் சாதனைகள் பெண்கள் புரிந்தாலும்கூட வேதனையான வன்முறைச் சம்பவங்கள் தொடராமலில்லை.

**வன்செயல்கள் அருகிவருகின்றது என வாதிட்டு பரிசைப் பெறுகின்றார் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த நிலூஷினி சேவியர்.**

சாதனைகள் படைக்கும் பெண்கள் இன்று மனோதிடத்துடனும் தைரியமாக வாழ்க்கையில் காலடி எடுத்து வைப்பதை அன்றாட வாழ்வில் அனுபவ ரீதியாகக் காணலாம். வன்முறைகளையும் கண்டு அவர்கள் துவண்டுவிடுவதில்லை. எதிர்நீச்சல் போட்டு முன்னேறிவருவதால் இன்று வன்செயல்கள் முன்னைய காலகட்டங்களைவிட குறைவாகவே இருக்கின்றன எனலாம்.

பெண்களுக்கெதிரான வன்செயல்களை தடுப்பதற்கு சட்டதிட்டங்களும் இக்காலகட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளமையும் இதற்குக் காரணமாகும். பாதுகாப்புச் சட்டங்களும் உறுதுணைபுரிவதால் வன்முறைகள் குறையத் தொடங்கியுள்ளன. பெண்களைப் பாதுகாக்கும் வகையிலும் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்களுக்கான கலந்துரையாடல்கள், விவாதங்களும் பெண்கள் மட்டத்தில் இடம் பெற்று வருவதை அவதானிக்கலாம்.

கிராமிய மட்டத்தில்கூட பெண்கள் மத்தியில் விழிப்புணர்வும், வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான உழைப்பும் ஏற்பட்டுள்ளதால் குடும்ப மட்டத்திலும், சமூக மட்டத்திலும் ஏற்படும் வன்செயல்களை எதிர்க்க துணிந்துவிட்டனர்.

பெண்கள் இன்று தங்களது அடிப்படை உரிமை, மனித உரிமை என்றெல்லாம் பேசமுன் வந்துள்ளனர். ஒருகாலகட்டத்தில் தாழ்த்தப்பட்டிருந்த பெண்கள் இன்று ஆண்களுக்கு என்றும் சளைத்தவர்கள் அல்லர் என்று பல துறைகளிலும் காலடியெடுத்து வைத்துள்ளதால் அவர்களை விரைவில் எதிர்க்கக்கூடிய மனப்பான்மையும் இன்று அருகிவருகின்றது எனலாம்.

### விவாத மேடை 04 இற்கான தலைப்பு

**"இன்றைய சூழலில் இல்லங்களில் முதியோரைப் பராமரிப்பது சுகமா? சுமையா?"**

**உங்கள் விவாதங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.05.2015**

### விவாத மேடை - 04


முழுப்பெயர் : ........................................
........................................
முகவரி : ........................................
........................................
........................................
தொலைபேசி இல.: ........................................
ஒப்பம் : ........................................

# வண்ணக்கோலங்கள்


அழகு 01

அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் பாடசாலைச் சிறார்களின் கோலப்போட்டியை மனதில் கொண்டும் மாதாந்தம் கோலாகலமாக கோலங்களை வழங்கி மகிழ்கின்றாள் ஒளி அரசி. பார்த்துப் பழகி பாடசாலை மட்டப் போட்டிகளில் பரிசில் பெறுவீர்களாக...


**கிடைப்புள்ளி 16 - 7 வரிசைகள் மேல்புள்ளி 2 இல் முடிவடையும்**




படிநிலை 1



படிநிலை 2





படிநிலை 3




படிநிலை 4

**நேர்ப்புள்ளி 5, புள்ளி 5 வரிசை**








# பறக்கும்போதே விமானத்துக்கு எரிபொருள் நிரப்பலாம்




கண்டம் விட்டு கண்டம் செல்லும் பயணிகள் விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்காகவே குறிப்பிட்ட விமான நிலையங்களுக்குச் சென்று எரிபொருள் நிரப்ப சில மணி நேரங்கள் கால விரயமும், எரிபொருள் விரயமும் ஏற்படுகிறது. இதனை தடுக்க ஐரோப்பிய விஞ்ஞானிகள் குழு ஒன்று குருய்சர் எனேபிளைட் விமான போக்குவரத்து அமைப்பை கண்டுபிடித்துள்ளனர். இதன் மூலம், ஒரு விமானத்தில் எரிபொருள் நிரப்பப்பட்டிருக்கும். அது குறிப்பிட்ட இடங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். பயணிகள் விமானம் வானில் பறந்து கொண்டிருக்கும்போது எரிபொருள் தேவைக்கான அழைப்பை விடுக்கும். உடனே எரிபொருள் நிரப்பப்பட்ட விமானம், டேக் ஆப் செய்து பயணிகள் விமானத்துக்குக் கீழே பறக்கும். அதில் இருந்து பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட tank pump மூலம் பயணிகள் விமானத்துக்கு எரிபொருள் செல்லும். எரிபொருள் நிரம்பியதும் pump நிறுத்தப்பட்டு எரிபொருள் வழங்கும் விமானம் தரையிறங்கிவிடும். இந்த முறை ஏற்கனவே இராணுவத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், இதுவரை பயணிகள் விமானத்தில் பயன்படுத்தப்பட்டதில்லை.

# உலகம் உருவானது எப்படி ? ஆய்வுகள் மீண்டும் ஆரம்பம் !

உலகம் உருவாகியது எப்படி என்பதைக் கண்டறிய ஆரம்பிக்கப்பட்ட பெரிய ஆட்ரான் மோதுவி திட்டத்தின் ஆய்வுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையத்தை ஆதாரமாகக்கொண்டு செய்திகள் வெளியாகியுள்ளன. கடந்த 2008 ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்து - பிரான்ஸ் நாட்டின் எல்லையில் நிலத்துக்கடியில் சுமார் 175 மீற்றர் ஆழத்தில் ஆய்வுப் பணிகள் ஆரம்பமாகின. உலகின் 10 ஆயிரம் இயற்பியல் ஆராய்ச்சியாளர்களை இணைத்து பல ஆயிரம் கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இந்த ஆய்வுத் திட்டம் கடந்த 2012ஆம் ஆண்டின் இறுதியில் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் 2 வருடங்கள் முடிவடைந்து இந்த ஆய்வுத்திட்டம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# துணிதுவைக்கும் ரோபோ




வோஷிங்மெஷினில் துணி துவைப்பதற்குக்கூட நேரமில் லாதவர்களுக்கு உதவும் வில்லோ கேரேஜ் பி. ஆர். 2 என்கிற இந்த ரோபோ. அழுக்குத்துணிகளை கண்டுபிடித்து துவைத்து, உலர்த்தி, அயர்ன் செய்து மடித்து வைத்து விடும். இதை பெர்க்ளி பல்கலைக் கழக மாணவர்கள் வடிவமைத் துள்ளனர்.

# விசிறிகள் இல்லாத பேன்

விசிறிகள் இல்லாமல் பேன் எப்படி இயங்கும்? அப்படியான ஒரு காற்று விசிறியை அறி முகப்படுத்தியுள்ளது டைசன் என்கிற அமெரிக்க நிறுவனம். ஓவல் வடிவில் இருக்கும் இந்த இயந் திரத்தில் சாதாரண மின்விசிறிகளைப்போல இறக் கைகள் கிடையாது. குளிர்ந்த காற்று அல்லது வெப்பமான காற்று இரண்டையும் இந்த இயந்திரத்தின் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். பேன் இயங்கும் சத்தம்கூட கேட்காது.


காற்று வீசும்போது கைகளை குறுக்கே கொடுத்து விடுவோம் என்கிற பயம் இல்லை. தானியங்கி சென்சார் கள் உடனடியாக பேன் இயங்குவதை நிறுத்திக்கொள்ளும்.

மேலும் பிளேடுகள் இல்லையென்பதால் பயமும் இல்லை. சுத்தம் செய்வதும் எளிது. அறையின் வெப்பநிலைக்கு ஏற்ப தானியங்கி ஒன் /ஓப் டைமர் உள்ளதால் நடு இரவில் எழுந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இந்த இயந்திரத்தின் கீழ்ப்பகுதி வழியாக உட்செல்லும் காற்று ஒப்ஷனுக்கு ஏற்ப



குளிர்ந்த காற்றாகவோ, வெப்ப காற்றாகவோ மேற்புறம் மூலம் வெளிவருகிறது.

ஒரே திசையில் குவிந்து வீசுவது போலவோ அல்லது அறை முழுவதும் படர்ந்து வீசுவது போலவோ தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் முடியும்.



# கேஸ் இண்டி கேட்டர்

சிலிண்டரில் சமையல் எரிவாயு தீருவதை உத்தேசமாகத் தான் கணக்கிட முடியும். அதற்கும் தீர்வு கண்டுபிடித்துள் ளனர். சிலிண்டரை வைப்பதற்கு என தாங்கியும், அதனுடன் இணைந்த எச்சரிக்கை கருவியும் சிலிண்டர் தீரும் சமயத் தில் எச்சரிக்கையை மொபைலுக்கு அனுப்பி வைக்கும்.



# ஒரு குழந்தை தாயானது!

வழக்கம் போல் இரவு 10 மணிக்கு கணினி முன் அமர்ந்தான் ரவி. சூடாக பாலை கொண்டு வந்து கொடுத்தாள் அவன் அம்மா.

திருமணமே வேண்டாம் என்று ஒற்றைக் காலில் நிற்கும் மகனைப்பார்த்து ஒரு பெருமூச்சு விட்டு நகர்ந்தபோது,

அம்மா இங்கே வாயேன் என்று கையைப் பிடித்து இழுத்தான் ரவி.

''என்னடா?''

''நெட்டில் இந்தப் படத்தைப் பாரேன்'' என்று காண்பித்தான்.

அது ஓர் அழகான பெண்ணின் படம். மணமகன் தேவை அட்டவணையில் இடம் பெற்றிருந்தது.

வயது 24. கணவனை இழந்தவள். ஒரு வயதில் அழகான ஒரு பெண் குழந்தை உள்ளது. குழந்தையைப் பெண்ணின் பெற்றோர் வளர்த்து கொள்வர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதைப் பார்த்து விட்டு மகனின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் ஒரு வகையான புன்னகை கலந்த திருப்தி காணப்பட்டது.

''ரவி உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்றாள்.

''ம்... பார்க்கலாம்'' என்றான்.

ரவியின் அம்மாவுக்கோ ஒரே சந்தோஷம். ''இரு அப்பாவையும் கூப்பிடலாம்'' என்றாள்.

எத்தனையோ பெண்களின் படத்தைப் பார்த்து

முகம் சுளித்த ரவி, திருமணம் ஆகி ஆறே மாதத்தில் மண முறிவு ஏற்பட்டு நீதி மன்றம் மூலம் விவாகரத்து பெற்றவன். தன் மீது தவறான புகார்களைக் கூறி அவதூறாகப் பேசி அவன் மனதை நோகடித்தவள் கலா. அதனால் ஏற்பட்ட மன விரக்தியில் இருந்தான் ரவி. பெற்றோர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் மறுமணத்திற்கு சம்மதிக்கவில்லை ரவி. அதே சமயம் அவனின் ஒரே அக்கா, அமெரிக்காவிலிருந்து கடந்த மாதம் வந்திருந்தபோது, அவனிடம் பேசி பேசி சம்மதிக்க வைத்திருந்தாள். அதன் பலன்தான் கணினியில் மணமகள் தேவை விளம்பரங் களைப் பார்க்கச் செய்தது அவனை.

அவன் அம்மா லீலாவதி அவன் அப்பாவையும் அழைத்து வந்து காண்பித்தார். இருவருக்குமே திருப்தி ஏற்பட்டது. முகவரியைக் குறித்துக்கொண்டு பெண் வீட்டாருடன் தொடர்புகொண்டார்கள்.

பெண்ணின் பெயர் ஷாந்தினி. அழகான பெயர். அவளும் திருமணமாகி ஆறே மாதத்தில் விபத்து ஒன்றில் தனது அன்பான கணவனைப் பறிகொடுத்தவள். வயிற்றில் வளர்ந்த குழந்தையைப் பெற்றெடுத்து, தகப்பன் முகத்தைக்கூட பார்க்காத தன் அழகான மகளைப் பார்த்து பார்த்து அழுது தீர்த்தாள். ஷாந்தினி பெற்றோருக்கு ஒரே மகள்.

> ஷாந்தினியை அவளது மகள் ''சாந்திமா'' என்று அழகான மழலை மொழியில் அழைப்பாள். தன் மகளைவிட்டு பிரிந்து தனக்கு ஒரு வாழ்க்கை தேவையா என்று சிந்தித்தாள்...

சகல வசதிகளும் உள்ளன. அம்மா டீச்சர், அப்பா வங்கியில் ஆபீசர். மகளின் பரிதாப நிலையைக் கண்ட அவள் அம்மா ஜெயா தன் பணிக்கு விரும்பி ஒய்வு பெற்று மகளின் மகளைத் தன் மகளாகவே பாவித்து நேசித்து வளர்த்தாள். ஜெயந்தினி என்று தன் பேத்திக்குப் பெயர் வைத்தாள். தன்னை அம்மா என்றும் தன் கணவரை அப்பா என்றும் பேத்தியை அழைக்கச் செய்திருந்தாள். மகளிடம் அதிகம் ஒட்டவிடாமல் பேத்தியைப் பார்த்துக்கொண்டார். அதற்குக் காரணம் மகளுக்கு மீண்டும் ஒரு மண வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்ற அவளது ஆசைதான். ஆரம்பத்திலிருந்தே அந்த நோக்கத்திலேயே செயல்பட்டாள்.

தாயின் உள்ளத்தைப் புரிந்துகொள்ளாத ஷாந்தினி பலமுறை அவளிடம் கோபப்பட்டது உண்டு.

''அம்மா. நீங்கள் செய்வது சரியல்ல. என் மகளை என்னிடமிருந்து பிறித்துவிட்டீர்கள். அவள் என்னுடன் படுப்பதே இல்லை. உங்களுடன்தான் படுக்கிறாள். நீங்கள் ஊட்டினால்தான் சாப்பிடுகிறாள்'' என்பாள்.

அம்மா எதையுமே காதில் வாங்குவதில்லை. மகளுக்குப் பலமுறை எடுத்துக் கூறியும், அவள் மறுமணத்திற்கு சம்மதிக்கவே இல்லை. குடும்ப நண்பரான மனநல மருத்துவர் மூலம் கவுன்சலிங் கொடுத்து படாத பாடுபட்டு ஷாந்தினியை மறுமணத்திற்கு சம்மதிக்க வைத்திருந்தனர் அவளது பெற்றோர்.

ஷாந்தினியின் நிலையை அறிந்து ரவியின் பெற்றோர் தங்கள் மகனின் நிலையையும் எடுத்துக் கூறினர்.

ரவி ஒரு கணினி பொறியியலாளர். அவனிடம் எந்த குற்றமும் கிடையாது. நீங்கள் அக்கம்பக்கம் வீட்டாருடன் விசாரித்துக்கொள்ளலாம். நீங்கள் விரும்பினால் என் மகன் உங்கள் மகளுக்கு மறுவாழ்வு கொடுப்பான் என்று தங்கள் விருப்பத்தை தெரிவித்தார் ரவியின் தந்தை.

இரு வீட்டாரும் சம்மதிக்கவே திருமணத்திற்கு நாளும் குறித்தாகிவிட்டது. ஷாந்தினியின் மனநிலையை மாற்றவே

அவளை ஒரு மெட்ரிக் பள்ளிக்கு கணினி ஆசிரியையாக பணியாற்ற அனுப்ப இருந்தார் அவள் தந்தை.

திருமண நாள் குறித்த பின் ஷாந்தினிக்கு ஒரே மனப்போராட்டமாகவே இருந்தது. அவள் மனம் எதிலும் ஈடுபடவே இல்லை. வேலையையும் விட்டுவிட செய்தார்கள் அவள் பெற்றோர். காரணம் ரவி வேலை பார்ப்பதோ பெங்களூரில். இவர்கள் இருப்பதோ சென்னையில். ஷாந்தினி தன் மகளைப் பார்த்து கண்ணீர்விட்டாள்.

அம்மா ஜெயந்தினியைப் பார்க்காமல் என்னால் வாழவே முடியாது என்று கண்ணீர் விட்டாள்.

தாய் அவளை தேற்றினாள். ஷாந்தினியை அவளது மகள் ''சாந்திமா'' என்று அழகான மழலை மொழியில் அழைப்பாள். தன் மகளை விட்டு பிரிந்து தனக்கு ஒரு வாழ்க்கை தேவையா என்று சிந்தித்தாள்.

அம்மா வேண்டாம்மா இந்த கல்யாணம். நான் காலம் முழுவதும் உங்களுடனே இருந்து விடுகிறேன் என்றாள். நான் இருப்பது உங்களுக்குப் பாரமாக இருந்தால் தனியாக என் மகளுடன் வாழ்ந்துகொள்கிறேன் என்றாள்.

மகள் ஜெயந்தினிக்கோ அம்மா தேவையே இல்லை. பாட்டி, தாத்தா இருந்தால் போதும். அவர்களைத்தான் அம்மா, அப்பாவாக நினைத்து ஒட்டிக்கொண்டாள். பாட்டியும் அப்படித்தான் அவளை, தாயைப் போல் பாசத்தை ஊட்டி வளர்த்திருந்தாள். திருமண நாளும் வந்தது.

ரவி- ஷாந்தினி திருமணமும் முடிந்து நான்கே நாட்களில் இருவரும் பெங்களூருக்குக் கிளம்ப வேண்டியிருந்தது. கணவர் ரவி குழந்தையைப் பற்றி ஏதாவது கேட்பாரோ என்று ஷாந்தினி எதிர்பார்த்தாள்.

ரவி குழந்தையை தூக்கிக் கொஞ்சினான்; விளையாடினான். குழந்தையை மணமகளின் பெற்றோர் வளர்த்துக்கொள்வர் என்று அறிவித்துவிட்டதால் ரவியிடம் மீண்டும் குழந்தையை வளர்ப்பது பற்றி பேச்செடுக்கத் தயங்கினாள். அதைப்பற்றி எதுவுமே கேட்கவில்லை.

ரவியும் குழந்தையைப் பற்றி எதுவுமே கேட்கவில்லை. உள்ளுக்குள் அழுது கொண்டிருந்தாள்.

தாய் லீலாவதியோ பேத்தியிடம், ''சாந்திமா ஊருக்குப் போகப் போகிறாள். நீ டாடா கூறுவாயாம்'' என்று கூறி அவளையும் பக்குவப்படுத்திவிட்டாள்.

ரவி, ஷாந்தினியும் ரவியின் பெற்றோருடன் காரில் கிளம்பத் தயாராயினர்.

ரவி, மனைவி ஷாந்தினியின் முகத்தைப் பார்த்தான். வாட்டமுடன் காணப்பட்டாள். ரவியின் மனதிற்கும் மிகவும் கஷ்டமாக இருந்தது. இந்தக் குழந்தை என்ன பாவம் செய்தது தன் தகப்பன் முகத்தைக்கூட பார்க்கவில்லை. தாயையும் விட்டுப் பிரியவேண்டுமா என்று தோன்றியது.

''ரவி, வா இந்த சூட்கேசை எடுத்துக் காரில் வை'' என்றார் அவன் தந்தை.

''சாந்திமா உன் சூட்கேசையும் எடுத்து மாப்பிள்ளையிடம் கொடு'' என்றார் ஷாந்தினியின் தந்தை.

குழந்தை ஜெயந்தினியோ எதையுமே அறியாமல் பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்தது.


ஷாந்தினி கிளம்புவதைக் கவனித்த குழந்தை, திடீரென்று ஓடி போய் ஷாந்தினியின் கைப்பையை எடுத்து வந்து ''சாந்திமா இந்தா உன் ஹாண்ட் பேகை மறந்துட்டியே'' என்று அவளிடம் கொடுத்தது. அவள் பள்ளிக்குப் போகும்போது ஹேண்ட் பேகை மறந்துவிட்டுச் செல்லும் அம்மாவுக்கு அதைக் கொண்டுவந்து கொடுக்கிற வழக்கம்.

ரவியும் ஷாந்தினியும் சேர்ந்து பேக்கை கொடுத்த குழந்தையை வாரி எடுத்தனர். ஷாந்தினி, ஜெயந்தினியை கன்னத்தில் முத்தமிட்டு இறுக அணைத்தாள். ஆனால், குழந்தையோ திமிறிக்கொண்டு கீழே இறங்கி, பாட்டியை நோக்கி ''அம்மா'' என்று ஓடியது.

அவள் கால்களை கட்டிக்கொண்டு பின்புறம் ஒளிந்துகொண்டு தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்து, ''சாந்திமா டாடா'' என்றது மழலை மொழியில். தன் தாயை புகுந்த வீட்டிற்கு வாழ்த்தி அனுப்பிவிட்டு சிரித்து நின்றது அந்தக் குழந்தை, தாயாகி.

# "ஒளி அரசி" குறுக்கெழுத்துப்போட்டி

'ஒளி அரசி' குறுக்கெழுத்துப் போட்டி
இல. 17



போட்டி முடிவு திகதி 25.06.2015

**இடமிருந்து வலம்**

1. மனதை மகிழ்விப்பது
3. சிறையில் வாழ்பவன்
5. இது இருப்பது அவசரத் தேவைக்கும் உதவும்.
6. செய்திகளை அறிய உதவுவது
7. ரோஜாவின் ராஜா என அழைக்கப்பட்டவர்
9. ஏழு வர்ணங்களில் வருவது
10. பெண்
11. ஆட்டின் பெண்ணினம்
12. மணமான பெண்கள் அணிவது
14. நாம் கட்டிக்காக்க வேண்டியது
15. மேடு என்பதன் எதிர்ப்பதம் (குழம்பியுள்ளது)
16. நாடற்றவன்

**மேலிருந்து கீழ்**

2. வாய்பேசாதோரின் மொழி
4. மாற்றம்
5. தசரதனின் மனைவி
6. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள் ஒன்று
8. புத்திரனின் எதிர்ப்பதம்
10. உள்ளம்
11. நறுமணமலர்
12. வாழ் நாள்
16. உழவுக்குப் பயன்படுவது

Be Es En Traders
அச்சக பொருட்களின்
மொத்த விற்பனையாளர்
Tel. +94 11 2348418
அனுசரணை

இல.16 இல் 500/= பரிசு பெறும்
அதிஷ்டசாலிகள்

சி. யசோதா
அம்பன்,
குடத்தனை.

வே. சரஸ்வதி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

டி.ஜோகேந்ராஜா
சரசாலை,
சாவகச்சேரி.

சரியான விடைகளை எழுதி
பாராட்டு பெறுபவர்கள்

அமுதா கிருபாகரன்
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

ச.பரமேஸ்வரி
சதுக்கம் மேற்கு,
மட்டக்களப்பு.

தி.சிதம்பரநாதன்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

எம்.எஸ்.சித்தியும்மா
நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

'ஒளிஅரசி' குறுக்கெழுத்துப்போட்டி
இல. 16






# மே மாத இராசிபலன்

## 01.05.2015 தொடக்கம் 31.05.2015 வரை


**மேடம்**
குடும்பத்தில் அவதானம் தேவை, புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும், ஆரோக்கியம் பாதிப்பு, மந்தநிலை.


**இடபம்**
வீண் பிரயாசை, வாய்த்தர்க்கம், குடும்ப கலக்கம், கடும் யோசனை.


**மிதுனம்**
நண்பர், உறவினர் கலகம், வியாபாரம் மந்த நிலை, கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, அதிக செலவு.


**கடகம்**
குடும்பக்கவலை, புதிய முயற்சிகள் மந்த நிலை இவை வழியால் குரோதங்கள்.


**சிம்மம்**
அவதானம் தேவை, குடும்ப கலகம், எதிர்கால சிந்தனை, உதவிகள் தாமதம்.


**கன்னி**
உடல் நோய் எதிர்பாராத மாற்றம், இரவு பிரயாணங் களைத் தவிர்க்கவும், நிதானித்துக்கதைக்கவும்.


**துலாம்**
மனக்குழப்பம், வியாபாரம் மந்த நிலை, வேலையாட்கள் எதிர்ப்பு, பல விதமான யோசனை.


**விருச்சகம்**
எதிலும் ஏமாற்றம், வாய்த்தர்க்கம், மணக்கிலேசம், வருவாய் குறைவு.


**தனு**
குடும்பக் குழப்பம், தொழில் ஏமாற்றம்.


**மகரம்**
நிதானமாக செயற்படவும், மனைவி வழி கவலை, எதிர்கால குடும்பயோசனை.


**கும்பம்**
கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, வேலையாட்கள் பிரச்சினை, வங்கி நிலை மாற்றம் எதிர்பாராத செலவு.


**மீனம்**
தொழில் நடத்த கஷ்டம், நண்பர்கள், உறவினர்கள் ஏமாற்றம்.

வடமாகாணத்தின் பிரபல ஜனரஞ்சக சோதிடரும் யோகாசன வித்துவானுமாகிய ஜோதிட கலாநிதி **சிவஸ்ரீ. க. கந்தசாமி குருக்கள்,** ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் குடியிருப்பு, வவுனியா.



இவரால் எழுதப்பட்ட யோகாசனக் குறிப்புக்களின் ஒவ்வொரு பயிற்சி நிலைகளும் அதற்கான விளக்கபடங்களும் அடுத்தமாதத்திலிருந்து ஒளிஅரசியில் பிரசுரமாகும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதிய படைப்பாக பேய் விடையங்களை கொண்டுவந்து முன்னணியாக தொலைக்காட்சி அலைவரிசையை உருவாக்க வேண்டும் எனபதற்காக அத்தொலைக் காட்சி நிறுவனத்தில் தொழில் புரியும் நாயகன் ராகவா ராறன்ஸ் சில பேய் சம்பந்தப்பட்ட உண்மை விடையங்களை அறிய விரும்பும் போது சந்திக்கும் பிரச்சினைகள் சம்மந்தப்பட்டதாக அமைகிறது இத்திரைப்படம். இத்திரைப்படத்தில் வரும் கதாநாயகி டாப்சி வழமைபோல் இல்லாது ஒவ்வொரு காட்சிகளுக்கும் வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பில்லி, சூனியம், பேய்க் கதைகள் மீது தமிழர்களுக்கு நம்பிக்கையையும், நம்பிக்கையில்லாதவர்களுக்கு உள்ள ஈர்ப்பையும் மூலதனமாக்குவதில் ராகவா லாரன்ஸுக்கு இணையில்லை. ஆனால், இறுதி காட்சி வரை சீட்டில் உட்காரவைத்து விடுகிறார் லாரன்ஸ். அதுதான் அவரது வெற்றி. பேயென்றாலே வழக்கம்போல பயந்து நடுங்கும் ராகவாவுக்கு, தான் வேலை செய்யும் தொலைக்காட்சி நிறுவனத்தில் வேலை பார்க்கும் டாப்சி மீது ஒருதலையாய் காதல். அந்த டிவி சேனலின் டிஆர்பி ரேட்டிங்கை உயர்த்த, பேய் இருக்கா இல்லையா என்ற ரியாலிட்டி ரேசாவைப் படமாக்க மாமல்லபுரம் கடற்கரைச் சாலை பங்களாவுக்குப் போகிறது டாப்சி, ராகவா குழு. பேயாக ஒருவரை செட்டப் செய்யும் போது, நிஜப் பேயே வந்துவிடுகிறது. அந்தப் பேய் டாப்ஸியின் உடம்பில் முழுமையாக இறங்கிவிடுகிறது. அப்படியே அவரைக் காதலிக்கும் ராகவா உடம்பில் இன்னொரு பேய். இவர்களிடம் மாட்டிக் கொண்டு படாத பாடுபடும் கோவை சரளா, இருவரையும் ஒரு ஆலையத்துக்கு அழைத்துப் போய் பேய் ஓட்ட ஏற்பாடு செய்கிறார்.

ஆலயத்தில் இருக்கும் பாதிரியார்கள் பேயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்போது, அந்தப் பேய்களின் ப்ளாஷ்பேக் விரிகிறது. அதில் ஒன்றல்ல, 5 பேர் அநியாயமாகக் கொல்லப்பட்ட கதை தெரிகிறது. அவர்களைக் கொடூரமாகக் கொன்றவர்களை பழிவாங்கவே இப்போது ராகவா, டாப்ஸி உடம்புக்குள் பேய்கள் வந்திருப்பதாகவும், அதற்கு பாதிரியார் அனுமதிக்க வேண்டும் என்றும் பேய்கள் கெஞ்ச, கருணையோடு பழிவாங்க அனுமதிக்கிறார் பாதிரியார்.

முதல் பாதியில் தன் தாயாரை வாடி போடி என்றழைப்பதெல்லாம் ரொம்பவே நெளியவைக்கிறது. பாத்ரூமுக்கு வாட்ச்மேன் வைத்த வரை ஓகே. ஆனால் ராகவா, மயில்சாமி, மனோபாலா, சாம்ஸ் காட்சி. குடும்ப பார்வையாளர்களை மட்டுமே குறிவைக்கும் ராகவாவிடம் இதை எதிர்ப்பார்க்கவில்லை! இடைவேளை வரை காட்சிக்குக் காட்சி திகிலும் பகீர் சிரிப்பும் கலந்துகட்டி அடிக்கின்றன. இறுதியில் ராகவா லாரன்ஸ் தன் மொத்த வித்தையையும் ஒரு நடிகராக இந்தப் படத்தில் காட்டியிருக்கிறார். போட்ட அத்தனை கெட்டப்புகளுக்கும் கச்சிதமாகப் பொருந்துகிறார் மனிதர். அந்த பாட்டி வேடம். இடைவேளைக்குப் பிறகு வரும் மொட்டை சிவா கலக்கல் என்றால், ஒரே காட்சியாக இருந்தாலும் அந்த திருநங்கையாக வரும் லாரன்ஸ்.. கறுப்பழகு! டாப்சிக்கு இந்தப் படத்தில்தான் நடிக்க ஸ்கோப். சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார். பின்பாதியில் மாற்றுத் திறனாளியாக வந்து மனதை அள்ளுகிறார் நித்யா மேனன். கோவை சரளா வெளுத்து வாங்கியுள்ளார்.

ராஜவேல் ஒளிவீரனின் ஒளிப்பதிவு படத்துக்கு பெரும் பலம். அந்த கடற்கரை சாலைக் காட்சிகள் மிரட்டல். ஆனால், பாடல்கள் எதுவும் மனதில் ஒட்டவில்லை. இருப்பினும் எஸ்எஸ் தமனின் பின்னணி இசை கச்சிதமாக பொருந்தியிருக்கிறது படத்துக்கு. ராகவாவுக்கு மக்கள் ரசனை புரிந்திருக்கிறது. குடும்பத்தோடு ரசிக்கக் கூடிய படம்தான் இது. ■



# குக்கிராமம் நகரமாகிறது

**வவுனியாவிலுள்ள கோதண்டர் நொச்சிக்குளம் என்னும் பழம்பெரும் கிராமத்தின் இளம் பெண்களுடனான மனப்பகிர்வுகள்.**



காடும் காடு சார்ந்த இடமும் என வர்ணிக்கப்படும் நிலத்தைப்போல தோற்றமளிக்கிறது அந்தச் சின்னக் கிராமம். விவசாயத்தைத் தமது தொழிலாகக் கொண்ட இக்கிராமம் பழமைக்கும் புதுமைக்குமிடையில் நர்த்தனம் புரிகிறது. பாரம்பரிய விவசாயக் கிராம மக்களான இவர்கள் தற்போதுதான் மெல்ல மெல்ல நகர்ப்புறத்தை நாடுகின்றனர். ஒருசிலர் அரச பதவிகளிலும் சிலர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிலும் சிலர் ஆடைத் தொழிற்சாலை போன்றவற்றிலும் தொழில்புரிகின்றனர்.

நெற்செய்கை, காய்கறித் தோட்டம், தானியச் செய்கை, குளத்து மீன்பிடி எனத் தமக்கான உணவுத் தேவையை இவர்கள் தன்னிறைவுடன் மேற்கொண்டு வருவது மிகவும் பாராட்டுக்குரிய ஒரு விடயம். பூர்வீக வரலாற்றைக் கொண்ட இக்கிராமத்தின் யுவதியர் குழு ஒன்று தற்கால சமுதாய மாற்றம், பெண்களுக்கான வேலை வாய்ப்பின் அவசியம், பெண்கள் குடும்பத்தைத் தாங்கவேண்டிய விதம், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றின் மூலம் தமது மனச்சிதறல்களை 'ஒளி அரசி' சார்பில் பகிர்ந்துள்ளனர்.

இன்றைய சமுதாய மாற்றம், பெண்கள்



**கிராமமக்களிடையே தன்னம்பிக்கையும் ஆற்றுமையும் அதிகரித்துள்ளது.**

வேலைக்குச் செல்வது பெண்களின் அடிப்படை உரிமைகள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் தொடர்பான உரையாடலே அவர்களுக்குள் இடம்பெற்றன. ஒருவர் இன்றைய கால கலாசார மாற்றம், முகப்புத்தகப் பாவனை என்பவையும் பெண்கள் வேலைக்குப் போவதும் சரியான விடயங்களே எனக் கூறினார். அருகிலிருந்த பெண்கள், பெண்கள் வேலைக்குப் போவது தேவையான ஒன்றே. அதுவே அவர்களுக்கான இருப்பை உறுதிப்படுத்தும். ஆனால், முகப்புத்தகத்தினால் நன்மையை விட தீமையே அதிகமாக உள்ளது என்றனர்.

வேறு சிலர் முகப்புத்தகம் தீமையானதே எனக் கூறிவிட முடியாது. அதனைச் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும் என்றனர். கலாசார மாற்றம் என்பதில் ஆடைகள் விடயத்தை எடுத்துக்கொண்டால், நவீன ஆடைகளை அணிவது தவறல்ல. அடுத்தவர் கண்களை உறுத்தாத வகையில் அணிந்துகொள்ள வேண்டும் என்று ஒருசாரார் கூற, சேலை, சுரிதார் போன்ற ஆடைகளே பெண்களுக்கு அழகு என்றனர் இன்னொரு சாரார்.

வேலைக்குப் போவதனால் தமது குடும்பங்களில் - வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி ஒவ்வொருவரும் கூறிய விடயங்கள்:

★ வேலைக்குப் போவதனால் எமது குடும்பங்களில் வறுமைநிலை இல்லாமல் போயுள்ளது.

★ எமது தேவைகளுக்காக யாரையும் எதிர்பார்த்திருக்கவேண்டிய தேவை இல்லை.

★ பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட சண்டை, சச்சரவுகள் இல்லாமல் போயுள்ளன.

★ நாம் வேலைக்குப் போவதனால் பல நண்பர்களையும், புதிய பல விடயங்களையும் அறிந்துகொள்கின்றோம்.

★ எமது தன்னம்பிக்கை அதிகமாக வளர்ந்துள்ளது.

★ எமது வீடு, எமது கிராமம், எமது நாடு என அனைத்துமே முன்னேற்றம் காண்கிறது.

★ எமது கிராம மக்களிடையே ஒற்றுமை அதிகரித்துள்ளது.

இன்றைய காலத்தில் அதிகரித்துள்ள விவாகரத்து, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்பவற்றுக்கு அடிப்படைக் காரணம், கணவன் - மனைவிக்கிடையே புரிந்துணர்வின்மையே என்றனர். அதுமட்டுமன்றி, வீட்டுச்சுற்றுப்புறம் தாண்டிய பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், அதிகரித்துள்ள மதுபாவனை ஆகியனவும் மேற்படி பிரச்சினைக்கான பிரதான காரணிகளாக அமைகின்றன.

பெண்கள், தமது இருப்பை, தமது கடமையைச் சரியாகச் செய்யவும், தமது அறிவை மேம்படுத்துவதில் அதீத ஆர்வம் காட்டி தரமான நூல்களை வாசித்து அறிவைப் பெருக்கி வீட்டுக்கும் நாட்டிற்கும் கண்களாக விளங்குவதற்கும் 'ஒளி அரசி' போன்ற தரமான சஞ்சிகைகள் பெண்களின் அறிவு மேம்பாட்டிற்கு உதவுகின்றன. அறிவைத் தேடுவதற்கு வயது என்பது ஒரு தடையே இல்லை. எனவே, அனைத்து வயதினரும் தரமான நூல்களை வாசிப்பது அவசியம். ■






**என். நிஷா, கத்தான்குடி.**

**கேள்வி : உண்மையான நட்புக்கு அடையாளம் என்ன?**

**பதில் :** இருவரும் ஒரே இடத்தில் அதிகநேரம் அமர்ந்திருத்தல் அல்லது அதிகநேரம் உரையாடுதல், தனக்கு நடக்கும் எல்லா விடயங்களையும் பகிர்ந்துகொள்ளுதல் தான் நல்ல நட்பு என்றும், ஒரே விஷயத்தைப்பற்றி ஒரே மாதிரியான சிந்தனை செய்வதுதான் சிறந்த நட்பு என்றும் சிலர் தவறாகப்புரிந்து வைத்துள்ளனர்.



உண்மையில் நட்பு என்பது எந்தவொரு தயக்கமோ, பயமோ இன்றி நீங்கள் நீங்களாகவே நடந்துகொள்ளக்கூடிய இடம், எந்தவொரு சூழ்நிலையிலும் ஒருவருக்கொருவர் நலன் விரும்பியாக நடந்துகொள்ளக்கூடிய தன்மைதான் நட்புக்கு அடையாளமாகிறது.


**எஸ். பவித்திரா, மன்னார்.**

**கேள்வி : ஒரு பெண் தன் கணவனிடம் ஒளிவு மறைவின்றி தன்னுடைய இல்லம், நட்பு, அலுவலகம் என்று தான் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களையும் வெளிப்படையாகத் தெரிவிப்பது ஆரோக்கியமானதா? ஆபத்தானதா?**

**பதில் :** உண்மையில் ஆணோ பெண்ணோ தங்கள் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் அத்தனை விடயங்களையும் தன் வாழ்க்கைத் துணையிடம் சொல்லிக்கொள்வதால் மனப்பளு குறைந்து ஒழிவுமறைவின்றி பகிர்ந்துகொள்ளும் மனப்பான்மை வளர்கின்றது. அதனால்தான் எவ்வித தயக்கமுமின்றி நம்மை முழுமையாக ஒப்படைக்கும் இடமாக நம் துணை இருக்கவேண்டும் என விரும்புகின்றோம். ஆனால், எல்லோர் வாழ்க்கையிலும் அப்படியான துணை அமைவது அபூர்வமாகும். ஏனெனில், வளர்ந்த சூழல், தனிப்பட்ட இயல்புகளைப் பொறுத்து அவர்கள் எப்படி விடயத்தை எடுத்துக்கொள்கிறார்கள் என்ற மனப்பான்மையைப் பொறுத்துள்ளது. அதனால் உள்ளார்ந்தம் புரிந்துகொள்ள வேண்டிய விடயங்களை எல்லாம் வாழ்க்கைத்துணையிடம் புரிந்துணர்வைப் பொறுத்தே சொல்வது நல்லது. இல்லையெனில் உள்ள நிம்மதியும் பறிபோய்விடும்.

**ஆர். அருந்ததி, வேலணை.**

**கேள்வி : மனிதனின் உண்மை முகம் எது?**




**பதில் :** எந்த முறையில் பொருள் ஈட்டினாயோ அல்லது புகழ் ஈட்டினாயோ அந்தத்துறையை கழித்து விட்டு மிச்சப்படுத்துவது எதுவோ அது.

**ராணி, கைதடி.**

**குறுங்கதை சொல்ல முடியுமா? அம்மு?**

**பதில் :** ஒரு தடவை கவிப்பேரரசு கூறிய குறுங்கதையொன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

பார்வையற்ற பெண்ணை காதலித்தான் ஒருவன். பார்வை கொடுத்தால் உன்னை மணப்பேன் என்றாள். அவனும் பார்வை கொடுத்தான். கண் திறந்து பார்த்ததும் தன் காதலன் கண் இல்லாதவன் என்பதைக் கண்டு, நான் உன்னை மணக்க மாட்டேன் என்று மறந்துவிட்டாள். காதலன் கண்ணீரோடு முனுமுனுத்தான் என்னை நிராகரித்தவளே என் கண்ணை நிராகரிக்க முடியாதல்லவா?

**ஆரணி, கொழும்பு.**

**கேள்வி : மனித வாழ்வின் அருமை எப்போது தெரியும்?**


**பதில் :** சாவுக்கு நாள் குறிக்கப்படும்போது, இதோ உயிர் போகப்போகிறது என்று தெரிய வரும்போது வாழவேண்டும் என்ற பற்றுதலால் துளிர்விட ஆரம்பிக்கும். மனித முகங்கள் அழகைத் தோன்றும், குற்றப் பட்டியல்கள் குறுகிப்போகும். மனதில் குற்றம் குறைகள் அருகி விசாலமாகும். மேலும் மரணம் தள்ளிப்போயிற்று என்று தெரிந்தவுடனே மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிடும்.


# நகப்பூச்சுகளும் சுத்திகரிப்பும்













முகத்தின் அழகைப் பேணுவதற்குப் பலவகையான கிரீம், முகப்பூச்சுகளைப் பயன்படுத்துவதுபோன்று உள்ளங்கைகளுக்கும், கைவிரல்களுக்கும் மேலதிக கவனம் செலுத்தப்படவும்வேண்டும். கைகளை புதுப் பொலிவுடன் காணவேண்டுமெனில் கிரீம் வகைகளைத் தடவி உலர்ந்த சருமத்தை அகற்றிக்கொள்ளவேண்டும்.

2 தேக்கரண்டி சீனியுடன், ஒரு மேசைக்கரண்டி தேன் சேர்த்து உள்ளங்கைகள், விரல்கள், நக இடுக்குகள் போன்றவற்றில் தேய்த்து உலர்ந்த சருமத்தை கழுவிக் கொள்ளவேண்டும். கொஞ்சம் ஒலிவ் ஓயிலை சூடாக்கி கைகள், நகங்கள் என்பனவற்றில் பூசி மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் கழித்து அழுத்தித் தேய்த்து துடைத்துக் கொண்டால் கரங்கள் புதுப்பொலிவுபெறும்.

புதிதாக நகப்பூச்சு பூசமுன்னர் இத்தகைய அடிப்படை சுத்திகரிக்கும் பயிற்சிகளைச் செய்துகொள்வது அவசியம்.

★ பழைய வர்ணப்பூச்சுகளை அகற்றுதல்.

★ நகங்களை குட்டையாக, அழகாக வெட்டி அரை வட்டவடிவமாக செதுக்கிக்கொள்ளவேண்டும்.

★ மெல்லிய வெந்நீரில் கைகளையும், நகங்களையும் நன்றாக நனைத்து ஊறவிட்டு கழுவித் துடைத்துக் கொள்ளவேண்டும்.


★ கைகளுக்கும், நகங்களுக்கும் கிரீம் வகைகளைப் பூசி துடைத்துக்கொண்ட பின்னரே நகப்பூச்சு களைப் பூசவேண்டும்.

★ நகங்களுக்கு முதலாவது அடிப்படைப்பூச்சை பூச வேண்டும். உலர்ந்ததும் வர்ணப்பூச்சை பூசவேண்டும். இரண்டு தடவைகள் பூசிக்கொள்வது நன்று.

★ வர்ணப்பூச்சு நன்றாக உலர்ந்ததும் இறுதிப்பூச்சை பூசி உலரவிடவேண்டும். 1/2 மணி நேரத்தின் பின்னரே இறுதிப்பூச்சை பூசவேண்டும்.

பூச்சுகள் நன்றாக உலர நான்கு அல்லது ஐந்து மணி நேரம் தேவையாகும்.







ரயில்வே கடவையில் மட்டுமல்ல, வாழ்க்கையின் சிக்கலான நேரங்களிலும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய மந்திர வார்த்தைகள்தான் இவை.

நில், கவனி, செல்!

வினோத்தின் வாழ்க்கை, இந்த வார்த்தைகளால் காப்பாற்றப்பட்டது ஓர் அதிசயம்தான்.

மூன்று வருடங்களுக்கு முன் நடந்த அந்த நிகழ்வுகளை அடிக்கடி நினைத்துக்கொள்வான் வினோத். ஒரு மின்னல் மாதிரி திடீரென்றுதான் அவன் வாழ்வில் நுழைந்தாள் சுஜா.

பிரபல வங்கியின் முக்கிய கிளையின் மனேஜர் வினோத். அழகான பொறுப்பான மனைவி நீலா. பாசத்துக்கும் பந்தத்துக்குமாக இரு பிள்ளைகள். சின்னதாக ஒரு கார். 1,000 சதுர அடியில் சொந்த பிளாட் என்று மற்றவர்கள் பார்த்துப் பொறாமைப்படும் வாழ்க்கை வாய்த்திருந்தது வினோத்துக்கு.

**நில், கவனி, செல்!**

தினம் தினம் அவனுடைய வங்கிக்கு வந்துபோகும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களில் ஒருத்தி சுஜா. லட்சங்களில் பணம் வைப்புச் செய்பவள் என்பதால் அதிகாரியான இவன் அறை வரை வந்து செல்லும் உரிமை பெற்ற மிகச் சில பணக்காரர்களில் ஒருத்தி. கணவர் வளர்ந்து வரும் பிசினஸ் மேன். லட்சங்களில் புரளும் வருமானம். அத்தனை பணத்துக்கும் ஒரே வாரிசாக பள்ளியில் படிக்கும் மகள். பொதுவாக பணக்காரப் பெண்மணிகள், லேடீஸ் கிளப்பிலும் ஷொப்பிங்கிலும் பியூட்டி பார்லரிலும் பணத்தைக் கரைப்பவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது வினோத்தின் அனுபவம் போட்டிருந்த கணக்கு.

ஆனால், வித்தியாசமாக இருந்தாள் சுஜா. கணவர் பிசினஸில் சம்பாதிக்கிற பணத்தை ஷேர்களிலும், மியூச்சுவல் பண்டங்களிலும் முதலீடு செய்து இன்னும் இன்னும் பெருக்குகிற புத்திசாலி அவள். சாதாரண காட்டன் புடவையில் அவள் உலா வந்த இயல்பு. வங்கி பியூனிடமும் அவள் காட்டிய மரியாதை. இவையெல்லாமே அவள்மீது அவனுக்கு நன்மதிப்பை ஏற்படுத்தின. முதலீடுகள் பற்றியெல்லாம் வினோத்திடம் டிப்ஸ் கேட்பதில்தான் அவர்களுடைய நட்பு துவங்கியது. மிக விரைவிலேயே முதலீடுகள் தாண்டியும் பேசத் துவங்கினர் இருவரும்.

அப்படி ஒரு சமயத்தில்தான் தன் அலுவலகத்தில் தனக்கு ஏற்பட்டிருக்கும் பெரியதொரு சிக்கல் பற்றிச் சொல்லிப் புலம்பினான் வினோத். வீட்டுக்குச் சென்ற சுஜா, வினோத்துக்கு ஒரு எஸ்.எம்.எஸ்ஐத் தட்டிவிட்டாள்.

கடவுள் உன்னை மலை உச்சியின் முனையில் கொண்டுபோய் நிறுத்தினால் இந்த இரண்டில் ஏதேனும்



# நந்தவனப் பூக்கள்

## வாழ்க்கை வாழ்வதேற்கே

## பகுதி – 17

(இல்லறவாழ்வின் சந்தோசமான தருணங்களைத் தாங்கிவரும் ரொமான்ஸ்)

நடக்கும். ஒன்று, நீ கீழே விழுகையில் அவர் பிடித்துக் கொள்வார் அல்லது அவர் உனக்கு பறக்கக் கற்றுத்தந்து விடுவார்.

இந்த மெசேஜைத் திரும்பத் திரும்பப் பலமுறை வாசித்தான் வினோத். அவனுக்குள் புது தைரியம் பிறந்தது. பதிலுக்கு நன்றி அனுப்பினான். அப்படித்தான் துவங்கியது அந்த உறவு. ஆனால், ஒருசில வாரங்களிலேயே சுஜாவின் எஸ்.எம்.எஸ்கள் இல்லாத நாட்கள் வினோத்துக்கு வீணான தினங்களாகின.

அடுத்து சுஜாவை நேரில் சந்தித்தபோது அவளிடம் இயல்பாக பேச, பழக முடியாமல் தடுமாறிப்போனான் வினோத். ச்சே... தப்பு இல்லையா. அவங்க இன்னொருத்தர் மனைவி என்ற பல கவசங்களை முன்னால் நிறுத்தி இயல்பாக சுஜாவிடம் பேசத் துவங்கியபோது அவளிடமும் அதே தடுமாற்றத்தை உணர்ந்த கணத்தில் அவன் தனக்குள் விதித்திருந்த சுய கட்டுப்பாடுகள் எல்லாம் காற்றில் பறந்தன.

காதல் பாடல்களெல்லாம் புது அர்த்தம் தந்தன. மனைவியிடம் கூடப் பேசுவதற்கு விஷயங்கள் இல்லாமல் போனது. அதை அடுத்த இரு தினங்கள் தன் மனம் போன போக்கில் அவன் மிதந்துகொண்டிருந்தபோதுதான் 'நில் - கவனி - செல்' என்கிற வாசகங்கள் அவன் கண்களில் பட்டன. அவை அவனுக்கு எதையோ உணர்த்தின.

ஒரு வாகனமே தன் இஷ்டத்துக்கு ஓடமுடியாது. கவனிக்காமல் போனால், பெரும் விபத்து நேரிட்டுவிடும் என்றால், இரத்தமும் சதையுமான தான் இப்படி இன்னொரு பெண்ணின் அதுவும் வேறொருவருடைய மனைவியின் நினைவாக இருப்பது எத்தனை பெரிய அழிவில் தன்னைக் கொண்டு போய் விடும்.

சட்டென்றுதான் சுயநினைவடைந்தான் வினோத். தலையை உலுக்கிக் கொண்டான். இல்லை. இல்லவே இல்லை. குருவிக் கூட்டைப் போன்ற அழகான குடும்பம் எனக்கு இருக்கிறது. என்னை நேசிக்கிற - எனக்காகவே யோசிக்கிற - சின்னச்சின்ன விஷயத்தையும் எனக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்கிற நீலா, கடவுள் எனக்குக் கொடுத்திருக்கும் கொடை. இப்படி ஒரு மனைவி அமையாமல் தத்தளிக்கும் எத்தனையோ பேரைத் தினம் தினம் பார்க்கிறேன். விநாடி நேரத் தடுமாற்றம். கள்ளக்காதலால் மனைவியை வெட்டிக் கொலை செய்த கணவன் என்றும், தற்கொலை செய்துகொண்ட மனைவி என்றும் மொத்தக் குடும்பத்தையும் உலுக்கிப் போட்டதை தினசரிகளில் வாசிக்கிறேன்.

இந்த இனிமையான இல்லறத்தில் எந்தப் புயலும் வீசிவிடக் கூடாது. இந்த அமைதி குலைந்துவிடவே கூடாது. இதோ... நின்றுவிட்டேன். சுற்றிலும் கவனிக்கிறேன்; செல்கிறேன். சரியான பாதையில் என்று தீர்மானித்தேன்.

முதல் காரியமாக மனதைக் கல்லாக்கிக்கொண்டு பழைய சிம் கார்டைத் தூக்கி எறிந்து புதிய சிம் வாங்கினான். போனிலும் நேரிலும் சுஜா தொடர்புகொண்டபோது அவசர வேலை என்று மனதைக் கல்லாக்கிக்கொண்டு புறக்கணித்தான்.

ஆண், பெண் ஈர்ப்பு காய்ச்சல் மாதிரியான நோய் கிடையாது. கொஞ்சம் கொஞ்சமாக மருந்து கொடுத்தெல்லாம் அதைச் சரிசெய்ய முடியாது. நோயின் தீவிரம் அதிகரிக்கத்தான் செய்யுமே தவிர, இம்மியளவும் குறையாது. கண்டுபிடித்த நிமிடத்தில் அறுவை சிகிச்சை செய்து வெட்டித் தூக்கி எறிந்தால் மட்டும்தான் நிம்மதியாக உயிர்வாழ முடியும்.

அதைத்தான் செய்தான் வினோத். "சுஜாவின் மனம் என்னபாடு பட்டிருக்கும்?" என்றொரு கேள்வி எழுந்ததுதான் அவன் மனதில். அதற்கும் அவனிடம் பதில் இருந்தது. அவள் வாழ்க்கையும் தன் வாழ்க்கையும் காப்பாற்றப்படுவதற்காக இந்த நட்பை இழப்பதில் தவறொன்றுமில்லை.

எதையெல்லாம் செய்யவேண்டும் என்பது மட்டுமல்ல, எதையெல்லாம் செய்யக்கூடாது என்பதும்கூட வலிமையான இல்லறத்துக்கு அஸ்திவாரம்தானே.

(தொடரும்...)

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கை முறையும் சுழற்றியடிக்கும் வேலைப் பளுவும் சேர்ந்து கொண்டு தம்பதிகளுக்குள் இருக்கும் நெருக்கத்தை சுருக்குகின்றனதான். பாலைவனத்திலேயே ஒரு சோலை இருக்கும்போது நாம் வாழும் வாழ்க்கைக்குள் பசுமையை இன்னும் கொஞ்சம் கூட்டிக் கொள்ள முடியுமே! அதற்கு வழி காட்டத்தான் இந்தப் பகுதி!

# பெண்களுக்கெதிராக வன்முறை வளர்ச்சியை தூண்டுவது சமூகமா? குடும்பமா?

பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்று நோக்கினால் பொதுவாக வீட்டுச் சூழலில் அல்லது வீட்டுக்கு வெளியே குடும்ப உறவினர்களால் அதாவது, சமூகத்தைச் சார்ந்தவர்களால் புரியப்பட்ட வன்முறைகளைக் குறிக்கின்றது. இந்த வன்முறைகள் உடல்ரீதியான வன்முறைகளாகவும், உளரீதியான வன்முறைகளாகவும் காணப்படலாம். முக்கியமாக உளரீதியான வன்முறைகளே பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

குடும்பப் பெண்களுக்கெதிரான வன்முறைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். வன்முறைகளைத் தாங்கிக்கொள்வதற்கும் மன உளைச்சலிலிருந்து விடுபடுவதற்கும், பெண்கள் விபரீதமான முடிவுகளை எடுக்காது தடுப்பதற்கும், பாதுகாப்பதற்கும் 2005ஆம் ஆண்டு வன்முறை தடுப்புச் சட்டம் உருவாக்கப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும்.


பெண்கள் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும், குடும்பமோ, சமூகமோ ஏதோ ஒன்று அவளது திறமைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாகவே இருக்கும். அதனோடு போராடி வெளியே வருவது சில பெண்களுக்கு மட்டுமே சாத்தியமாகிறது. பலர் போராடும் திறனிழந்து மௌனமாகவே இருந்துவிடுகின்றனர். அதிகரித்துள்ள பெண்களுக்கு எதிராக வன்முறைகளின் வளர்ச்சிக்கு அதிகமான தூண்டுதல் தருவது சமூகமா, குடும்பமா என்னும் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

திருமதி சரோஜா சிவச்சந்திரனின் தலைமையிலான மகளிர் தின நிகழ்வு வவுனியாவில் கொண்டாடப்பட்டது. அன்றைய நிகழ்வில் பங்கெடுத்த பல பெண்களிடம் பெண்கள் தொடர்பான இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது எமக்குக் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் பெண்களின் முன்னேற்றத்துக்கு அதிகம் தடையாக இருப்பது சமூக உறுப்பினரே எனவும், பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகம் மேற்கொள்ளப்படுவது சமூக உறுப்பினர்களாலேயே எனவும், ஆண்களின் அதிகரித்த வன்முறைக்கு காரணம், தாய்மார் ஆண்பிள்ளைகள் மீது காட்டும் அதீத பற்றுதலே எனவும் முடிவானது.


குடும்பங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கும் போது ஆண்களே முன்னிலைப்படுத்தப்படுகின்றனர் என்பதுடன் இன்றைய வன்முறைகளின் பாதிப்பை குறைப்பதற்கு பெண்கள் தற்காப்பு கலை பயிலவேண்டியது அவசியம் என அதிக பெண்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவு தரப்பட்டுள்ளது.

(கீழே கூறியுள்ள ஆய்வுகளின் விபரங்கள் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் சூழ்நிலைகளுக்கேற்ப வழங்கப்பட்டுள்ள கருத்துகளாகும்.)


பெண்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது





பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாக மேற்கொள்ளப்படுவது





மகளிர் தினத்தில் முக்கிய நோக்கம் பெண் விடுதலை பெண் சுதந்திரம் என்றவாறு அமைந்திருக்க அது பூரணமாக கிடைத்ததாக உணர்கிறீர்களா?





பெண்களுக்கெதிராக வன்முறைகளின் அத்திவாரமாக அமைவது ஆண்பிள்ளைகள் மீது அன்னையர் காட்டும் அதீத பற்றுதல் என்பது




குடும்பங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கும்போது முதன்மைப்படுத்தப்படுபவர்கள்




பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் குறைப்பதற்கு தற்காப்பு கலைகள் பயிலவேண்டும் என்பது







# ஊட்டச் சத்துமிக்க சலாது

**தேவையான பொருட்கள் :**

250 கிராம் உருளைக்கிழங்கு
100 கிராம் போஞ்சி
100 கிராம் தக்காளிப் பழம்
100 கிராம் சின்ன வெங்காயத்தாள்
சிறிதளவு மிஞ்சியிலை
உப்பு, கடுகுதூள்
தேன் சிறிதளவு
எலுமிச்சப்பழச்சாறு



**செய்முறை :**

உருளைக்கிழங்கை அவித்து, வட்டவடிவமாக வெட்டிக்கொள்ள வேண்டும். போஞ்சியையும் ஆவியில் வேகவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

வெங்காயம், தக்காளிப்பழம், மிஞ்சியிலை என்பன வற்றை சிறியதுண்டுகளாக வெட்டி உப்பு, கடுகுதூள், தேன், எலுமிச்சம்பழச்சாறு சேர்த்துக்கொள்ள வேண்டும். சுவையான ஊட்டச்சத்துமிக்க சலாது தயாராகிவிடும்.

# கௌபீ சலட்



**தேவையான பொருட்கள் :**

100 கிராம் கௌபீ
100 கிராம் தக்காளிப்பழம்
மெல்லிய பசளியிலைகள்
ஒரு பெரிய வெங்காயம்
ஒரு பூண்டு
2 மேசைக்கரண்டி ஒலிவ்ஆயில்
எலுமிச்சம்பழச்சாறு
உப்பு, மிளகுதூள், சிறிதளவு தேன்.

**செய்முறை :**


கௌபீ கடலையை ஊறவைத்து அவித்து எடுத்துக்கொள்ள வேண்டும். பசளியிலைகளை ஆவியில் வேக வைத்துக்கொள்ள வேண்டும். வெங்காயத்தையும் சிறுதுண்டுளாக நறுக்கி, ஒரு தட்டில் பரவலாகப் போட்டுக்கொள்ள வேண்டும்.

ஒலிவ் ஆயில், எலுமிச்சம் பழச்சாறு, தேன், உப்பு, மிளகுதூள் சேர்த்து நன்றாக கலந்துகொண்டு, சலாது மீது பரவலாக ஊற்றி கலந்துகொள்ள வேண்டும்.

(பச்சைப்பட்டாணி, வேறு எந்தவிதமான கடலை என்றாலும் ஊறவைத்து, அவித்து சலாது செய்யப் பயன்படுத்தலாம். விரும்பினால் சிறிதளவு சீஸ் அல்லது தயிரும் கலந்தகொள்ளலாம்.

# வெட்டுத்துணிகளில் அரிய படைப்புகள்

வெட்டுத்துணிகளைப் பயன்படுத்தி அழகான சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய அரிய படைப்புகளை உருவாக்கிக்கொள்வதால் வீட்டிற்கு தேவையான அலங்காரப்பொருட்கள் கிடைத்துவிடுகின்றன. குசன்வகைகள், மேசை விரிப்புகள், படுக்கை விரிப்புகள் என பல தேவையானப் பொருட்களை நாமே தயாரித்துக் கொள்ளலாம். நாளடைவில் சிறந்த கைத் தொழில்களாகவும் அமைந்துவிடும். சித்திரமும் கைப்பழக்கம் என்பது போல, வீணே தேவைக்கு உதவாது என வீசப்படும் துணிகள் கூட, வரவேற் பறையில் முக்கியமான அலங்காரப்பொருளாக அமைந்துவிடுகின்றது.



வெட்டுத்துணிகளை ஒரே அளவான, அல்லது சித்திர வேலைப்பாடுகளுக்கேற்ப வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். தையலுக்குப் பயன்படுத்தமுன்பு துணிகள் யாவும் சாயம் போகுமா? என்பதைத்தெரிந்துகொள்ள வேண் டும். நீரில் நனைத்து கழுவி உலர்த்திக்கொண்டு நன்றாக அழுத்தி அயன் செய்த பின்னரே, விரும்பியளவில், துணிகளின் அளவுக்கேற்ப வெட்டிக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் கார்டன் துணிகள் (பருத்தித்துணிகள்) பயன் படுத்துவது நன்று, லைனிங் செய்துகொள்வதற் குரிய துணிகளையும் நீரில் நனைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

குசன் கவர்கள் அளவாக வெட்டி, அதன் மேற்பரப்பில் வெட்டித் துணிகளை விரும்பிய வடிவில் பொருத்திக்கொள்ள வேண்டும். குசன் வடிவமைப்பில் பட்டன்கள், மணிகள், முத்துக் களையும் பொருத்தும்போது தனியாக வெட்டிய துணியில் நன்றாக இறுக்கமாக தைத்துக்கட்டுப் போட்டுக்கொண்டு லைனிங் துணியுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.



கோடிட்ட துணிகளை நீளப்பாங்காகவும், குறுக்காகவும் பயன்படுத்தலாம். புள்ளிபோட்ட (டோட்ஸ் துணிகள்) துணிகளை, பலவர்ணங் களில் பயன்படுத்தலாம். இல்லத்தரசிகள் வீணே பொழுதைக் கழிப்பதிலும் பார்க்க கற்பனா சக்திகளுக்கேற்ப விரும்பிய வடிவங்களை பல வர்ணங்களில் கைத்தையல் செய்யும் போது சிறந்த பொழுதுபோக்காகவும் அமைகின்றது. மனதில் நிம்மதியும் ஏற்படுகின்றது.

கொழும்பு மாவட்ட முத்த முன்னணி ஆசிரியர் திரு.பி.அம்பிகைபாகனின் வினாத்தாள்.

# தரம் 5 மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் சிங்கள மொழி பெயர்ப்பு வினாத்தாள்

வினாத்தாள் 1 **2015** நேரம் : 45 நிமிடங்கள்

**கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு வெற்றிடங்கள் இரண்டுக்கும் இடப்படவேண்டிய எண்களைத் தெரிவு செய்க.**

1. 8, 11, 14, 17 ............, 23, 26, ................, 32
   1. 20, 28 2. 20, 30 3. 20, 29.

2. 90, 84, 78, 72, ..........., 60,54 ................. 42
   1. 64, 50 2. 66, 48 3. 44, 64


**தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும். இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?**

3. ஆடு, கமுகு, வேம்பு, பூனை, குதிரை.
   1. ஆடு, பூனை 2. குதிரை, பூனை 3. வேம்பு, கமுகு


4. அன்பளிப்பு , கொடை, தட்சணை, காணிக்கை, ஈகை,
   1. அன்பளிப்பு, காணிக்கை 2. தட்சணை, காணிக்கை
   3. ஈகை, காணிக்கை

5. கதிரை, குதிரை, முதிரை, மரை, மான்.
   1. குதிரை, மரை 2. மரை, மான் 3. கதிரை, முதிரை

6. அகம், மனம், பூமி, வீடு, இல்லம், மனை என்பனவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.
   1. பூமி 2. மனம் 3. மனை


7. 


இவ்வுருவில் எதிரெதிர்ப்பக்கங்களில் இடப்பட்டுள்ள இரு இலக்கங்களையும் கூட்டும்போது 7 விடையாக வரும் வகையில் அமைந்துள்ளன. இதனை ஆக்கிய அட்டைகீலம் தோற்றும் விதம் யாது?





1 2 3


**வினாக்களில் உள்ள நான்கு வடிவங்களில் ஒன்று வித்தியாசமானது. அதனைத் தெரிந்து அதன்கீழ்க்கோடிடுக.**

8. 

1 2 3 4

9. 


1 2 3 4

10. 

1 2 3 4


**பின்வரும் உருக்களின் உள்ளவாறான வடிவங்களை கோடு AB வழியே இரண்டாக மடிக்கும் போது கிடைக்கும் உரு யாது?**

11.



1 2 3

12.



1 2 3

13. பின்வரும் கவிதையின் எட்டு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றை சரியாக ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் விடை யாது?

A. வீரத்திரை கொண்டு விண்ணையடிக்குது
B. சட்டச்சட சட்டச்சடடட்டா - என்று
C. வெட்டியடிக்குது மின்னல் - கடல்
D. கொட்டியடிக்குது மேகம் - கூகூவென்று
E. எங்கனம் வந்ததடா தம்பி
F. விண்ணைக் குடையுது காற்று
Q. எட்டுத் திசையும் அதிர - மழை.
H. தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்

1. C ,A ,D, F ,B ,H ,G ,E 2. A ,B ,C ,D ,H G ,F E

**பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

14. குழந்தைகளை உறங்க வைப்பதற்காக தாய்மாரால் பாடப்பட்ட கிராமியப் பாடல்கள்
(பாரதியார் பாடல்கள், நாட்டார் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள்)

15. ‘சோறு சாப்பிட்டேன்.’ எனும் வாக்கியத்தில் தோன்றா எழுவாய்ச் சொல்லாக வரக்கூடியது.
(நாம், நான், அவன்)

16. ஒரு தடவை தவறு செய்து தண்டிக்கப்பட்டவர் மீண்டும் அத்தவறைச் செய்யமாட்டார். எனும் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழி.

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
2. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
3. கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே.

17. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.

1. HA......R 2. MI......K 3. L I ........ N

18. பின்வரும் சிங்கள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் சொல் விடுபட்டுள்ளது.
அச்சொல்லை வெற்றிடத்தில் எழுதுக. (வாக்கியத்தின் தமிழ்க்கருத்துக்கள் கீழே அடைப்பில் உள்ளன.)

1. அம்மே மட்ட ............................. தென்ன.
(அம்மா எனக்கு சோறு தாருங்கள்.)

2. அய்யா மட்ட பாடம ........................... தென்ன.
(அண்ணா எனக்கு பாடம் சொல்லித்தாருங்கள்)

3. மல்லி செல்லங் கரண்ட ........................?
(தம்பி விளையாடப் போவாமா? )

**தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**

19. இந்து அராபிய எண்களை உரோமன் இலக்கங்களில் எழுதுக.

1. 7 ......................  2. 13 ......................
3. 4 ......................  4. 14 ......................

20. உரோமன் இலக்கங்களை இந்து அராபிய எண்களில் எழுதுக.

1. VI ......................  2. XI ......................
3. IX ......................  3. XIV ......................

21. பின்னங்களை தசம எண்களாக எழுதுக.

1. $\frac{3}{10}$ ......................  2. $\frac{12}{100}$ ......................

3. $\frac{6}{100}$ ......................  4. $\frac{7}{10}$ ......................

22. தசம எண்களை பின்னங்களாக எழுதுக.

1. 0.9 ......................  2. 0.4 ......................

3. 0.08 ......................  3. 0.32 ......................

23. வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.

1.
```
  3  .......  6
  2    4     3
  -------------
  5    9     9
  =============
```


2.
```
  6    8     7
  2    3  .......
  -------------
  4    5     4
  =============
```

**வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

24. இரண்டு எண்களின் கூட்டுத்தொகை 30. அவ்விரண்டு எண்களுக்கிடையிலான வித்தியாசம் 6. எனவே அவ்விரு எண்களும் எவை.? ........................................................................


25. வாழைப்பழமொன்றினதும் கொய்யாப்பழமொன்றினதும் விலை ரூபா.20 /= ஆகும். அதேபோன்ற இரண்டு வாழைப்பழங்களினதும் ஒரு கொய்யாப்பழத்தினதும் விலை ரூபா.34/= ஆகும். எனவே ஒரு வாழைப்பழத்தின் விலை யாது? ........................................................................

26. 586 தேங்காய்களில் 343 விற்கப்பட்டன மீதமுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது? ........................................................................

27. 

இச்சட்டகத்தினுள் இடமிருந்து வலமும் மேலிருந்து கீழும் கருத்துள்ள இரு சொற்கள் ஆக்குக.

28. இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



........................................................................

29. லீப் வருட மாசி மாத 29ந்திகதி வெள்ளிக்கிழமையாயின் அம்மாதத்தில் உள்ள வெள்ளி, சனிக்கிழமைகளின் எண்ணிக்கை யாவை.? ........................................................................

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. இலங்கை ஒரு தீவு. ஏனெனில் நான்கு பக்கங்களும் நீரால் சூழப்பட்டது. யாழ்பாணம் ஒரு குடாநாடு ஏனெனில்.

1. இரண்டு பக்கங்களும் நீரால் சூழப்பட்டது
2. மூன்று பக்கங்களும் நீரால் சூழப்பட்டது
3. கடலுக்கு நடுவில் உள்ளது.

31. தேசப்படங்களில் நதிகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் யாது?

1. பச்சை  2. கறுப்பு  3. நீலம்

32. பழப்புளியினால் எவ்வுலோக வகைப் பாத்திரங்களை மினுக்கினால் பிரகாசமாகும்

1. அலுமினியம் 2. பித்தளை 3. தகரம்

33. களுத்துறை மாவட்டத்தில் கடலுடன் சங்கமிக்கும் நதி எது?

1. மகாவலி கங்கை 2. களனிகங்கை 3. களுகங்கை

34. இலங்கையில் சுதந்திரம் அடைந்த ஆண்டு யாது?

1. 1958 2. 1948 3. 1978

35. இலங்கையின் தேசிய கீதத்தை பாடியவர் யார்?

1. ஆனந்த சமரக்கோன் 2. C. W. W கன்னங்கரா 3. சிறிமாவோ பண்டாரநாயக்க

36. கிறிக்கற் விளையாட்டிற்கான குழு ஒன்றில் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?

1. 11 2. 12 3. 21

37. ஒரு காந்தத்தின் வடமுனையுடன் இன்னொரு காந்தத்தின் எம்முனையை அருகில் கொண்டு சென்றால் தள்ளுதல் ஏற்படும்.

1. தெற்குமுனை 2. மேற்குமுனை 3. வடக்குமுனை.

**நான் கண்ட வீதி விபத்து**

நான் அன்று பாடசாலைக்கு போகும் பாதையில் ஒரு விபத்து நடைபெற்றது. நான் துவிச்சக்கர வண்டியில் பாடசாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்த கார் ஒன்று தீடிரென பிரேக் போடும் சத்தம் கேட்டது. ................

**இதனைத் தொடர்ந்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம்பெறல் வேண்டும் அவ்வாக்கியங்களின் எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)**

38. ..............................................................................................

39. ..............................................................................................

40. ..............................................................................................

## ஏப்ரல் மாத ஒளி அரசியில் வெளியான வினாத்தாளிற்குரிய விடைகள்.


| | | | |
|---|---|---|---|
| 1. 1. பணி | 2. பிணி | 3. இன்னல் | 4. கரங்கள் |
| 2. 1. இயற்கை | 2. சோம்பல் | 3. வழங்கும் | 4. அங்கு |
| 3. 1 | 4. 2 | 5. 2 | 6. 1 |
| 7. 2 | 8. 2 | 9. 3 | 10. 1 |
| 11. E, F / G H | 12. 1 | 13. 2 | 14. 3 |
| 15. 1 | 16. 3 | 17. 2 | 18. 2 |
| 19. 1 | 20. 3 | 21. 4 | 22. 1 |
| 23. 2 | 24. 1 | 25. 2 | 26. 1 |
| 27. 1. தொலைபேசி | 2. நிகழ்ச்சி | 3. கண்ணாடி | 28. ஒட்டகம் |
| 29. யானை | 30. மயில் | 31. - 33. வரை கருத்துள்ள வாக்கியங்கள் | |
| 34. 1 | 35. 2 | 36. 3 | 37. 2 |
| 38. 2 | 39. 1 | 40. 1 | |

**கொழும்பு வலைய சிங்கள முன்னணி ஆசிரியரின் மொழி பெயர்ப்பு வினாத்தாள் பகுதி 11 அடுத்த மாத இதழில் வெளிவரும்.**

இளையோர் பூங்கா

# Good Habits - நற்பழக்கங்கள்

Cover nose while sneezing !




Respect your elders !




Pray to God everyday !




## Nursary Rhymes - பாலர்களுக்கான ஆங்கில பாடல்



### Humpty Dumpty

Humpty Dumpty sat on the wall
Humpty Dumpty had a great fall.
All the kings horses
and all the kings men
Could't put Humpty together again.


### ஹம்டீ டம்டீ

ஹம்டீ டம்டீ சற் ஒன் எ வோல்
ஹம்டீ டம்டீ ஹட் ஏ கிரேட் போல்
ஆல் த கிங்ஸ் ஹோஸஸ்
அன்ட் ஆல் த கிங்ஸ் மேன்
குடுன்ட் புட் ஹம்டீ டம்டீ
டு கேதர் ஏ கேயின்.


### மதிலேறிய முட்டையார்

தமிழ் கருத்து : - ஹம்டீ டம்டீ (முட்டையார்) , மதிலில் ஏறி அமர்ந்தார் ஹம்டி டம்டீ , தவறுதலாக கீழே விழுந்தார். சுக்குநூறாக நொருங்கிய அவரை , அரசர்களும் அவரது குதிரைப் படைகளும் , மீண்டும் ஒன்றாக சேர்க்க முடியவில்லை.

## இரண்டு வயதுக்குட்பட்ட சிறார்களின் கவனத்தைக் கவரும் பயிற்சிகள்




உலர் பொருட்களை பகிர்தல்.




ஆடைகளை மடித்து வைத்தல்.




பின்னிப் பிணைதல்




வர்ணக்கலவை




மரக்கறிகள் வெட்டுதல்




எண் - பலகை



உணவு பரிமாறுதல்



மணிகளைத் தொடுத்தல்



சீராக அடுக்கி வைத்தல்



தானியங்களைப் பகிர்தல்

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மே 2015



விஜயன் ஜீதர்சன்
01 ஆம் திகதி
யாழ்ப்பாணம்



செந்திவேல் லிஸானி
03 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



ஆர். அனஸ்ரீபன்
05 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



பாஸ்கரன் பிரித்திகா
05 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



பிரதீபன் சானுஜன்
06 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



பிரேம்குமார் தேவநிலவன்
06 ஆம் திகதி
அளவெட்டி




தீபன் கஜா
07 ஆம் திகதி
பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.



சிவகுமார் கீர்த்திகன்
10 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



ஜான்ஸன் ஜஸ்மிதா
12 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.




சமிரா. நெக்மனி தெமினி
12 ஆம் திகதி
வத்தளை.



தர்ஷன் அபிஷ்னன்
12 ஆம் திகதி
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.



ஜெயக்குமார் சுஜி
14 ஆம் திகதி
பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.



எ. நிவின்ஸ்
18 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



க. தேவகாணன்
19 ஆம் திகதி
மட்டக்களப்பு.



ராஜேஸ்வரன் ஹரிஸ்பிரசாத்
ஏப்ரல் 19 ஆம் திகதி
எட்மன்டன், லண்டன்.



தயாபரன் சுவர்ஞா
21 ஆம் திகதி
பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.



வி. தருண்
21 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



ஹிதரன். சாருஜன்
25 ஆம் திகதி
வத்தளை.



பிரதீபன் ரிசிகாந்
25 ஆம் திகதி
யாழ்ப்பாணம்.



திலீப்குமார் ரேணுகாதர்ஷி
ஏப்ரல் 28 ஆம் திகதி
மேபீல்ட் வீதி, கொழும்பு - 13.



வவுனியா திருச்சிலுவை கன்னியர் மடம் கனரா முன்பள்ளியில் மே மாதத்தில்
பிறந்த தினத்தைக் கொண்டாடும் மழலைச் செல்வங்கள்.

HAPPY BIRTHDAY


0776567812
KANNA
Baby Needs
IF YOU THINK I'M CUTE YOU SHOULD SEE MY AUNTIE
No: 181. MANNAR ROAD, KURUMANKADU JUNCATION, VAVUNIYA.

GIRI
ELECTRONICS
SUPER MARKET
AMEX
MasterCard
VISA
http://www.girielectronics.lk
Girielectronicslk
o. 286 Kandy Road, Vavuniya.
Tel:0776143500, 0245671354

# BRANAWAN ENTERPRISES

**Concrete paving tiles Manufacturer**


யாழ்ப்பாணம் - வவுனியா - முல்லைத்தீவு






We provide Smooth Finish Interlocking Paving Stones are ozone-friendly solution for entrance, walkways, parking areas, railway platforms, swimming pool decks, & side-walks

Interlocking designed for all kinds of domestic, commercial and heavy traffic areas like Petrol Pumps, Schools, Showrooms, Apartments & Gardens.




எமது தயாரிப்புகள் சிறந்த மூலப்பொருட்களையும் புதிய தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி தரமான முறையில் தயாரிக்கப்படுகின்றது.




யாழ்ப்பாணம்
வவுனியா
முல்லைத்தீவு
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு

**Head Office**
635, Pointpedro Road,
Nallur, Jaffna

**Branch**
Vavuniya
Mulliyawalai & Puthukudiyiruppu

**Hotline**
**077-3818799**

We are committed to product quality and customer satisfaction. As such, we use only the best materials and apply the latest techniques when manufacturing our products...